# எரிசக்தி ஊடாக தேசத்திற்கு வலுவூட்டல்



சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்

# ஆண்டறிக்கை – 2024

# ஆண்டறிக்கை
# 2024

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்





# உள்ளடக்கம்


**நிறுவனம் பற்றிய பொதுநோக்கு**

| | |
|---|---|
| நிறுவனம் பற்றிய தகவல்கள் | 7 |
| தொலைநோக்கு மற்றும் பணி | 8 |
| எம்மைப் பற்றி | 9-10 |
| செயலாற்றுகை சிறப்புக்கூறுகள் | 11 |
| ஒரேபார்வையில் ஆண்டு | 12-13 |
| விருதுகளும் பாராட்டுதல்களும் | 14 |

**எமது தலைமைத்துவம்**

| | |
|---|---|
| தலைவரின் செய்தி | 16-17 |
| முகாமைத்துவப் பணிப்பாளரின் செய்தி | 18-19 |
| பணிப்பாளர் சபை | 20-24 |
| சிரேஷ்ட முகாமைத்துவ அணி | 26-29 |

**முகாமைத்துவ கலந்தாராய்வும் பகுப்பாய்வும்**

| | |
|---|---|
| தொழிற்பாடு சார்ந்த சூழல் | 32-36 |
| நிதியியல் மூலதனம் | 37-39 |
| தயாரிக்கப்பட்ட மூலதனம் | 40-44 |
| மனித மூலதனம் | 45-50 |

**ஆளுகையும் இணங்குவித்தலும்**

| | |
|---|---|
| நிறுவன ஆளுகை | 52-62 |
| இடர்நேர்வு முகாமைத்துவம் | 63-70 |
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 71-73 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை | 74-76 |

**நிதியியல் அறிக்கைகள்**

| | |
|---|---|
| கணக்காய்வு அறிக்கை | 78-85 |
| நிதியியல் நிலைக் கூற்று | 86 |
| அனைத்தையும் உள்ளக்கிய வருமானக் கூற்று | 87 |
| பங்குரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று | 88 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 89 |
| நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 90-112 |
| விரிவான வருமானக் கூற்று | 113-114 |
| ஐந்து வருட நிதியியல் தொகுப்பு | 115 |

# நிறுவனம் பற்றிய தகவல்கள்

**நிறுவனத்தின் பெயர்:**
சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்

**சட்ட வடிவம்:**
1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வியாபாரப் பொறுப்புகளை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் துணைப்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2 ஆம் பிரிவின் (2) ஆம் துணைப்பிரின் (ii) ஆம் பந்தியின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவுசெய்யப்பட்டது.

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:**
எரிபொருள் விநியோக நிலையம், கொலன்னாவ, வெல்லம்பிட்டி, இலங்கை

**தொலைபேசி:** +94 11 2694482 | +94 11 2691643 | +94 11 2532122 | +94 11 2572307
தொலைநகல்: +94 11 2547827
மின்னஞ்சல்: secretariat@cpstl.lk
வலைத்தளம்: www.cpstl.lk

**வரி செலுத்துநர் அடையாள இலக்கம்:** 134011157
**நிதியாண்டு:** சனவரி 01 தொடாக்கம் டிசம்பர் 31 வரை

---

**தலைவர்**
திரு. டி.ஜே.ஏ.எஸ்.டி.எஸ். ராஜகருண

**முகாமைத்துவப் பணிப்பாளர்**
கலாநிதி என்.கே.எம்.சி. நெத்திகுமாரகே

**பணிப்பாளர்கள்**
திரு. டப்ள்யூ.எஸ். ஹேமந்த குமார
திரு. ஆர்.எம்.எஸ்.பீ.எஸ் பண்டார
திரு. தீபக் தாஸ்
திரு. அவினாஸ் சிங்கால்
திரு. சுனில் கே. மஹாராண
திரு. எம்.எம். கிறிஸ்டி டொஸ்
திரு. எச்.ரி.பீ. சந்தன

**தாய் நிறுவனம்**
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**செயலாளர்கள்**
டிலொயிட் கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிரைவட்) லிமிடெட்
இல. 100, பிரேப்ரூக் பிளேஸ்,
கொழும்பு 02.

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**
மக்கள் வங்கி, இலங்கை வங்கி

# தொலைநோக்கு

உலகில் மிகவும் வினைத்திறன்மிக்க பெற்றோலிய களஞ்சிய முனையத் தொழிற்படுத்துநராக திகழ்தல்.

# பணி

பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் வினைத்திறன் என்பன மீதான மையப்படுத்தலுடன் பெற்றோலிய உற்பத்திகளுக்கு தலைசிறந்த களஞ்சியத் தீர்வுகளை வழங்குவதற்கு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் அர்ப்பணித்துள்ளது. அனைத்து எமது பங்தாரர்களுக்கும் உலகத்தரத்திலான தகவல் முறைமைகளை நாம் வழங்கி, நிதியியல் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, ஆரோக்கியம், சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு தரநியமங்களை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கின்றோம். நவீன தொழில்நுட்பங்களை நாம் தொடர்ச்சியாக பின்பற்றுவதன் மூலம் எமது அனைத்து தொழிற்பாடுகளிலும் நாம் புத்தாக்கம், தலைமைத்துவம், மற்றும் வினைத்திறன் என்பற்றை தூண்டுகின்றோம். கடமைப்பொறுப்பு மிக்க, மற்றும் நன்கு பயிற்றப்பட்ட தொழிற்படையொன்றினூடாக எமது வெற்றி இயக்கப்பட்டு, அதி உயர்வான தொழில்சார்பண்பு மற்றும் நேர்மை நிலைநாட்டப்படுகின்றது.

# எம்மைப் பற்றி

## சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தில், நாம் வெறுமனே எரிபொருள் ஏற்பாட்டுச் சேவைகள் வழங்குநர் என்பதற்கும் மேலாக இலங்கையை இயக்குவதிலும், செழிக்கச் செய்வதிலும், இணைத்து வைத்திருப்பதிலும் அமைதியான சக்தியாக விளங்குகின்றோம். ஒவ்வொரு நாளும் நாடு முழுவதும் பெற்றோலியப் பொருட்களின் பாதுகாப்பான பாய்ச்சலை நாம் முகாமைசெய்து, வீடுகளையும், போக்குவரத்து முறைமைகளையும், தொழிற் துறைகளையும், விமான நிலையங்களையும், மின் உற்பத்தி நிலையங்களையும் எரிசக்தி - சரியான நேரத்திலும் விட்டுக்கொடுக்காதும் சென்றடைவதை உறுதிசெய்கிறோம்.

நாட்டின் மத்திய பெற்றோலிய ஏற்பாட்டுச்சேவைகள் மையம் என்ற வகையில் தேசிய மற்றும் சர்வதேச எரிசக்தி பங்குதாரர்களுக்காக எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல், களஞ்சியப்படுத்தல், முகாமை செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றின் முழுமையான பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எமது முன்னேற்றகரமான உட்கட்டமைப்பு, எமது ஆழமாக வேரூன்றிய அனுபவத்துடன் இணைந்து, இலங்கையின் எரிசக்தி சூழலமைப்பில் நம்பகமான பங்காளியாக எம்மை நிலைநிறுத்துகிறது.

பல தசாப்த கால பாரம்பரியம், தேர்ச்சிபெற்ற பணியாளர்கள் மற்றும் புத்தாக்கத்திற்கான வலுவான அர்ப்பணிப்பு என்பவற்றுடன் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் மக்கள், இடங்கள் மற்றும் முன்னேற்றம் என்பவற்றை இணைக்கிறது - வெறுமனே எரிபொருட்களை மாத்திரமன்றி, வளர்சிக்கும், கட்டியெழுப்புவதற்கும், மாறுதலடையச்செய்வதற்கும் சக்தியளிக்கின்றது.

## நாம் என்ன செய்கிறோம்

இரு மூலோபாயமிக்க முனையங்கள் - கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல என்பன பல்வகை எரிபொருள் தரங்களைக் கையாளுகின்றன

- **11 மொத்தச் சாலைகள் -** நாடு முழுவதையும் உள்ளடக்கி பிராந்திய எரிபொருள் களஞ்சியப்படுத்தலை இயலச்செய்கின்றன.
- **பல்வகை உற்பத்தி முகாமைத்துவம் -** பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் விமான எரிபொருள்கள் உட்பட 16 வகையான பெற்றோலியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி கையாளுதல்
- **விமான எரிபொருள் வழங்கல் -** பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் இலங்கை விமானப்படை ஆகியவற்றுக்கு வினைத்திறன்மிக்க விநியோகம்
- **மின்சக்தி துறைக்கான ஆதரவு -** விசேட குழாய்கள் மூலம் முக்கிய அனல் மின் நிலையங்களுக்கு குறைந்த சல்பர் உலை எண்ணெய்யை வழங்குதல்
- **சில்லறை மற்றும் மொத்த விநியோகம் -** அனைத்து துறைகளிலும் 1,000 இற்கும் மேற்பட்ட எரிபொருள் நிலையங்கள், முக்கிய தொழிற்துறைகள் மற்றும் பாரிய அளவிலான நுகர்வோருக்கு சேவையாற்றுதல்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எல்ஐஓசி மற்றும் சர்வதேச எரிபொருள் நிறுவனங்களுடன் நெருக்கமான ஒத்துழைப்பு ஊடாக, சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நாட்டின் எரிசக்தி விநியோகச் சங்கிலியின் உயிர்நாடியாக செயற்படுகின்றது.

## நாம் எங்கு தொழிற்படுகின்றோம்

### முக்கிய முனையங்கள்:

- கொலன்னாவ விநியோக நிலையம் (நகர முனையம், பலவகை உற்பத்திகள்)
- முத்துராஜவெல முனையம் (கடலோர முனையம், அதிக கொள்ளளவைக் கையாளுதல்)

### மொத்தச் சாலைகள்:

அனுராதபுரம் | மட்டக்களப்பு | பதுளை |கொட்டகலை | காலி | மாத்தறை | குருநாகல் | பேராதனை | ஹப்புத்தளை | சரசவி உயன | காங்கேசன்துறை

தேசிய தேவைக்கு விரைவாக பதிலிறுத்தி, அனைத்து மாகாணங்களிலும் விநியோகப் பாய்ச்சல்களை வினைத்திறன் மிக்கவாறு முகாமைசெய்ய இவ்வலையமைப்பு எமக்கு உதவுகிறது.

## நாம் நம்புவது யாது?

### பாதுகாப்பும் நிலைபெறுதன்மையும் முதன்மையானது

நாம் செய்யும் ஒவ்வொன்றிலும் உயர்ந்த சர்வதேச தரநியமங்களுக்கு இசைவாகத் தொழிற்பட்டு, மனிதர்களின், சொத்துக்களின், சுற்றுச்சூழலின் பாதுகாப்பை உறுதி செய்கின்றோம்.

### மனிதர்களால் இயக்கப்படும் வலிமை

ஏற்பாட்டுச் சேவைகள், தொழிற்பாடுகள், பொறியியல் மற்றும் முகாமைத்துவ துறைகளில் நிபுணத்துவம் பெற்ற எமது 2,100 + அர்ப்பணிப்புடன் செயற்படும் நிபுணர்களே எமது தொடர்ச்சியான வெற்றியின் முதன்மைச் சக்தி.

### தூய்மையான எதிர்காலத்திற்கான அர்ப்பணிப்பு

பொறுப்புமிக்க நடைமுறைகளை முன்னெடுத்து, தொழில்நுட்பத்தில் முதலீடுசெய்து, எமது கார்பன் சுவடுகளை குறைக்கும் புதிய வழிகளை தொடர்ச்சியாக நாடுகின்ற அதேவேளை சமூக நலநோம்புகையை அதிகரிக்கின்றோம்.

# எமது வலையமைப்பு



காங்கேசன்துறை
பிரதான முனையங்கள்
மொத்தச் சாலைகள்
அநுராதபுரம்
மட்டக்களப்பு
குருநாகல்
முத்துராஜவெல
பேராதனை
சரசவிஉயன
கொலன்னாவ
கொட்டகல
பதுளை
ஹப்புதலே
காலி
மாத்தறை

# செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்

| | | | 2024 | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிதி மூலதனம் | **உபாய முன்னுரிமை: நிதியியல் வளர்ச்சி** | | | | | | | |
| | வருவாய் | ரூ. மில். | 18,899 | 10,150 | 9,433 | 14,276 | 13,568 | 15,340 |
| | தொழிற்பாட்டு இலாபம் | ரூ. மில். | 4,664 | (621) | (989) | 1,377 | 1,906 | 1,966 |
| | வரிக்கு முன்னர் இலாபம்/ (நட்டம்) | ரூ. மில். | 4,998 | (314) | (704) | 1,578 | 2,215 | 2,289 |
| | வரிக்கு பின்னர் இலாபம்/ (நட்டம்) | ரூ. மில். | 3,381 | 37 | (1,059) | 1,169 | 2,001 | 1,305 |
| | பங்குரிமை மூலதனம் மீதான ஆதயம் | % | 7% | 0.1% | -4% | 4% | 7% | 5% |
| | **நிதியியல் உறுதிப்பாடு** | | | | | | | |
| | மொத்த சொத்துகள் | ரூ. மில். | 61,285 | 32,228 | 33,481 | 33,999 | 32,588 | 31,522 |
| | மொத்த பொறுப்புகள் | ரூ. மில். | 14,436 | 5,747 | 6,252 | 5,999 | 5,369 | 5,773 |
| | பங்குதாரர் நிதியம் | ரூ. மில். | 46,849 | 26,481 | 27,229 | 28,000 | 27,218 | 25,749 |
| | காசு மற்றும் காசுக்கு சமனானவை | ரூ. மில். | 4,329 | 1,113 | 2,006 | 2,257 | 3,442 | 3,999 |
| | **பங்குதாரர் தகவல்கள்** | | | | | | | |
| | ஒரு பங்கிற்கான உழைப்பு | ரூ. | 4.51 | 0.05 | (1.41) | 1.56 | 2.67 | 1.74 |
| | ஒரு பங்கிற்கான பங்கிலாபம் (கொடுப்பனவுசெய்யப்பட்டது) | ரூ. | - | 0.48 | - | - | 0.48 | 0.30 |
| | ஒரு பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி | ரூ. | 63 | 35 | 36 | 37 | 36 | 34 |
| தயாரிக்கப்பட்ட மூலதனம் | **உபாய முன்னுரிமை: தொழிற்பாட்டு உன்னதம்** | | | | | | | |
| | **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | | | | | | | |
| | முனையங்கள் மற்றும் சாலைகள் | எண். | 13 | 13 | 13 | 13 | 13 | 13 |
| | மூலதனச் செலவினம் | ரூ. மில். | 1,298 | 157 | 925 | 1,358 | 1,085 | 981 |
| மனித மூலதனம் | **உபாய முன்னுரிமை: மக்களில் முதலிடுதல்** | | | | | | | |
| | மொத்த ஊழியர்கள் | எண். | 2,225 | 2,299 | 2,474 | 2,629 | 2,766 | 2,856 |
| | பெண்கள் பிரதிநிதித்துவம் | எண். | 297 | 288 | 308 | 343 | 321 | 326 |
| | ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | ரூ. மில். | 6,348 | 6,361 | 6,745 | 6,908 | 5,918 | 6,636 |
| | ஊழியர் ஊதிய வீதம் | % | 7% | 7% | 6% | 6% | 4% | 5% |
| | பயிற்சியில் முதலீடுகள் | ரூ. மில். | 6 | 4 | 2 | 3 | 4 | 17 |
| | மொத்த பயிற்சி மணித்தியாலங்கள் | மணி. | 5,680 | 4,863 | 5,006 | 3,806 | 6,245 | 9,706 |
| | ஊழியரொருவருக்கான சராசரி பயிற்சி மணித்தியாலங்கள் | மணி. | 8 | 5 | 8 | 4 | 6 | 5 |
| | ஊழியரொருவருக்கான வருவாய் | ரூ. மில். | 8.49 | 4.41 | 3.81 | 5.43 | 4.91 | 5.37 |
| | ஊழியரொருவருக்கான தேறிய இலாபம் (நட்டம்) | ரூ. மில். | 1.52 | 0.02 | (0.43) | 0.44 | 0.72 | 0.46 |
| | மறைமுக ஊழியர் (அண்ணளவாக) | எண். | 56 | 53 | 70 | 75 | 61 | 71 |
| சமூக மற்றும் உறவு மூலதனம் | நிறுவன சமூக பொறுப்புகளில் முதலீடு | ரூ. மில். | 4 | 1.7 | 0.3 | 6.5 | 1.7 | 3.8 |
| | பயன்பெறுனர்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) | எண். | 8,950 | 1,034 | 775 | 8,600 | 4,000 | 8,800 |
| | அரசாங்கத்திற்கான பங்களிப்பு | ரூ. மில். | 2,761 | 1,408 | 1,796 | 1,608 | 1,683 | 2,441 |
| இயற்கை மூலதனம் | **உபாய முன்னுரிமை: நிலைபெறுதன்மை** | | | | | | | |
| | வலுச்சக்தி நுகர்வு | கிவோம | 4,683,218 | 4,504,889 | 4,717,569 | 5,342,888 | 5,602,794 | 6,360,903 |
| | நீர் நுகர்வு | கி லீ | 177,054 | 182,354 | 204,872 | 280,239 | 270,023 | 299,011 |
| | கசடு அகற்றல் | கி லீ | - | - | 99.6 | 32.4 | 244.2 | 118.8 |

# ஒரேபார்வையில் ஆண்டு

**விற்பனை அளவு 4,404,557 கி லீ**

**வருவாய் ரூ.18.9 பில்லியன்**

**சொத்துத் தளம் ரூ.61 பில்லியன்**

**வரிக்குப் பிந்திய இலாபம் ரூ.3.4 பில்லியன்**

வருவாய் மற்றும் மொத்த இலாப எல்லை போக்கு (ரூ. மில்)




விற்பனை அளவு (கி.லீ. மில்)




வரிக்கு முந்திய மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் (ரூ. மில்)




பங்குரிமை மூலதனம் மீதான ஆதாயம் %



தொழிற்பாட்டுச் செயலாற்றம்




மொத்த சொத்து வளர்ச்சி (ரூ. மில்)




நடைமுறை/துரித சொத்து விகிதம்(தடவைகள்)




பங்கொன்றுக்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ.)




சொத்து புரள்வு விகிதம்




கடன்பெற்ற நிதியத்திற்கான பங்குரிமை விகிதம் (தடவை)



# விருதுகளும் பாராட்டுதல்களும்






**சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் Best Management Practices Company Awards 2024 நிகழ்வில் சிறப்பிடம் பிடித்தது.**

இலங்கை பட்டய தொழில்சார் முகாமைத்துவ நிறுவனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட (CPM Sri Lanka) நடாத்திய சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் கம்பனி விருதுகள் 2024 நிகழ்வில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மின்ல் லிமிடெட் வெற்றிபெற்றதை அறிவிப்பதில் நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். உன்னதத்திற்கும் புத்தாக்கத்திற்குமான எமது அர்ப்பணிப்பு மூன்று கௌரமிக்க விருதுகளைப் பெற்றதன் மூலம் பிரகாசமாகத் திகழ்கிறது:

விநியோகம் மற்றும் போக்குவரத்து முகாமைத்துவத்தில் எமது வினைத்திறனையும் புத்தாக்கத்தையும் அங்கீகரித்து

🏆 **வகை வெற்றியாளர்:** கப்பல் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டுச்சேவைகள்

நாட்டின் எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் எமது நிலைபேறான தீர்வுகளை எடுத்துக்காட்டி

🏅 **திறமை விருது:** மின்சக்தி மற்றும் எரிசக்தி

பொதுத்துறை நிறுவனங்களுக்கான எமது தனிப்பட்டதேவைக்கேற்றவாறான தீர்வுகளையும் புதிய பங்குடமைகளை பேணிவளர்ப்பதையும் கௌரவித்து

🎖 **அங்கீகாரச் சான்றிதழ்:** அரசாங்க மற்றும் அரசுசார் நிறுவனங்கள்



# எமது தலைமைத்துவம்



# தலைவரின் செய்தி

"உண்மையான மாற்றத்திற்காக தரவுகளால் இயக்கப்படும் முறைமை"



மிகுந்த பொறுப்புணர்வுடன் 2024 ஆம் ஆண்டிற்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்கின்றேன். இவ்வாண்டை நாம் பிரதிபலிப்பது போன்று 2024 ஆம் ஆண்டானது தேசிய எரிபொருள் விநியோகத்தராக எமது தாக்குப்பிடிக்கும் தன்மையைப் பரீட்சித்த மற்றும் இலங்கையின் சக்தி தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான எமது கடமைப் பொறுப்பினை மீள உறுதிப்படுத்திய நேரத்தில் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் இரண்டையும் கொண்ட காலப்பகுதியாக அமைந்தது.

2024ஆம் ஆண்டில் நாம் எமது உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துவதில் கணிசமாக முதலீடு செய்தோம். எமது குழாய்த்தொகுதிகள், களஞ்சிய வசதிகள் மற்றும் தன்னியக்கச் செயன்முறைகள் என்பவற்றுக்கு நாம் தொடர்ச்சியாக இன்றியமையாத தரமுயர்த்தல்களை முன்னெடுத்த அதேவேளை, உயர்வான பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் தரநியமங்களையும் பேணினோம். இம்முதலீடுகள் தொழிற்பாட்டு சார்ந்த தொடர்ச்சிக்காக அத்தியாவசியமானவை மாத்திரமின்றி நிறுவனத்தை எதிர்காலத்திற்கு தயாரான சக்தி எற்பாட்டுச் சேவை தொழில்முயற்சியொன்றாக மாறுதலடையச் செய்யும் நீண்டகால தொலைநோக்குடனும் அணி சேர்ந்திருந்தன.

டிஜிட்டல் மாறுதலூடாக தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துதல் எமது முக்கிய சாதனைகளிலொன்றாக திகழ்ந்தது. கையிருப்பு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு நாம் தரவினால் இயக்கப்படும் முறைமைகளை மேற்கொண்டு, சான்று அடிப்படையிலமைந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கான வெளிப்படைத் தன்மையையும் ஆதரவையும் அதிகரித்தோம். இலங்கையின் பொருளாதர மீட்சி மற்றும் வளர்ச்சியுடன் கூடிய சுழற்சியில் அதிகரிக்கின்ற சக்திக்கான கேள்விகளை நிறைவுசெய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றமையினால் அத்தகைய முயற்சிகள் இன்றியமையாதவையாக காணப்படுகின்றன. மேலும், தேசிய சக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தில் அனைத்து துறைகளுக்கும் நிலையான நம்பகமான எரிபொருள் வழங்கலை உறுதிசெய்வதற்கும் முக்கிய பங்குடமையாளர்களுடன் குறிப்பாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் லங்கா ஐஓசி போன்றவற்றுடன் தொடர்ந்தும் நாம் நெருங்கிப் பணியாற்றினோம்.

உன்னதத்தை அடைவதற்காக அவர்களது உறுதியான கடமைப் பொறுப்பிற்காக எமது அர்ப்பணிப்பு மிக்க முகாமைத்துவ அணி, ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பவற்றுக்கு எனது உண்மையான நன்றியினை தெரிவிக்க விரும்புகின்றேன். அவர்களது தாக்குப்பிடிக்கும் தன்மை, தொழில்சார்பண்பு மற்றும் ஆர்வம் என்பன கேள்விமிக்க ஆண்டில் எமது இலக்குகளை அடைவதில் ஏதுவாக அமைந்துள்ளன.

2025 ஆம் ஆண்டினுள்ளும் அதனைத் தாண்டியும் நாம் நகர்வதனால் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்டானது மாறுதலடைகின்ற தேசமொன்றின் தேவைகளை நிறைவு செய்வதற்கு எமது உட்கட்டமைப்புகளை வலிமைப்படுத்தி, எமது போட்டித்தன்மையினை விரிவுபடுத்தி, எனது சேவைகளுக்கு புத்தாக்கத்தை மேற்கொள்வதன் மீது கவனம் செலுத்தியதாக காணப்படுகின்றது. ஒன்றாக இணைந்து நாம் எமது சக்தி வளங்கள் சங்கிலி பாதுகாப்பானதாக, வினைத்திறன் மிக்கதாக, எதிர்காலத்திற்கு தயாரானதாக இருக்கின்றதென்பதனை உறுதி செய்வோம்.

**திரு. டி.ஜே.ஏ.எஸ்.டி.எஸ். ராஜகருண**
**தலைவர்**

# முகாமைத்துவப் பணிப்பாளரின் செய்தி

"வினைத்திறன், தரம் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைக் கொண்ட உத்தரவாதத்துடன் கூடிய நிலைபேறான எதிர்காலம்"



எமது தொழிற்பாடுகளில் வினைத்திறன், தரம் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றுக்கான எமது அசைக்கமுடியாத அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுகின்ற சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் 2024 ஆண்டறிக்கையினை பகிர்ந்து கொள்வது பெருமையளிக்கின்றது.

இவ்வாண்டு முழுவதும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட், இடையூறற்ற சக்தி களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகச் சேவைகள், தொழிற்பாட்டு ரீதியான உன்னதத்தின் அதி உயர்வான மட்டத்தினை பேணுதல் என்பவற்றை உறுதிசெய்ததன் மூலம் எதிர்பார்க்கைகளையும் தொடர்ந்தும் விஞ்சிச் சென்றது.

வினைத்திறன் பற்றிய எமது மையப்படுத்தலானது செயன்முறைகளை சீரமைத்து, மூலவளப் பயன்பாட்டை உச்சப்படுத்தி, செயலிழப்பு நேரத்தை குறைப்பதற்கு எம்மை இயலச்செய்துள்ளது. இதற்கு சமாந்தரமாக தரத்திற்கான எமது கடமைப்பொறுப்பானது கடுமையான தரநியமங்கள், தொடர்ச்சியான பயிற்சி மற்றும் உலகளாவிய சிறந்த நடத்தைகளை பின்பற்றுதல் என்பனவூடாக வலிமைப்படுத்தப்பட்டு, நாம் வழங்கும் ஒவ்வொரு சேவையிலும் தேசம் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையினை நிறைவேற்றுகின்றது என்பதனை உறுதிசெய்கின்றது. 2024 இன் முக்கிய சிறப்புக்கூறாக புதிய தொழில்நுட்பங்களை தழுவிக் கொள்வதற்கான எமது முயற்சியாக இருந்து வருகின்றது. எமது தொழிற்பாடுகளில் டிஜிட்டல் ரீதியான தன்னியக்கப்படுத்தல் தொடக்கம் முன்னேற்றமடைந்த கண்காணித்தல் மற்றும் முன்கணிப்பு செய்யத்தக்க பராமரிப்பு முறைகள் வரை இத்தொழில்நுட்பங்கள் எமது செயலாற்றுகையினை மேம்படுத்தியுள்ளமை மாத்திரமன்றி நம்பகமான, நிகழ்நேரத் தீர்வுகளை வழங்குவதற்கான எமது இயலுமையினையும் அதிகரித்துள்ளன. சிறந்த முகாமைத்துவ நடத்தைகளுடன் நவீன கருவிகளை ஒருங்கிணைப்பதன் வாயிலாக நாம் தொழில்பாட்டு ரீதியான முட்டுக்கட்டைகளை குறைத்து, தீர்மானம் மேற்கொள்ளுதலை மேம்படுத்தி, பல்வேறு தேர்ச்சிகளைக் கொண்டு தொழிற்படையினை வலிமைப்படுத்தியுள்ளோம்.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், புத்தாக்கம் என்பவற்றைக் கொண்ட கலாசாரமொன்றை பேணிவளர்ப்பதன் மூலம் மரபுரீதியான நடத்தைகளையும் தாண்டிச் சென்று நாம் குறிப்பிடத்தக்க படிமுறைகளையும் எடுத்துள்ளோம். தலைமைத்துவ அணி என்ற வகையில் முறைகேடுகளையும் தெளிவாக கண்காணிக்கப்படாத துறைகளையும் குறைப்பதற்கு நாம் விழிப்புக்கவனத்துடன் பணியாற்றி சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் மிகுந்த தெளிவுடனும் நேர்மையுடனும் தொழிற்படுகின்றது என்பதை உறுதிசெய்கின்றோம். இச்செயலூக்கமிக்க அணுகுமுறையானது பங்குதாரர் நம்பிக்கையினை உயர்வடையச் செய்துள்ளதுடன் மிக முக்கியமாக சக்தித் துறையில் சாதகமான மாற்றத்தை இயக்குவதில் முன்னிலையில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெடினை இடம்பெறச் செய்துள்ளது.

எதிர்காலத்தை நாம் நோக்குவதற்கேற்ப சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் அனைத்து பங்குதாரர்களுக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை கொண்டுசேர்க்கின்ற அதேவேளை நாட்டின் சக்தி பாதுகாப்பு குறிக்கோள்களுடன் அணி சேர்ந்திருப்பதற்கு எமது பணியில் திடமான தளமொன்றை ஏற்கனவே கொண்டுள்ளது. நாம் தொடர்ந்தும் உட்கட்டமைப்பை வலுப்படுத்தி, மக்களிலும் தொழில்நுட்பத்திலும் முதலீடுசெய்து சிறந்த சேவை வழங்கலுக்கு புதிய அளவுகோள்களை உருவாக்கி, சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெடின் மதிப்புக்குரிய தொழிற்படைக்கான மகிழ்ச்சிகரமான பணியிடத்தை உருவாக்குவோம்.

அவர்களது விலைமதிப்பற்ற ஆதரவுக்கும் நம்பிக்கைக்கும் பங்குதாரர்களுக்கும் பங்காளர்களுக்கும் எனது உண்மையான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். வினைத்திறன், தரம் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைக் கொண்ட உத்தரவாதத்துடன் ஒன்றாக இணைந்து சவால்களைத் தாண்டி, எதிர்பார்க்கைகளை விஞ்சி, நிலைபேறான எதிர்காலத்தை நோக்கி சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தை நாம் எடுத்துச்செல்வோம்.

**கலாநிதி மயூர நெத்திகுமாரகே**
**முகாமைத்துவர் பணிப்பாளர்**

# பணிப்பாளர் சபை



## திரு. டி. ஜே. ஏ. எஸ். டி. எஸ். ராஜகருண
**தலைவர்**

திரு. ஜனக ராஜகருண, எரிபொருள் மற்றும் எரிவாயு தொழிற்துறையில் குறிப்பாக முனையத் தொழிற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் எனபவற்றில் விசேடத்துவம் கொண்ட விரிவான நிபுணத்தவத்துடன் கூடிய தலைவராவார். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் இரு தசாப்தத்திற்கு மேற்பட்ட அர்ப்பணிப்பு மிக்க அனுபவத்துடன் தொழிற்பாட்டு உன்னதத்தை இயக்குவதிலும் நிறுவனசார் வெற்றியை வடிவமைப்பதிலும் இவர் ஏதுவாகவிருந்துவந்தார்.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் திரு. ராஜகருணாவின் பதவிக்காலத்தின் போது இவர் முத்துராஜவெல முனையத்தில் முனைய முகாமையாளர் மற்றும் பிரதி தொழிற்பாடுகள் முகாமையாளர் உள்ளடங்கலாக முக்கிய தலைமைத்துவ வகிபாகங்களை வகித்தார். இப் பதவிகளில் இலங்கையின் பெற்றோலியக் களஞ்சிய மற்றும் விநியோக கட்டமைப்பு என்பவற்றின் வினைத்திறன் மிக்க பாதுகாப்பான முகாமைத்துவத்தை உறுதிசெய்து நாட்டின் சக்திப் பாதுகாப்பிற்கு கனிசமாகப் பங்களித்துள்ளார்.

இயக்கவாற்றல் மிக்க மற்றும் விரைவாக கற்றுக் கொள்பவரான திரு. ராஜகருண வளர்ந்துவருகின்ற தொழிற்துறை போக்குகளுக்கு இணையாகக் காணப்பட்டு, அவரது தொழிலநுட்ப மற்றும் முகாமைத்துவ நிபுணத்துவத்தை தொடர்ச்சியாக மேம்படுத்துகின்றார். அழுத்தம் மிக்க சூழ்நிலைகளில் விரைவாக தீர்மானம் எடுக்க கூடிய திறன், சிக்கலான சவால்களைத் தீர்க்க இயலுமைமிக்கவராக்கி தாக்கமிக்க பெறுபேறுகளை இயக்கச்செய்கின்றன. கூட்டாகப் பணியாற்றுவதற்கான அவரது தலைமைத்துவப் பாணியானது குழுவாகப் பணியாற்றும் பரஸ்பர மதிப்பளிக்கும் சூழலொன்றினை பேணிவளர்த்து, தொழில்சார் வெற்றி மற்றும் அவரது அணி உறுப்பினர்களின் விருத்தி இரண்டையும் முன்னுரிமைப்படுத்தகின்றது.

திரு. ராஜகருணவின் வலுவான கல்விசார் பின்னணியானது பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து கைத்தொழில் இரசாயனவியலில் விஞ்ஞான முதுமானி பட்டத்தையும் களனி பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானமானி (கௌரவ) பட்டத்தையும் உள்ளடக்குகின்றது. இங்கு இவர் இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் தூயகணிதம் என்பவற்றை மையப்படுத்தியிருந்தார். அவரது செயன்முறை சார்ந்த அனுபவத்துடன் ஒன்றிணைந்த அவரது வலுவான தொழில்நுட்பத் தளமானது சிக்கல் வாய்ந்த தொழிற்பாடுகளை முகாமைசெய்வதற்கும் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் உயர் தரநியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நிபுணத்துவத்தை அவருக்கு வழங்கியுள்ளது.

அவரது முறைசார் தகைமைகளுக்கு மேலதிகமாக திரு. ராஜகருண திரவமாக்கப்பட்ட இயற்கை வாயு (LNG) பெறுமதிச் சங்கிலி முகாமைத்துவம், மொத்த திரவ களஞ்சியத் தாங்கி முகாமைத்துவம் மற்றும் கட்டுக்காவல் பரிமாற்றல் நடைமுறைகள் என்பன உள்ளடங்கலாக எரிபொருள் மற்றும் எரிவாயு தொழிற்துறையின் முக்கிய விடயப்பரப்புகளில் விசேடத்துவம் மிக்க பயிற்சியின் ஊடாக அவரது நிபுணத்துவத்தை மேலும் மேம்படுத்தியுள்ளார். யப்பான், ஐக்கிய இராச்சியம், மலேசியா நாடுகளில் முன்னேற்றகரமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் இவர் பங்கேற்றுள்ளமை உலகளாவிய கைத்தொழில் தரநியமங்கள் பற்றிய அவரது அறிவை விரிவடையச்செய்துள்ளது. இதனை சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டின் தொழிற்பாடுகளுக்குள் தங்குதடையின்றி இவர் ஒருங்கிணைத்துள்ளார். இதற்கு மேலதிகமாக, அவரது தலைமைத்துவ இயலளவுகளை மேலும் மேம்படுத்தி இவர் மேற்பார்வை முகாமைத்தவம் மற்றும் கைத்தொழில் நடைமுறைகளிலும் பயிற்சியை நிறைவுசெய்துள்ளர்.

திரு. ராஜகருண, இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப குழுவின் முக்கிய உறுப்பினராகவிருந்து இலங்கையின் பெற்றோலியத் தொழிற்துறையை வழி நடாத்துவதில் விபரக்குறிப்புகளை சீரமைக்கின்ற தொழில்சார் தரநியமங்களின் அபிவிருத்தியில் முனைப்புடன் பங்காற்றுகின்றார்.

தற்போது திரு. ராஜகருண, சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களின் தலைவர் என்ற வகையில் இலங்கையின் தேசிய பெற்றோலிய உட்கட்டமைப்பினை மேற்பார்வை செய்வதில் முக்கிய பங்காற்றி வருகின்றார். அவரது தொலைநோக்குமிக்க தலைமைத்துவமானது சக்தித் துறையில் தொழிற்பாட்டு வினைத்திறனை வளர்த்து, புத்தாக்கத்தை பேணிவளர்த்து, நிலைபெறத்தக்க நடைமுறைகளை இயக்குவதில் கவனம்செலுத்துகின்றது.

தூய்மையான மற்றும் நிலைபெறத்தக்க சக்திக்கு ஆதரவளிப்பவர் என்ற வகையில், திரு. ராஜகருண, சீனாவில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பயிற்சி நிகழ்சித்திட்டத்திற்கான தூய சக்திப் பிரயோக தொழில்நுட்பத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார். நிறுவனம் மற்றும் தேசம் இரண்டுக்கும் நன்மையளிக்கும்

விதத்தில் நிலைபெறத்தக்க நடைமுறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் சக்தித் துறையை மாறுதலடையச்செய்வதை அவரது தொலைநோக்குமிக்க சிந்தனை இலக்காகக் கொள்கின்றது.

தொடர்ச்சியாக மேம்படுத்தல், சுற்றாடல் ரீதியாக முன்னணிவகித்தல் மற்றும் அறிவைப் பகிர்ந்துகொள்ளுதல் என்பவற்றுக்கான ஆழ்ந்த அர்பணிப்புடன், திரு. ராஜகருண, இலங்கை சக்தித் துறையில் முக்கிய ஏதுவாக விளங்குகின்றார். அவரது தலைமைத்துவமும் அர்ப்பணிப்பும் முன்நேத்தையும் புத்தாக்கத்தையும் தொடர்ந்தும் கவர்ந்து, பிராந்தியத்தின் சக்தி தோற்ற அமைப்பில் முக்கிய முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களை இடம்பெறச்செய்கின்றது.



## கலாநிதி மயூர நெத்திகுமாரகே
### முகாமைத்துவப் பணிப்பாளர்

கலாநிதி மயூர நெத்திகுமாரகே உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைகள் இரண்டிலும் ஏறத்தாழ இரு தசாப்தங்களை கொண்ட அனுபவத்தடன் கூடிய தகைமையும் அனுபவமும் பெற்ற வியாபார முகாமைத்துவ தொழில்சார் நிபுணரொருவராவார். மாறுதலடையச் செய்யும் தலைமைத்துவத்திற்காக அறியப்படுகின்ற இவர் பல எண்ணிக்கையான நிறுவனங்களை வெற்றிகரமாக புத்துயிர்பெறச் செய்துள்ளார். கலாநிதி நெத்திகுமாரகே சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழில் உபாயமிக்கவர், நிறுவன மாறுதலடையச் செய்தல் விசேட நிபுணர், டிஜிட்டல்மயமாக்க நிபுணர் மற்றும் செயற்கை தொழில்நுட்ப வழிகாட்டி ஆகவிருக்கின்றார்.

தற்போது இவர் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினதும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட்டினதும் முகாமைத்துவ பணிப்பாளராக பணியாற்றுகின்றார். இவர் லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட், லிட்ரோ காஸ் டேமினல் லங்கா (பிரைவட்) லிமிடெட் மற்றும் ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட் என்பவற்றில் பணிப்பாளர் பதவியினை வகிக்கின்றார். இதற்கு மேலதிகமாக, இவர் இலங்கை அரசாங்கத்திற்காக எரிசக்தி அமைச்சின் அமைச்சு ஆலோசனை குழுவின் உறுப்பினராகவும் பங்களிக்கின்றார்.

கலாநிதி நெட்த்திகுமாரகேயின் சர்வதேச தொழில் வாழ்க்கை கொக்கோகோலா சப்கோ கம்பனியில் பிராந்திய தலைமைத்துவ வகிபாகத்தடன் 2005 இல் தொடங்கியது. இவர் ஆசிய பிராந்தியம் முழுவதும் விரிவடைகின்ற கம்பனியின் வியாபாரத்தில் முக்கிய பங்காற்றியதுடன் பின்னர் ஆசிய மற்றும் ஆபிரிக்கா இரு பிராந்தியங்களுக்கும் அவரது வகிபாகம் விரிவடைந்தது. விரைவாக விற்பனையாகின்ற வாடிக்கையாளர் பொருட்கள் துறையில் அவரது பதவிக் காலத்தின் பின்னர் இவர் நடுநிலை மற்றும் இறுதிநிலை தொழில் இரண்டிலும் எரிசக்தி துறையில் பரந்த மாறுதலடைதல் அனுபவத்தை பெற்றுக் கொண்டார். டோட்டல் என்ர்ஜீஸ், பெற்றாடெக், கிளீன்கீட் மற்றம் ஸ்லோகல் எனர்ஜி போன்ற முன்னணி பல்தேசிய சக்தி வர்த்தக நாமங்களுடனும் பணியாற்றியுள்ளதுடன் லாப் பவுண்டேஸ் போன்ற பிராந்திய வர்த்தக நாமங்களிலும் நாட்டுக்கான முகாமையாளர் தொடக்கம் பிரதம தொழிற்படுத்தல் அலுவலர் மற்றும் எரிசக்தி வணிகர் வரையான பல்வேறு வகிபாகங்களை கொண்டிருந்தார். எரிசக்தி துறையில் முனையங்கள், தாங்கிப் பண்ணைகள், கப்பல் கட்டுதல்/சுமையேற்றல் வசதிகள், நிரப்புதல் பொறித்தொகுதி, சிலிண்டர் பொறித்தொகுதி, எரிபொருள் நிலைய வலையமைப்புகள் மற்றும் கைத்தொழில் ரீதியான பொருத்தல்கள் போன்ற வழிமுறை அபிவிருத்தி என்பவற்றை அவரது நிபுணத்துவம் உள்ளடக்குகின்றது.

விரைவாக விற்பனையாகும் வாடிக்கையாளர் பொருள் மற்றும் எரிசக்தி என்பவற்றுக்கு மேலதிகமாக கலாநிதி நெத்திகுமாரகே செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், தரவு களஞ்சியப்படுத்தல், வியாபார செயன்முறைப்படுத்தல் மீள் பொறியியற்படுத்தல், தேவைக்கேற்றவாறான அபிவிருத்தி மற்றும் பயனாளர் அனுபவ வடிவமைப்பு போன்றவற்றை மையப்படுத்தி தகவல் தொழில்நுட்ப துறைக்கும் பங்களிப்புச் செய்துள்ளார்.

கலாநிதி. நெத்திகுமாரகே முகாமைத்துவம் மற்றும் வியாபாரத்தில் கலாநிதி பட்டத்தையும் வியாபார முகாமைத்துவ முதுமாணி பட்டத்தையும் (திறமைச்சித்தி) இயந்திரவியல் பொறியியலில் விஞ்ஞானமானி (கௌரவ) பட்டத்துடன் சேர்த்து அரசியல், மென்பொருள் பொறியியல் மற்றும் கணினி அடிப்படையிலமைந்த கணக்கியல் என்பவற்றில் டிப்ளோமா பட்டங்களையும் கொண்டுள்ளார். இவர் கல்வி கபொத (உ/த) இல் கணிதவியல் துறையில் முதல் தேசிய தரப்படுத்தலையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன் IESL, ECSL, SLIM மற்றும் CPM உள்ளடங்கலாக தொழில்சார் நிறுவனங்களில் உறுப்புரிமையினையும் கொண்டுள்ளார்.



## திரு. டப்லிவ். எஸ். ஹேமந்த குமார

### நிறைவேற்றுப் பணிப்பாளர்

திரு. டப்லிவ். எஸ். சௌரத் ஹேமந்த குமார 2024 செப்டெம்பர் 26 அன்று சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். 1985 தொடக்கம் எரிபொருள் மற்றும் எரிவாயு தொழிற்துறையில் விரிவான தொழில் அனுபவத்துடன் திரு. ஹேமந்த சுத்தகரிப்பு தொழிற்பாடுகள், கப்பற் சரக்கு திட்டமிடல் மற்றும் மூன்றாம் நிலை தொழிற்பாடுகள் முகாமைத்துவம் என்பவற்றில் குறிப்பிடத்தக்க நிபுணத்துவத்தை கொண்டுள்ளார். சபைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் இவர் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெடின் தொழிற்பாடுகள் முகாமையாளராக பணியாற்றினார். அங்கு இவர் மூலவளங்களை உகப்பாக்கம் செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், இணங்குவித்தலை உறுதிசெய்தல் என்பவற்றுடன் இறக்குமதி தொடக்கம் விநியோகம் வரை முழுமையான நோக்கிலான தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதில் முக்கிய வகிபாகத்தையாற்றி இதனூடாக தொழிற்பாட்டு ரீதியான உன்னதத்தை இயக்கினார். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெடில் அவரது தொழில் வாழ்க்கை சப்புகஸ்கந்த சுத்தகரிப்புச் சாலையில் பயிலுநராக ஆரம்பத்தில் தொடங்கி, சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், பிரதி முகாமையாளர், உதவி முகாமையாளர், சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் மற்றும் தொழிற்பாடுகள் தொழில்நுட்பவியலாளர் போன்ற முக்கிய பதவிகளை உள்ளடக்குகின்றது.

திரு. ஹேமந்த ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானமானி பட்டத்தினையும் இலங்கை இரசாயனவியல் நிறுவனத்திலிருந்து தொழில்சார் தகைமைகளையும் (MI.Chem. C, LI.Chem. C) பெற்றுள்ளார். இவருக்கு தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் பயிலுனர் தொழில்நுட்பவியலாளர் சான்றிதழும் வழங்கப்பட்டது.

பதவிக்காலம் முழுவதும் இவர் SAP ERP கருத்திட்டம், நிலைத்தூண்களை விரிவுபடுத்தல் மற்றும் பம்பி இயலளவினை அதிகரித்தல் அத்துடன் கொலன்னாவ முனையத்தில் உற்பத்தி வேறுபாடுகளை குறைத்தல் போன்றவற்றிற்காக மைய அணி உறுப்பினராக பணியாற்றியமை உள்ளடங்கலாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கியுள்ளார். இதற்கு மேலதிகமாக, இவர் கப்பல் எரிபொருள் வழங்கல் தொழிற்பாடுகளை முகாமை செய்தல் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டிற்கான முழுமையாக தானியங்கப்படுத்தப்பட்ட தாங்கி தரவுத்தளத்தினை உருவாக்குதல், தானியக்கமாக்கப்பட்ட தாங்கி அளவீட்டு முறைமைகள், மற்றும் முழுமையான தானியக்கமாக்கப்பட்ட திட்டமிடல் அத்துடன் மின்சார BI கருவியினை பயன்படுத்தி அறிக்கையினை உருவாக்குதல் என்பவற்றை முகாமை செய்துள்ளார்.

திரு. ஹேமந்தவின் அர்ப்பணிப்பும் பரந்த அனுபவமும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் அதன் தொழில்பாட்டு இயலளவுகளை மேம்படுத்துவதற்கும் நாட்டின் படிப்படியாக வளர்ச்சியடைகின்ற சக்தி தேவைகளை தீர்ப்பதற்குமான நிறுவனமொன்றாக அதற்கு பெறுமதிமிக்க சொத்துக்களாக காணப்படுகின்றன.



## திரு. ஆர். எம். எஸ். பி. எஸ். பண்டார

### பணிப்பாளர்

இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தர அலுவலரான திரு. ஆர். எம். எஸ். பி. எஸ். பண்டார வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றுகிறார். அரசாங்கத் துறைசார் தலைமைத்துவத்தில் இரு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் பெற்ற அவர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம், பொதுத் தொழில்முற்சிகள் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றில் முக்கிய பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

இவர் அவுஸ்திரேலியாவின் பிளிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுமானி பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதியியல் பொருளியல் முதுமானி அதேபோன்று அபிவிருத்திப் பொருளியலில் பட்ட பின்படிப்பு டிப்ளோமா தகைமைகளைப் பெற்றுள்ளார். களனிப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் விஞ்ஞானமானி (கௌரவ) பட்டமும் பெற்றுள்ளார்.

தற்போது திரு. பண்டாரா, சிலோன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிலோன் பெற்றோலியக் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடெட், இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் நிலைபெறத்தக்க சக்தி அதிகாரசபை ஆகியவற்றின் சபைகளில் பணியாற்றுவதோடு, சிலோன் பெற்றோலியக் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடெட் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு தலைமை தாங்குகிறார். மேலும், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சமூக பாதுகாப்புக் சபை, தேசிய கல்வி ஆணைக்குழு, இலங்கை தரதர அங்கீகார சபை போன்ற பல தேசிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளிலும் பணியாற்றியுள்ளார்.



## திரு. திபக் தாஸ்
**பணிப்பாளர்**

திரு. திபக் தாஸ், சில்சார் தேசிய தொழில்நுட்பவியல் நிறுவனத்திலிருந்து இயந்திரவியல் பொறியியல் பட்டத்தையும் மற்றும் பெற்றோலிய முகாமைத்தவத்தில் சான்றிதழையும் பெற்றவராவார். பெற்றோலியத் துறையில் 27 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்துடன், திரு. தாஸ், இந்தியாவின் முதன்மைக் கம்பனியும் 500 போர்ச்சூன் உலகளாவிய கம்பனியுமான இந்தியன் ஒயில் கோப்பரேசன் லிமிடெட்டின் பல்வேறு வகிபாகங்களில் பரந்த அனுபவம் பெற்றவர்.

கேரளா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், மேற்கு வங்காளம் மற்றும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் பரந்த புவியியல் பகுதிகளை உள்ளடக்கிய பல்வேறு பதவிகளில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

சில்லறை விற்பனை மற்றும் செயல்பாட்டுத் துறையில் அவரது பல்வேறு முக்கிய பதவிகளுக்குப் புறம்பாக, திரு. தாஸ், லக்ஷ்வதீப் தீவுகளை இந்தியாவின் எரிசக்தி வரைபடத்தில் கொண்டு வருவதற்கு முக்கியப் பங்கு வகித்ததுடன் கேரளா மாநிலத்தில் அவர் சில்லறை விற்பனைத் தலைவராக இருந்த காலத்தில் இரு தீவுகளிலும் களஞ்சிய முனையங்கள் உட்பட லக்ஷ்வதீப் கவரட்டி, மினிகொய், ஆண்ட்ரோட் மற்றும் கல்பெனி தீவுகளில் பெற்றோலிய சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன.

லங்கா ஐஓசி பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளராக அவர் முக்கியப் வகிபாகத்திற்கு மேலதிகமாக, திரு. தாஸ் சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் சபைப் பணிப்பாளராகவும் பணியாற்றுகிறார். இலங்கை பெற்றோலியத் துறையில் தனது நிபுணத்துவத்தை வழங்கி இலங்கைப் பெற்றோலிக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி ஆகியவற்றின் கூட்டுமுயற்சியான ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் (பிரைவெட்) லிமிடெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் உள்ளார். மேலும், இவர் இந்திய பிரதம நிறைவேற்று அலுவலர்கள் மன்றத்தின் அரசாங்க ஒருங்கிணைப்பு தலைவராக பணியாற்றுவதுடன் இலங்கை வர்த்தக சம்மேளனம், தேசிய வர்த்தக சம்மேளனம், இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம், இலங்கை இந்தியச் சங்கம் போன்ற பல எண்ணிக்கையான சம்மேளனங்களில் உறுப்பினராக முனைப்புடன் செயற்படுவதுடன் நாடுபூராகவும் ஏழைகளுக்கு உதவுவதற்கு பல்வேறு நிறுவன சமூக பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலும் முனைப்புடன் பங்கேற்கின்றார்.



## திரு. அவினாக்ஷ் சிங்ஹால்
**பணிப்பாளர்**

திரு. அவினர்‘ சிங்ஹால், டெல்லி பல்கலைக்கழகத்தின் இந்துக் கல்லாரியின் வணிக பட்டதாரியொருவராவதுடன் இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்தின் பட்டயம் பெற்ற கணக்காளரொருவராவார்.

அவினர்‘ சிங்ஹால் 2005 இல் இந்திய ஒயில் கோப்பிரேசனில் இணைந்து கொண்டதுடன் நிதி, திறைசேரி மற்றும் வரிமதிப்பு துறைகளில் செழிப்புமிக்க மற்றும் வேறுபட்ட துறைகளில் கூடிய 19 ஆண்டு அனுபவத்தைக் கொண்டவராவார். இவர் இந்தியன் ஒயில் கோப்பிரேசனில் நிறுவனத் திறைசேரி, முதலீட்டாளர் உறவுகள், நேரடியற்ற வரி மதிப்பு மற்றும் கணக்கீடு போன்ற நிதி சார்ந்த துறைகளில் பல்வேறு கடமைகளை கையாண்டுள்ளார். வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவம் தொழிற்படு மூலதன முகாமைத்துவம், சர்வதேச சந்தைகளிலிருந்து நிதி திரட்டுதல், முதலீட்டாளர் உறவுகள். கடன் தரப்படுத்தல் மற்றும் கம்பனி விலைமதிப்பீடுகள் என்பவற்றில் பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

இவர் தற்போது லங்கா ஐஓசி பிஎல்சியில் சிரேஷ்ட துணைத் தலைவராக (நிதி) கடமையாற்றி நிதிப்பிரிவுக்கு தலைமை தாங்குகின்றார்.



## திரு. சுனில் காந்த மஹ்ரான

**பணிப்பாளர்**

திரு. சுனில்காந்த மஹ்ரான இந்தியாவின் புவனேஸ்வர் சேவியர் முகாமைத்து நிறுவனத்திலிருந்து முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவினை பெற்று இந்தியாவின் பல்வேறு புவியியல் பிராந்தியங்களில் பெற்றோலிய உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளில் 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட செழிப்புமிக்க அனுபவத்தை பெற்றுள்ளார்.

தற்போது லங்கா ஐஓசி நிறுவனத்தின் துணைத்தலைவராக (தொழிற்பாடுகள், இறக்குமதிகள் மற்றும் நீர்க்கல எரிபொருள் விற்பனைகள்) பணியாற்றுகின்றார்.

இவர் இந்தியாவில் வேறுபட்ட பதவிகளிலும் வேறுபட்ட புவியியல் பிரதேசங்களிலும் விற்பனைத் தொழில்சார் நிபுணராக 15 ஆண்டுகளுக்கு மேல் சில்லறை விற்பனைகளை கையாண்டுள்ளார். அத்துடன் இந்தியாவின் கோவாவில் பிரதேச சில்லறை பிரதானியாக அணிக்கு தலைமைவகித்து வலையமைப்பு விரிவுபடுத்தல், வழங்கல் முகாமைத்துவம் மற்றும் சில்லறை உட்கட்டமைப்பு நவீனமயப்படுத்தல் என்பவற்றை மேற்பார்வை செய்தார்.

இந்தியன் ஒயில் நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் தலைமை அலுவலகத்தில் அவரது பதவிக்காலத்தின் போது சில்லறை மாறுதலடைதல் கருத்திட்டத்திற்கான மைய அணியின் பாகமாகவிருந்து நாடு முழுவதும் சில்லறை விற்பனை நிலையங்களின் வசதி அத்துடன் சேவை மட்டங்களை மாற்றமடையச் செய்வதற்கான பல முன்முயற்சிகளை இயக்கினார்.

தாங்கி, நீர்க்கல எரிபொருள் மற்றும் குழாய்த்தொகுதி தொழிற்பாடுகள் உள்ளடங்கலாக முனையத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்கின்ற தொழிற்பாட்டு பிரிவிலும் இவர் பணியாற்றினார்.



## திரு. எச். டி. பி. சந்தன

**பணிப்பாளர்**

திரு. எச். டி. பி. சந்தன, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராவார். அவர் தனது தொழில்சார் பயணத்தை ஹேோல்டிங் பீஎல்சி நிறுவனத்தில் தொடங்கினார். அங்கு கணக்காளர், முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம், குழும வணிக பகுப்பாய்வாளர் மற்றும் பொது முகாமையாளர் - பெறுகை போன்ற பல்வேறு பொறுப்புகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி பட்டம் பெற்றுள்ளார். நிறுவனசார் அனுபவத்திற்கு மேலாக, திரு. சந்தன 8 ஆண்டுகளுக்கும் மேலாக சிபீ அசோசியயேற் நிறுவனத்தில் பங்காளராகவிருந்து நிதி மற்றும் வணிக ஆலோசனையில் தனது நிபுணத்துவத்தை வழங்கி வருகிறார்.

தற்போது, இவர் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளராக பணியாற்றி, அங்கு அவரது மூலோபாய நுண்ணோக்கையும் ஆளுகை அனுபவத்தையும் சபைக்கு வழங்கி வருகிறார்.



# சிரேஷ்ட முகாமைத்துவ அணி



**திரு. ஓ.பி. காக்கொட ஆராச்சி**
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)



**திரு. டி.வி. சரத்சந்திர**
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்)



**திரு. ஈ.ஏ.ஆர்.டி பண்டார**
பதில் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்)/ முகாமையாளர் (பயிற்சி மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி)



**திரு. ஜி.எம்.ஏ. பண்டார**
பதில் பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் மற்றும் துணைச் சேவைகள்)



**திரு. ஜே.ஏ.யு.ஆர்.கே. ஜயலத்**
முகாமையாளர் - நிதி



**திரு. எச்.என்.பி.யு ஜயவர்த்தன**
முகாமையாளர் - பாதுகாப்பு

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி



**திருமதி எஸ்.என் கமகே**
முகாமையாளர் - நிறுவன விவகாரங்கள்



**திரு. டப்லிவ்.எம்.ரி.டப்லிவ்.ஏ பண்டார**
முகாமையாளர் - வினியோகம்



**வைத்தியர் திருமதி ஆர். சுசிறிவர்தன**
மருத்துவ அலுவலர்



**மேஜர். ஆர்.எம்.என். ஜயதிலக**
WWV RWP RSP (ஓய்வுபெற்ற)
முகாமையாளர் - விசாரணைகள்



**குரூப் கெப்டன் பி.எம்.சி.பி. டயஸ்**
முகாமையாளர் -
தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு



**திரு. என்.எம் முனாஸ்**
மனித வள முகாமையாளர்

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி



**திருமதி டப்லிவ்.பீ.ஜி.ஏ.டப்லிவ். ஜயவர்தன**
பிரதம சட்ட அலுவலர்



**திரு. ஜி.எச்.என்.எம். சந்திரசிறி**
முகாமையாளர் - ஆய்வுகூடம்



**திரு. எம்.டி.ஏ. அசோக குமார**
முகாமையாளர் - களஞ்சியசாலைகள்



**திரு. என் டெப்னி தஸ்னீம்**
முகாமையாளர் - கொள்முதல்



**திருமதி சமன்மலி கஜதீர**
பதில் பிரதம தகவல் அலுவலர்



**திருமதி எஸ் ஏக்கநாயக**
பதில் முகாமையாளர் - தகவல் முறைமைகள்

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி



**திரு. டி.ஆர்.ஜே. பொபேஆராச்சி**
பதில் முகாமையாளர்
(கரைகடந்த தொழிற்பாடுகள்)



**திரு. எம் பீ ஏ லக்மால்**
தொழிற்பாடுகள் முகாமையாளர்
(மொத்த அசைவுகளும் மற்றும் மொத்த உற்பத்திகள்)



**திரு. சந்துன் ஜினதாச**
பதில் முனைய முகாமையாளர்,
(முத்துராஜவெல)



**திரு. ஏ. ஆர் சேரசிங்க**
பிரதி முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு



# முகாமைத்துவ கலந்தாராய்வும் பகுப்பாய்வும்

# தொழிற்பாடு சார்ந்த பொழிப்பு – 2024

## தேசிய சக்தி உட்கட்டமைப்பில் உபாய ரீதியான வகிபாகம்

- இலங்கையின் முன்னணி பெற்றோலிய ஏற்பாட்டுச் சேவை வழங்குநர்
- தேசிய பெற்றோலிய களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகத்திற்கான பொதுவான பயன்பாட்டாளர் வசதி
- பாதுகாப்பான, இடைத்தடங்கலற்ற எரிபொருள் வழங்கலை உறுதிசெய்தல்

## பங்குடமையாளர் - மத்தியமயமான பெறுமதி மாதிரி

| பங்குடமையாளர் | எதிர்பார்க்கை | சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டட் பதிலிறுப்பு |
|---|---|---|
| அரசாங்கம் | சக்திப் பாதுகாப்பு | உபாய ரீதியான ஒதுக்குகள் |
| சிபெற்கோ/ எல்ஐஓசி | வினைத்திறன் மிக்க கையாளுகை | நவீன முனையங்கள் |
| ஊழியர்கள் | வளர்ச்சியும் பாதுகாப்பும் | ஆரோக்கியம், பாதுகாப்பு, சூழல் மற்றும் பயிற்சி |
| வியாபாரத்திலிருந்து வியாபாரத்திற்கு வாடிக்கையாளர்கள் | நம்பகரமான வழங்கல் | ISO முறைமைகள், தடமறிதல் |
| பொதுமக்கள்/ ஊடகம் | வெளிப்படைத்தன்மை | விளக்களித்தல்/ ஈடுபாடு |

## பொருளாதார பின்னணியும் துறை இயக்கவாற்றலும்

- நெருக்கடிக்கு பிந்திய எரிசக்தி உறுதிப்படுத்தலில் பங்குவகித்தல
- தேசியளவில் எரிபொருள் கிடைக்கப்பெறுவதை பேணுதல
- கைத்தொழில் மற்றும் போக்குவரத்துத் துறைக்கு ஆதரவு
- எதிர்காலத்திற்கு தயாரான - உயிரியல் எரிபொருள், திரவமாக்கப்பட்ட இயற்கைவாயு திட்டமிடல

## வெளிவாரி தொழிற்பாட்டுச் சூழல்

- உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் - பீப்பாய்க்கு ஐ.அ.டொ 82.5
- கொள்கை மாற்றங்கள் - தேசிய எரிசக்தி விலையிடல் மறுசீரமைப்புகள்
- மீள் புதுப்பிக்கத்தக்க பங்கு - தேசிய மின்கட்டமைப்பின் 50% இற்கும் மேல்
- உபாயப் பங்காளர்கள் - சிபெற்கோ, எல்ஐஓசி, சினோபெக், ஆர்எம் பார்க்ஸ், யுனைடெட் பெற்றோலியம்

## தொழிற்பாடு சார்ந்த மற்றும் உட்கட்டமைப்புச் சிறப்புக்கூறுகள்

- வருவாய் நிதியாண்டு 2024 - ரூ 18.9 பில்லியன்
- வியாபார துறைகள் -களஞ்சியப்படுத்தலும் விநியோகமும்
- களஞ்சியம்
  கொலன்னாவ - 265,529 மெ.தொ
  முத்துராஜவெல - 208,738 மெ.தொ
  11 பிராந்திய சாலைகள் - 24,881 மெ.தொ
- விநியோகம் - குழாய்த் தொகுதி, புகையிரதம், வீதி
- கரைகடந்தவை - எஸ்பிஎம் 1- 2, டொல்பின் தாங்கி இறங்குதுறை

## அளவும் விநியோகமும் - நிதியாண்டு 2024

மொத்தமாக விநியோகிக்கப்பட்டவை 4.4 மில்லியன் கி.லீ

- ஓட்டோ டீசல் 1.5 மில். கி.லீ (34.99%)
- பெற்றோல் 1.5மில். கி.லீ (34.07%)
- விமான எரிபொருள் 0.56 மி கி.லீ (12.66%)
- ஏனையவை 0.80 மில் கி.லீ (18.28%)






# தொழிற்பாட்டுச் சூழல்

## உபாய ரீதியான பின்னணியும் வெளிவாரிச் சூழலும்

### தொழிற்பாட்டு சூழல் பற்றிய பொது நோக்கு

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் (நிறுவனம்) இலங்கையின் எரிசக்தி கட்டமைப்பின் உபாய ரீதியாக மிக முக்கிய பிரிவில் தொழிற்படுகின்றது. முதன்மை பெற்றோலிய ஏற்பாட்டுச் சேவை வசதிப்படுத்துனர் என்ற வகையில் நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தேசிய எரிசக்தி பாதுகாப்பு தேவைகள், பங்குதாரர் எதிர்பார்க்கைகள் அத்துடன் நிலைபேறான நடத்தைகளுக்கான கடமைப் பொறுப்பு என்பன மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### வெளிவாரி தொழிற்பாட்டுச் சூழல்

தொழிற்பாட்டு தோற்ற அமைப்பு பின்வருவன மூலம் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது.

- உலகளாவிய எரிசக்தி விலைத் தளம்பல்கள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள்
- தேசிய பொருளாதார மற்றும் கொள்கை மாற்றங்கள் (எரிபொருள் விலையிடல் மறுசீரமைப்புகள்)
- சுற்றாடல் ரீதியான கடப்பாடு மற்றும் எரிசக்தி மாறுதல் (2024 இல் மின்கட்டமைப்பின் 50% இற்கு மேல் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அடைந்துள்ளதுடன் 2030 இல் சக்தி பிறப்பாக்கத்தின் 70% இனை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது)

பொதுவான பயன்பாட்டாளர் பெற்றோலிய ஏற்பாட்டுச் சேவை சிபெற்கோ என்ற ரீதியில் நிறுவனம் உற்பத்திகளை உரிமையாகக் கொள்ளாது பாதுகாப்பான, வினைத்திறன் மிக்க எரிபொருள் களஞ்சியப்படுத்தலை உறுதிசெய்கின்றது.

முக்கிய வாடிக்கையாளர்கள்

- இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் (சிபெற்கோ)
- லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (எல்ஐஓசி)
- சினோபெக் எனர்ஜி லங்கா பிரைவட் லிமிடெட்
- ஆர்எம் பார்க்ஸ் பிரைவட் லிமிடெட்
- யுனைடெட் பெற்றோலியம் லங்கா பிரைவட் லிமிடெட்

### பொருளாதார மற்றும் எரிசக்தித் துறை அபிவிருத்திகள்

- உலகளாவிய மசகெண்ணை தளம்பல் (பிரன்ட்) சராசரி - பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ 82.5
- உள்நாட்டு விலையிடல் மறுசீரமைப்புகள் தொழிற்பாடு சார்ந்த செலவுகள் மற்றும் இலாபங்களில் தாக்கம் செலுத்தின.
- நிறுவனம் பின்வருவனவற்றினூடாக தேசியளவிலான எரிபொருள் வழங்கலைப் பேணியது
  - மொத்த முனையங்கள்,
  - குழாய் தொகுதிகள், வீதி மற்றும் புகையிரதத் தாங்கிகள்

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் திரவ இயற்கைவாயு, உயிரியல் எரிபொருட்கள் அத்துடன் வேறு மாற்றுவழி எரிபொருட்கள் பன்முகப்படுத்தல் என்பவற்றை நோக்கி கொள்கை மாறுதல்கள் ஊடாக நிறுவனம் இத்துறைகளுக்கு விசேட கவனம் செலுத்துகின்றது.

### களஞ்சிய தொழிற்பாடுகள்

நிறுவனத்தின் களஞ்சிய தொழிற்பாடுகள் 3 உபாய ரீதியான அமைவிடங்களில் அமையப்பெற்றுள்ளன.

- கொலன்னாவ முனையம் - 265,529 மெ.தொ கொள்ளளவு
- முத்துராஜவெல முனையம் - 208,738 மெ.தொ கொள்ளளவு
- 11 பிராந்திய சாலைகள் - 24,881 மெ.தொ மொத்த கொள்ளளவு

கொலன்னாவ முனையத்தில் ஒக்டேன் 92 பெற்றோல் (51,769 மெ.தொ) விமான எரிபொருள் (38,988 மெ.தொ), உலை எண்ணெய் (48,120 மெ.தொ), லங்கா ஓட்டோ டீசல் (50,971 மெ.தொ), ஒக்டேன் 95 பெற்றோல் (18,249 மொ.தொ) மண்ணெண்ணெய் (10,488 மொ.தொ), படிகள் எண்ணெய் (27,776மொ.தொ) மற்றும் சுப்பர் டீசல் (17,232 மெ.தொ) என்பவற்றிற்காக முன்னுரிமை அடிப்படையில் உயர் களஞ்சிய கொள்ளளவுகள் பேணப்படுகின்றன. கைத்தொழில்சார் மண்ணெண்ணெய் (1,593 மொ.தொ) மற்றும் SPB (343 மெ.தொ) போன்ற குறைவான கொள்ளளவு உற்பத்திகள் பொருத்தமான சந்தை கேள்விகளுக்கு வசதியளிக்கின்றன.

#### முத்துராஜவெல முனையம்

ஓட்டோ டீசல் (113,633 மெ.தொ) மற்றும் ஒக்டேன் 92 பெற்றோல் (95,105 மெ.தொ) என்பவற்றுக்கு முன்னுரிமையளிக்கின்றது.

**மொத்தச்சாலைகள் கொள்ளளவுகள் 24,881 மொ.தொ ஆவதுடன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| உற்பத்தி | ஓட்டோ டீசல் மெ.தொ | பெற்றோல் 92. மெ.தொ | மண்ணெண்ணெய் மெ.தொ | மொத்தம் மெ.தொ |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 1059 | 312 | 129 | 1,500 |
| பதுளை | 1,149 | 155 | 52 | 1,355 |
| மட்டக்களப்பு | 696 | 383 | - | 1,079 |
| காலி | 1,826 | 600 | 254 | 2,680 |
| ஹப்புத்தளை | 162 | 120 | 24 | 306 |
| காங்கேசன்துறை | 10,920 | 337 | 602 | 11,859 |
| கொட்டகல | 1,104 | 239 | 174 | 1,517 |
| குருநாகல் | 1,250 | 870 | - | 2,120 |
| மாத்தறை | 315 | 200 | 50 | 565 |
| பேராதெனிய | 1,306 | 471 | - | 1,778 |
| IRD வவுனியா | 79 | - | 44 | 123 |
| மொத்தம் | 19,867 | 3,686 | 1,328 | 24,881 |

தொழிற்பாட்டு வினைத்திறன் நிறுவனத்தின் வெற்றிக்கு முக்கியமாக விளங்குகின்றது. செயன்முறைப்படுத்தலை உச்சப்படுத்துவதற்கும் செயற்பாடற்ற நேரத்தை குறைப்பதற்கும் செலவுகளை குறைத்து சேவை வழங்களை மேம்படுத்துவதற்கும் களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பில் நாம் சிறந்த நடத்தைகளை பின்பற்றுகின்றோம்.

## களஞ்சியக் கொள்ளளவு பகுப்பாய்வு




## விநியோகத் தொழிற்பாடுகள்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் இலங்கை முழுவதும் எரிபொருள் விநியோகத்தில் இன்றியமையாத பங்காற்றி தேசிய கேள்வியினை நிறைவு செய்வதற்கு இடைத்தடங்கலற்ற பெற்றோலிய உற்பத்திகளின் வழங்கலை உறுதிசெய்கின்றது.

நாம் சேவை வழங்கும் நிறுவனங்கள

- இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (சிபெற்கோ)
- லங்கா இன்டியன் ஒயில் கம்பனி (எல்ஐஓசி)
- சினோபெக் எனர்ஜி லங்கா பிரைவட் லிமிடெட்
- ஆர்எம் பார்க்ஸ் பிரைவட் லிமிடெட்
- யுனைடெட் பெற்றோலியம் லங்கா பிரைவட் லிமிடெட்

செயல்திறன்மிக்க விநியோகத்திற்காக உபாய ரீதியாக அமையப்பெற்ற முனையங்களிலும் (கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல) பிராந்திய சாலைகளிலும் நாம் அனுகூலம் பெறுவதுடன் புகையிரதம், குழாய்த்தொகுதி மற்றும் வீதித் தாங்கிகளை உபயோகிக்கின்றோம்.

2024 நிதியாண்டில் விநியோகிக்கப்பட்ட மொத்த அளவு

- **மொத்தம்** : 4,404,557 கி.லீ
    - சிபெற்கோ :3,385,410 கி.லீ (77%)
    - எல்ஐஓசி : 318,332 கி.லீ (7%)
    - சினோபெக் 439,462 கி.லீ (10%)
    - ஆர்எம் பார்க்ஸ் 218, 572 கி.லீ (5%)
    - யுனைடெட் 42,781 கி.லீ (1%)

**முக்கிய சிறப்புகூறுகள்**

- ஓட்டோ டீசல் 34.99% பங்குடன் விநியோகத்தில் முன்னணி வகித்தது
- ஒக்டேன் 92 பெற்றோல் அதனைத் தொடர்ந்து 34,07%.
- விமான எரிபொருள் 12.66% விமான போக்குவரத்திற்கு அத்தியாவசியமானது
- உலை எண்ணெய் 9.24% பங்களித்தது, அநேகமாக மின் உற்பத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

எஞ்சியிருக்கின்ற 5 உற்பத்திகளும் குறிப்பான கைத்தொழில் மற்றும் பொருத்தமான சந்தைப் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து இது இலங்கையில் பல்வகை தாக்குப்பிடிக்கத்தக்க பெற்றொலிய வழங்கல் சங்கிலியொன்றுக்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் கடமைப் பொறுப்பிற்கு பங்களித்தன.

கம்பனியின் உட்கட்டமைப்பானது ஒவ்வொன்றும் குறிப்பான பிராந்திய எரிபொருள் கேள்விகளை நிறைவு செய்கின்ற வகையில் உருவாக்கப்பட்ட மாத்தறை, பேராதனை, ஹப்புத்தளை, காங்கேசன்துறை, கொட்டகல, குருநாகல், அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, மற்றும் காலி, அமையப்பெற்ற பல்வகை சாலைகளை கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களும் உள்ளடக்குகின்றது.

இவற்றில் முத்துராஜவெல முனையமும் கொலன்னாவ முனையமும் 500 மில்லியன் லீற்றர்களை விஞ்சுகின்ற இணைந்த களஞ்சிய கொள்ளளவுகளுடன் முக்கிய களஞ்சிய மையங்களாக விளங்குகின்றன. முத்துராஜவெல முதன்மையாக லங்கா ஓட்டோ டீசல் மற்றும் பெற்றோல் 92 ஒக்டேனை களஞ்சியப்படுத்துகின்ற அதேவேளை கொலன்னாவ கைத்தொழில் மண்ணெண்ணெய், சுப்பர் டீசல், பலதரத்திலான பெற்றோல், விமான எரிபொருள் மற்றும் இரசாயன கரைசல்கள் உள்ளடங்களாக பல்வகை பெற்றோலிய உற்பத்திகளை கையாளுகின்றது. இம்முனையங்கள் கம்பனியின் வழங்கல் சங்கிலியில் முக்கிய பங்காற்றி நாட்டின் மொத்த எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோக தேவைகளுக்கு ஆதரவளிக்கின்றன.

நிறுவனத்தின் தயாரிப்பு பட்டியலானது பெற்றோல் (92 மற்றும் 95 ஒக்டேன்), ஓட்டோ டீசல், சுப்பர் டீசல், மண்ணெண்ணெய், கைத்தொழில் மண்ணெண்ணெய், உலை எண்ணெய், விமான எரிபொருள் மற்றும் படிக எண்ணெய் அடங்கலாக பல்வேறு வகையான எரிபொருட்களை உள்ளடக்கியதாகும். அறிக்கையிடும் காலப்பகுதியில் நிறுவனம் 4.4 பில்லியன் லீட்டருக்கும் அதிகமான மொத்த விற்பனை அளவை முகாமைசெய்து, தேசிய எரிசக்தி துறையில் அதன் முக்கிய பங்கை பிரதிபலித்தது. முக்கிய தயாரிப்பு விற்பனைகள் ஏறத்தாழ 1.5 பில்லியன் லீட்டர் ஓட்டோ டீசல், 1.54 பில்லியன் லீட்டர் 92 ஒக்டேன் பெற்றோல் மற்றும் 550 மில்லியன் லீட்டருக்கும் அதிகமான விமான எரிபொருள் ஆகியவை அடங்கும்.

## உபாய ரீதியான முக்கியத்துவம், புவிசார் அரசியல் மற்றும் பேரண்ட பொருளாதாரப் பின்னணி

உலகில் மிகவும் வினைத்திறன் மிக்க பெற்றோலிய முனையத் தொழிற்படுத்துநராக விளங்குவதற்கான எமது தொலைநோக்குடன் அணிசேர்ந்து சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெடின் தொழிற்பாடுகள் தேசிய எரிசக்தி கேள்விகள், புவிசார்அரசியல் இயக்கவாற்றல்கள் மற்றும் நிலைபெறுதன்மைக் குறிக்கோள்கள் என்பவற்றின் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பெற்றோலிய களஞ்சியத்தின் தலைமை வகிக்கும் கட்டுக்காவலர் என்ற ரீதியில் நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தேசிய மின்கட்டமைப்பின் 30% சக்திக்கு நேரடியாகவும் (சிபெற்கோ/ எல்ஐஓசி வழங்கல் வாயிலாக) 1,110 + சில்லறை விற்பனை நிலையங்களுடாக தேசிய எரிபொருள் தேவைப்பாட்டிற்கும் அத்துடன் உட்கட்டமைப்பு (பண்டாரநாயக்க விமான நிலையம், இராணுவத்தளங்கள்) மற்றும் தேசிய சக்தி முதுகெலும்பாக பணியாற்றுகின்றது.

உலகளாவிய எரிபொருள் தளம்பலுக்கு (சராசரி பிரன்ட் மசகெண்ணெய்: பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ 82.5) மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறைகள் என்பவற்றுக்கு மத்தியில் நிறுவனம் 4.4 மில்லியன் கிலோ லீற்றர்களை விநியோகம் செய்துள்ளது. இது 6 மில்லியன் வாகனங்களுக்கு ஆண்டுதோறும் போதுமானதாகும். இதற்கு மேலதிகமாக இந்தியா - இலங்கை இடையிலான உபாயரீதியான பங்குடமையூடாக சக்தி பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு திருகோணமலை தாங்கி பண்ணை விரிவாக்கம் மீதும் கூட்டாக பணியாற்றியது.

| உற்பத்திப் பெயர் | சிபெற்கோ கி.லீ | எல்ஐஓசி கி.லீ | சினோபெக் கி.லீ | ஆர்எம் பார்க்ஸ் கி.லீ | யுனைடெட் கி.லீ | மொத்தம் கி.லீ | % பங்கு |
|---|---|---|---|---|---|---|---|
| பெற்றோல் | 964,344 | 172,359 | 224,060 | 115,216 | 24,578 | 1,500,557 | 34.07% |
| ஒட்டோ டீசல் | 1,074,752 | 142,085 | 208,436 | 98,677 | 17,371 | 1,541,321 | 34.99% |
| சுப்பர் டீசல் | 28,005 | 3,888 | 6,966 | 4,679 | 832 | 44,370 | 1.01% |
| மண்ணெண்ணெய் | 149,503 | - | - | - | - | 149,503 | 3.39% |
| கைத்தொழில் மண்ணெண்ணெய் | 5,262 | - | - | - | - | 5,262 | 0.12% |
| உலை எண்ணெய் 1.5% | 406,915 | - | - | - | - | 406,915 | 9.24% |
| படிக எண்ணெய் | 197,241 | - | - | - | - | 197,241 | 4.48% |
| SPB | 1,584 | - | - | - | - | 1,584 | 0.04% |
| விமான எரிபொருள் | 557,804 | - | - | - | - | 557,804 | 12.66% |
| மொத்தம் | 3,385,410 | 318,332 | 439,462 | 218,572 | 42,781 | 4,404,557 | 100% |
| மொத்த அளவின் % | 77% | 7% | 10% | 5% | 1% | 100% | |

## பங்குடமையாளர் - மையப்படுத்திய தொழிற்பாட்டு மாதிரி ஓரே பார்வை

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் பொதுமக்கள் சேவை மற்றும் வர்த்தக ரீதியான வினைத்திறன் என்பவற்றுக்கிடையில் தொழிற்படுகின்றது. மின்சக்தி எரிசக்தி அமைச்சு, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி, போக்குவரத்து தொழிற்படுத்துனர்கள், பிராந்தியச் தொகைச்சாலைகள் மற்றும் பொதுமக்கள் உள்ளடங்கலாக எமது பங்குதார்கள் எமது தொழிற்பாடுகளில் நம்பகத்தன்மை, பாதுகாப்பு மற்றும் ஒழுக்கரீதியான நடத்தை என்பவற்றை எதிர்பார்க்கின்றனர்.

| பங்குடமையாளர் | அவர்கள் எதிர்பார்ப்பது யாது | நிறுவனம் எவ்வாறு நிறைவேற்றுகின்றது | உருவாக்கப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|
| அரசாங்கம் | சக்தி பாதுகாப்பு, இணங்குவித்தல் | உபாய ஒதுக்குகள், கொள்கை ஒத்திசைவு | தேசிய சக்தி உறுதிப்பாடு |
| சிபெற்கோ மற்றும் இறக்குமதியாளர்கள் | வினைத்திறன் மிக்க எரிபொருள் கையாளுதல் | நவீன முனையங்கள், 24/7 தொழிற்பாடுகள் | சீரான வழங்கல் சங்கிலி |
| ஊழியர்கள் | பாதுகாப்பு, வளர்ச்சி, அங்கீகாரம் | பயிற்சி, ஆரோக்கியம், பாதுகாப்பு, சுற்றாடல் மீது கவனம் செலுத்துதல். திறமை அடிப்படையில் விருதுகள் | உயர்வான நன்நடத்தை, பூச்சிய விபத்துகள் |
| வாடிக்கையாளர்கள் (வியாபாரத்திலிருந்து வியாபாரத்திற்கு) | நம்பகமான தரமான எரிபொருள் வளங்கல் | டிஜிட்டல் ரீதியாக தடமறிதல், தரக்கட்டுப்பாடு | வலுவான நம்பிக்கை, வளர்ச்சியடைந்த தளம் |
| வழங்குநர்கள் | நியாயமான நியதிகளும், வெளிப்படைத்தன்மையும் | இ-பெறுகை உடனடி கொடுப்பனவுகள் | நீண்டகால பங்குடமைகள் |
| சமூகங்கள் | சுற்றாடல் ரீதியான கவனம், சமூக ரீதியாக உள்ளடக்குதல் | நிறுவன சமூக பொறுப்பு முயற்சிகள், பசுமை நடத்தைகள் | தொழிற்படுவதற்கான சமூக உரிமம் |
| கணக்காய்வாளர்கள் மற்றும் நிதியளிப்போர் | நேர்மை, கட்டுப்பாடு அறிக்கையிடல் | ஆற்றல் வாய்ந்த ஆளுகை, IFRS உடன் இணங்குதல் | நம்பகத்தன்மை மற்றும் ஆளுகை |
| பொதுமக்கள் மற்றும் ஊடகம் | தெளிவான தொடர்பூட்டல், பொறுப்புக்கூறல் | உத்தியோகபூர்வ விளக்கமளித்தல், டிஜிட்டல் ரீதியாக சென்றடைதல் | வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் |

## தொழில்நுட்பவியல் இசைவும் டிஜிட்டல் மயப்படுத்தலும்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் தொழிற்பாட்டு வினைத்திறன் பாதுகாப்பு மற்றும் சேவை நம்பகத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் டிஜிட்டல் மாறுதல் முயற்சிகளையும் தொடர்ச்சியாக தழுவிக்கொள்கின்றது.

- திறன்வாய்ந்த கையிருப்பு பதிவேடு - கச்சிதமான கையிருப்பு மட்டங்களையும் சீரான வழங்கல் பாய்ச்சலையும் தன்னியக்கப்படுத்தப்பட்ட டிஜிட்டல் தடமறிதல் உறுதி செய்கின்றது.
- வாகனத்தொகுதி உச்சபயன்பாடு - புவியியல் அமைவிட முறைமை தொழில்நுட்பங்கள் எரிபொருள் விநியோகத்தை சீரமைத்து வினைத்திறனையும் பாதுகாப்பையும் அதிகரிக்கின்றன.
- இணைக்கப்பட்ட முறைமைகள் - மத்தியமயப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமை மற்றும் நிகழ்நேர அறிக்கையிடல்
- தரவினால் இயக்கப்படும் நுண்நோக்குகள் - கேள்வியினை முன்கணிப்பு செய்வதற்கும் உச்ச செயலாற்றத்தை பேணுவதற்கும் பகுப்பாய்வுகள் எமக்கு உதவுகின்றன.
- டிஜிட்டல்மயமாக்கம் - குறைந்தபட்ச ஆவணப்படுத்தலுடன் நிகழ்நேர தரவுப் பெறுவழியினை இயலச்செய்வதற்கு சம்பள கொடுப்பனவுகளின் டிஜிட்டல் மயமாக்கம்

## ஒழுங்குபடுத்தல் மற்றும் இணங்குவித்தல் தோற்ற அமைப்பு

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் தொழிற்பாடுகள் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சக்தி எரிசக்தி அமைச்சு, தேசிய சுற்றாடல் அதிகாரசபை, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அலுவலகம் உள்ளடங்கலாக ஆற்றல் வாய்ந்த ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினால் ஆளப்படுகின்றது.

| துறை | முக்கிய ஒழுங்கு படுத்துனர்கள் மற்றும் சட்டங்கள் | கவனம் செலுத்தும் துறைகள் |
|---|---|---|
| சக்தி மற்றும் துறை ஆளுகை | • மின்சக்தி எரிசக்தி அமைச்சு<br>• இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு<br>• 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் | கொள்கை, துறை ஒழுங்குபடுத்தல், உரிமங்கள் |
| சுற்றாடல் மற்றும் நிலைபெறு தன்மை | • மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>• தேசிய சுற்றாடல் சட்டம்<br>• சுற்றாடல் அமைச்சு | புகைவெளியேற்றம், கழிவு, தாக்க மதிப்பீடு, கணக்காய்வுகள் |
| ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் இணங்குவித்தல் | • தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்<br>• தேசிய தீயணைப்பு ஒழங்குவிதிகள் | பணியிட பாதுகாப்பு, தீப் பாதுகாப்பு இடர்நேர்வு கட்டுப்பாடு |
| வர்த்தகம் மற்றும் சுங்கம் | • இலங்கைச் சுங்கம்<br>• முதலீட்டுச் சபை | இறக்குமதிகள், தீர்வைகள், விலக்களிப்புகள் |
| நிதியியல் இணங்குவித்தல் | • உள்நாட்டு இறைவரித் திணைக்களம்<br>• இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம்/சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமம் | தேசிய கணக்காய்வு சட்டம் வரி, கணக்காய்வு, நிதியியல் வெளிப்படைத்தன்மை |
| தொழில் மற்றும் மனிதவள ஒழுங்கவிதிகள் | • தொழில் அமைச்சு<br>• தொழில் சட்டங்கள் மற்றம் கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | பணியாளர் உரிமைகள், நலன்கள், இணங்குவித்தல் |
| பெறுகை மற்றும் ஆளுகை | • தேசிய பெறுகை வழிகாட்டல்கள் | வெளிப்படையாக சேவை பெற்றுக்கொள்ளல், பொதுப் பொறுப்புக்கூறல் |
| தரமும் தர நியமங்களும் | • இலங்கை கட்டளைகள் நிறுவகம்<br>ISO சான்றுபடுத்தல்கள் | உற்பத்தித்தரம், தரநிர்ணயிப்படுத்தல் |
| சர்வதேச கடப்பாடுகள் | • சர்வதேச கடல்சார் அமைப்பு | கடல்சார் எரிபொருள் இணங்குவித்தல் நீர்க்கள எரிபொருள் நியமங்கள் |

## உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு திரு.மகேந்திர ஜயசேகர, FCMA, CA (Australia), வியாபார நிருவாகம் முதுமானி என்பவர் 2020 ஒக்டோபர் தொடக்கம் தலைமை வகித்தார். உள்ளக கணக்காய்வு அணி நிதி, தகவல் தொழில் நுட்பம், தகவல் பாதுகாப்பு, மோசடி விசாரணை என்பவற்றில் கலந்த நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் உலகளாவிய சிறந்த நடத்தைகளிலிருந்து இப்பிரிவு அனுகூலம் பெறுகின்றது.

## சுற்றாடல், ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நிலைபெறு தன்மை தூண்டல்கள்

சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் அதிகரித்த அளவில் கண்டிப்பானவையாக தோற்றம் பெற்றுள்ளன. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் தேசிய புகைவெளியேற்ற நியமங்கள், ஆபத்தான பொருட்களை கையாளும் விதிகள் மற்றும் தொழில்சார்ந்த ஆரோக்கிய கட்டமைப்பக்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்கு அதன் தொழிற்பாடு சார்ந்த நெறிமுறைகளை செயலாக்கத்துடன் தரப்படுத்தியுள்ளது. இவ்வாண்டின் போது கசிவு எதிர்வினையாற்றல் தயார்நிலை மற்றும் தீப் பாதுகாப்பு தயார்நிலை என்பவற்றில் நாம் குறிப்பிடத்தக்க மேம்படுத்தல்களை அடைந்துகொண்டோம்

| சுற்றாடல், ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நிலை பெறுதன்மை தூண்டல்கள் | உபாய ரீதியான கவ-னம்செலுத்தல் | நடைமுறைப் படுத்தப்படும் முக்கிய நடவடிக்கைகள் | உருவாக்கப்படும் தாக்கம் |
|---|---|---|---|
| சுற்றாடல் | உயிர்ச்சூழலியல் சுவடுகளை குறைத்தல் | புகைவெளியேற்ற கண்காணிப்பு, நீர் பாதுகாப்பு, கழிவு வேறாக்கல் | மேம்பட்ட இணங்குவித்தல், குறைக்கப்பட்ட காபன் வெளியேற்றம் |
| ஆரோக்கியம் | ஊழியர்களின் நலனோம்புகையை உறுதிசெய்தல் | வருடாந்த மருத்-துவ பரிசோதனை, விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் | சமூகமளிக்காமை குறைக்கப்படுதல், ஆரோக்கிய தொழிற்படை |
| பாதுகாப்பு | பூச்சிய ஆபத்து கலாசாரம் | பாதுகாப்பு ஒத்திகை, தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண இணங்குவித்தல் நிகழ்வு அறிக்கையி-டல் முறைமைகள் | பூச்சிய விபத்துக்கள், குறைவான நிகழ்வு வீதம் |
| நிலை பெறுதன்மை | நீண்டகால மூலவள வினைத்திறன் | சூரிய சக்தி முன்னோடி திட்டங்கள், எரிபொருள் இழப்பை குறைத்தல் | தொழிற்பாட்டு ரீதியான மீதப்படு-த்தல்கள், பசுமை சார்ந்த நற்பெயர் |
| ஒழுங்குபடுத்-தல் இணங்கு வித்தல் | தேசிய மற்றும் உலக-ளாவிய சுற்றாடல், ஆரோக்கியம், பா-துகாப்பு மற்றும் நிலைபெறுதன்மைத் தரநியமங்கள் | இணங்குவித்தல் கணக்காய்வுகள் | அடையாளப் படுத்தலும் இடர்நேர்வுத் தணிப்பும் |
| பங்குதாரர் ஈடுபாடு | அனைவரையும் உள்ளடக்குகின்ற மற்றும் வெளிப்பை-டயான சுற்றாடல், ஆரோக்கியம், பாதுகா-ப்பு மற்றும் நிலைபெறு தன்மை தொடர்பூட்டல் | நிலைபெறுதன்மை அறிக்கையிடல், சமூக ஆலோசனைகள் | உயர்வான நம்பிக்கை, வலுவான பங்குதாரர் உறவுகள் |

## எதிர்கால வாய்ப்பும் உபாய ரீதியான பதிலிறுத்தலும்

எதிர்காலத்தை நோக்கி சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் சக்தி பாதுகாப்பு, நிலைபெறத்தக்க உட்கட்டமைப்ப முதலிடு, தொழிற்பாடு சார்ந்த உன்னதம் என்பவற்றில் தொடர்ந்தும் கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. வரவிருக்கும் ஆண்டுகளுக்கான உபாய ரீதியான குறிக்கோள்கள் உள்ளடக்குவன:

- மூலதன தரமுயர்த்தல்கள் ஊடாக களஞ்சிய மற்றும் விநியோக தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துதல்.
- வழங்கல் சங்கிலி தொடர்பு மையங்கள் முழுவதும் டிஜிட்டல் ரீதியான ஒருங்கிணைப்பினை துரிதப்படுத்தல்.
- சுற்றாடல், ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நிலைபெறுதன்மை செயலாற்றுகை கண்காணித்தலையும் நிலைபெறத்தக்க அறிக்கையிடலையும் விரிவுபடுத்தல்
- தேசிய சக்தி பன்முகப்படுத்தல் உபாயங்களுக்கு ஆதரவளித்தல

எமது செயலூக்கம் மிக்க இடர்நேர்வு முகாமைத்துவம், ஆளுகை வலிமை மற்றும் பங்குதாரர் பெறுமதிக்கான கடமைப்பொறுப்பு என்பன அதிகரித்தளவில் சிக்கலான தொழிற்பாட்டு சூழலொன்றில் பயணிப்பதற்கான மையமாக விளங்கும்.

# நிதியியல் மூலதனம்

## நிதியியல் மீளாய்வு

நிதியியல் மூலதனமானது பெற்றோலிய துறைக்கான விசேடத்துவம் மிக்க சேவைகளை வழங்குவதற்கான எமது இயலுமையின் முதுகெலும்பினை தோற்றுவிக்கின்ற அதேவேளை நீண்டகால தொழிற்பாட்டு தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் பங்குடமையாளர் நம்பிக்கையினையும் உறுதிசெய்கின்றது. 2024 ஆம் ஆண்டில் எமது இரு பங்குடமையாளர்களினதும் எதிர்பார்க்கைளுடனும் தொழிற்துறையின் தீவிரதன்மையுடனும் அணி சேர்ந்த முன்மதிமிக்க மற்றும் வெளிப்படையான நிதியியல் அணுகுமுறையை நாம் பேணினோம்.

எமது நிதியியல் உபாயமானது திரவத்தன்மையினை நிலைநிறுத்துதல், தொழிற்படு மூலதனத்தை உச்சப்படுத்துதல் மற்றும் உபகரணங்கள், பாதுகாப்பு அத்துடன் தொழிற்பாட்டு வினைத்திறன் என்பவற்றில் முக்கியமான முதலீடுகளுக்கு ஆதரவளித்தல் என்பவற்றை மையப்படுத்தியது. எமது நிதியியல் செயலாற்றம், மூலதன கட்டமைப்பு அத்துடன் முன்னெடுக்கப்படுகின்ற பணி ஒப்பந்தங்களுக்கு நாம் எவ்வாறு நிதியங்களை பணிக்கமர்த்தியுள்ளோம், தொழிற்படை தயார் மற்றும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகள் பற்றி இப்பிரிவு விபரிக்கின்றது.

## நிதியியல் செயல்திறன்

### வருவாய்

2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற நிதியாண்டுக்காக கம்பனி மொத்த வருமானமாக முன்னைய ஆண்டின் ரூ 10.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 86% அதிகரிப்பை எடுத்துக்காட்டி ரூ 18.9 பில்லியன் கொண்ட தொகையைப் பதிவுசெய்தது. ஆண்டின் போது செயன்முறைப்படுத்தல் வருமானம் மொத்த வருவாயில் 77% ஆகவிருந்த அதேவேளை போக்குவரத்து வருமானம் 23% இற்குப் பங்களித்து, பாரிய பங்கிற்கு தொடர்ந்தும் செயன்முறைப்படுத்தல் பங்களிப்புக்கு மத்தியில் வருமான வளர்ச்சிக்கு அதிகூடிய பங்களிப்பு போக்குவரத்து வருமானத்திலிருந்து கிடைத்தது. போக்குவரத்து கட்டணங்களில் அதிகரிப்பு, விலைப்பட்டியலிடல் முறையில் நடைமுறை சார்ந்த மாற்றம் என்பன இதற்கு காரணமாக அமைந்தது. ஒட்டுமொத்த விற்பனை அளவு ஆண்டுக்காண்டு 11% இனால் அதிகரித்து மேல்நோக்கிய போக்கில் வருவாய் செல்வதற்கு ஆதரவளித்தது.

விற்பனை அளவு கி.லீ மில்லியன்




### இலாபம்

வருவாயில் அதிகரிப்பினை தொடர்ந்து, மொத்த இலாபம் 2023இன் 3.3 பில்லியனிலிருந்து 2024 இல் 9.3 பில்லியனாக அதிகரித்தது. அதற்கமைய மொத்த இலாப எல்லை 2024 இல் 49% ஆக பதிவுசெய்த அதேவேளை 2023 இல் இது 33% ஆகும்.

வருவாய் மற்றும் மொத்த இலாப எல்லைப் போக்கு (ரூ. மில்)




2024 இல் கம்பனி 25% கொண்ட தொழிற்பாட்டு இலாபத்துடன் ரூ.4.6 பில்லியன் தொழிற்பாட்டு இலாபத்தினை அறிக்கையிட்டு 2023இல் பதிவாகிய 6% தொழிற்பாட்டு நட்ட எல்லையிலிருந்து குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது.

தொழிற்பாட்டு செயலாற்றம்




வரிக்கு முந்திய மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் (ரூ. மில்)




மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டின் போது வரிக்கு முந்திய இலாபம் ரூ 4.9 பில்லியனாக பதிவாகிய அதேவேளை 2023 இல் இது 0.3 பில்லியன் நட்டமாக காணப்பட்டது. வருவாயில்

அதிகரிப்பு ஆண்டுக்கான இலாபத்தை ஏற்படுத்தியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் போது நிருவாகச் செலவுகளில் 12% அதிகரிப்பு காணப்பட்டது. கம்பனியின் ஏனைய வருமானம், ஆய்வுகூட வருமானம், அலுவலர் கடன்கள் மீதான வட்டி வருமானம், மீளளிக்க முடியாத கேள்வி வைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

நிலையான வைப்புகள், ரெப்போக்களிலிருந்து வட்டி வருமானம் என்பவற்றை நிதி வருமானம் உள்ளடக்குகின்றது. ஆண்டின் போது பிரதானமாக முதலீடுகள் அதிகரிப்பு முதலீட்டு வருமானத்தில் உயர்வுக்கு வழிவகுத்தது. இது 9% ஆகவிருந்து. மீளாய்வு செய்யப்படும் ஆண்டுக்கான வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 3.3 பில்லியனாகவிருந்த அதேவேளை 2023 இல் இது ரூ 0.3 பில்லியனாகவிருந்து, கடந்த ஆண்டுகளைவிட உயர்வான செயலாற்றத்தை எடுத்துக்காட்டியது.

கம்பனியில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானமானது பிரதானமாக காணி கட்டடங்கள் மீதான மீள்விலைமதிப்பிட்டு வருவாயையும் வரையறைசெய்யப்பட்ட நலக் கடப்பாடுகள் மீதான கணிப்பீட்டு இழப்பினையும் உள்ளடக்குகின்றது.

## நிதியியல் நிலை

### மொத்த சொத்துகள்




கம்பனியின் சொத்துக்களின் 66% ஆனவை ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் முதலிடப்பட்டு எமது தொழிற்பாடுகளின் மூலதன செறிவுத் தன்மையினை பிரதிபலிக்கின்றது. உட்கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டு இயலளவிற்கான எமது நீண்டகாலக் கடமைப்பொறுப்பை இது எடுத்துக்காட்டி, உறுதியான சேவை வழங்கல் மற்றும் வருவாயீட்டலை உறுதிசெய்கின்றது. சொத்துகளின் கணிசமான பாகம் வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத் தக்கவைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆரோக்கியமான காசுப் பாய்ச்சலை பேணுவதற்கும் தொழிற்படும் மூலதனம் கரைந்து செல்வதை குறைப்பதற்கும் கம்பனி கொடுகடன் இடர்நேர்வையும் கிடைக்கப்பெறத்தக்க புரள்வையும் தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது.

காசு உரித்து மொத்த சொத்துகளின் 7% ஐப் பிரதிநிதித்துவப்படுத்தி குறுங்காலக் கடப்பாடுகளையும் தொழிற்பாட்டு தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு கம்பனி போதுமான திரவத்தன்மையை பேணுவதை உறுதிசெய்கின்றது.




கம்பனியின் சொத்துத்தளம் பௌதீக உட்கட்டமைப்பில் வலுவான அத்திவாரத்தையும், திரவத்தன்மையையும் மற்றும் கிடைக்கப்பெறத்தக்கவைகள் முகாமைத்துவத்திற்கான ஒழுக்கமிக்க அணுகுமுறையினையும் பிரதிபலிக்கின்றது. எமது நிதியியல் மூலதன ஒதுக்கீடானது எமது நீண்டகால வளர்ச்சி உபாயம், வினைத்திறன் மற்றும் விழுமியங்களை பேணிக்காத்தல் என்பவற்றுடன் அணிசேர்ந்து காணப்படுகின்றது. பரிணாம வளர்ச்சியடைகின்ற சந்தைச் சூழலில் தொழிற்பாட்டு ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் நிதியியல் நெகிழ்வுத்தன்மை என்ற இரண்டையும் உறுதிசெய்வதற்கும் எமது சொத்து கலப்பை உகப்பாக்கம் செய்வதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம்.

2024 ஆண்டிறுதியிலுள்ளவாறு ஐந்தொகையானது நடைமுறையற்ற சொத்துக்களை நோக்கி நிறையேற்றப்பட்டிருந்து. இது மொத்த சொத்துக்களின் 69% ஐக் கொண்டிருந்தது. ஆண்டுகாலப்பகுதியில் முக்கிய அபிவிருத்தியாக காணி மற்றும் கட்டடங்களின் மீள்விலைமதிப்பீடமைந்து, நிலையான சொத்துக்கள் கொண்டு செல்லும் பெறுமதியில் ரூ 24 பில்லியனைக் கொண்ட கணிசமான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது.

2024இல் மொத்த சொத்துத்தளம் 90% இனால் வளர்ச்சியடைந்து, 2023இன் ரூ 32.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ 61 பில்லியனை எட்டியது. இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, மீள் விலைமதிப்பீட்டுச் செயற்பாடு மற்றும் மேம்பட்ட தொழிற்பாட்டு செயலாற்றுகை என்ற இரண்டினதும் தாக்கத்தை பிரதிபலித்தது. குறிப்பாக காசும் காசுக்கு சமமானவைகளும் உயர்வான வருவாய் ஈட்டல் மற்றும் நீண்டகாலம் நிலையாக இருக்கின்ற கிடைக்கப்பெறத்தக்கவைகளை வெற்றிகரமாக அறிவிடுதல் மூலம் தூண்டப்பட்டு கணிசமாக உயர்வடைந்தன.

### தொழிற்படு மூலதனம்

கம்பனி, 2019 - 2024 வரையான 06 வருட காலப்பகுதியை விட வலுவான திரவத்தன்மை நிலையினை பேணி முன்மதிமிக்க தொழிற்படு மூலதன முகாமைத்துவத்தையும் நடைமுறைப்பொறுப்புகளுக்கான ஒழுக்கநெறி சார்ந்த அணுகுமுறையினையும் கம்பனி எடுத்துக்காட்டியது.

திரவத்தன்மை பற்றிய முக்கிய குறிகாட்டியான நடைமுறை விகிதம், காலப்பகுதி முழுவதும் தொடர்ச்சியாக 5.0 இற்கு மேல் காணப்பட்டு அதன் குறுகிய கால கடப்பாடுகளை எளிதாக நிறைவேற்றுவதற்கான கம்பனியின் இயலுமையினை எடுத்துக்காட்டுகின்றது. 2024 இல் நடைமுறை விகிதம் 2023 இன் 6.62 உடன் ஒப்பிடுகையில் 5.53 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டைவிட சற்று குறைவாக இருந்த போதிலும் விகிதம் ஆரோக்கியமான திரவத்தன்மை காப்பினை தொடர்ந்தும் எடுத்துக்காட்டுகின்றது.

துரித சொத்து விகிதமும் ஆற்றல்வாய்ந்ததாக விளங்கி, 2023இன் 6.23 உடன் ஒப்பிடுகையில் 2024 இல் 5.28 ஆக பதிவாகியது. நடப்பு பொறுப்புக்கள், 2023இல் ரூ2,262 மில்லியனிலிருந்து 2024 இல் ரூ3,473 மில்லியனாக

அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்து, நடைமுறைச் சொத்துக்களில் வளர்ச்சியினை எதிரீடு செய்து, தொழிற்பாட்டு தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கு குறுகிய கால மூலவளங்களை முனைப்புடன் பணிக்கமர்த்துவதை எடுத்துக்காட்டியது.




## சொத்துப் புரள்வு விகிதம்

சொத்துப் புரள்வு விகிதமானது விற்பனைகளை உருவாக்குவதற்கு அதன் சொத்துக்களை கம்பனி பயன்படுத்தும் வினைத்திறனை அளவிடுகின்றது. 2024 இல் சொத்துப் புரள்வு விகிதம் 40% ஆக காணப்பட்டு, 2023 இன் 31% இலிருந்து மீட்சியினை அடையாளப்படுத்தியது. அதிகரித்த தொழிற்பாட்டு செயலாற்றத்தினால் துணையளிக்கப்பட்டு 2024 இல் ரூ. 18,898 மில்லியனாக வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (முன்னைய ஆண்டிலிருந்து 86% வளர்ச்சி) இம்மேம்படுத்தலுக்கு காரணமாக அமைந்தது. எனினும், காணி மற்றும் கட்டிடங்களின் மீள்விலை மதிப்பீட்டின் பிரதான காரணமாக மொத்த சொத்துத் தளமும் 2023 இன் ரூ 32,228 மில்லியனிலிருந்து ரூ 61,285 மில்லியனாக கணிசமாக விரிவடைந்தது.




## பங்குரிமைமூலதனமும் பொறுப்புகளும்

2024 இல் கம்பனியின் சொத்துகளில் 75% நிதியளித்தலுடன் ரூ.46 பில்லியன் கொண்ட பங்குடமையாளர் நிதியங்களைக் கொண்டு நிறுவனம் நன்கு மூலதனமாக்கப்பட்டிருந்தது. கம்பனி 2016 இல் அனைத்து கடன்பெறுதல்களையும் செலுத்தியதுடன் இவ்வாண்டில் புதிய கடன்பெறுதல்கள் எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. நிறுவனத்தின் மொத்தப் பொறுப்பு 2023 இன் ரூ.5.0 பில்லியனிலிருந்து 2024 இல் ரூ. 14 பில்லியனாக அதிகரித்தது.

மூலதனக் கட்டமைப்பானது ஆரோக்கியமான காப்புடன் மாற்றமின்றி விளங்கி, எதிர்கால வளர்ச்சி முயற்சிகளுக்கு நிதியளிக்கின்ற அதேவேளை நிதியியல் நெகிழ்ச்சித்தன்மையும் தாக்குப்பிடிக்கும் தன்மையும் பேணுவதற்கு கம்பனியை இடம்பெறச்செய்தது.




## பங்குரிமை மீதான ஆதாயம்

பங்குரிமை மீதான ஆதாயத்தை கம்பனி முன்னைய ஆண்டின் 0.1% உடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டுக்கு 7% ஆகப் பதிவுசெய்து. 2024 இல் சடுதியான மீட்சியடைதல் கம்பனியின் புதுப்பிக்கப்பட்ட நிதியியல் வலிமைக்கும் தொழிற்பாட்டு தாக்குப்பிடிக்கும் தன்மைக்கும் சாதமான குறிகாட்டியாக அமைந்துள்ளது.




## முடுக்கு மற்றும் மூலதனக் கட்டமைப்பு

ஒட்டுமொத்தமாக கம்பனியின் கடன்பெற்ற நிதியத்துக்கான பங்குரிமை விகிதம் 2023 வரை குறைவாகவும் உறுதியாகவும் காணப்பட்டு ஆரோக்கியமான வலிமையான நிதியியல் ஆராக்கியத்தை எடுத்துக்காட்டுகின்றது. கம்பனியின் கடன் பெற்ற நிதியத்துக்கான பங்குரிமை விகிதம் முன்னைய ஆண்டின் தொடக்கத்தில் 22% உடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 31% ஆக அதிகரித்துள்ளது.







## பங்குடமையாளர் பெறுமதி உருவாக்கம்

| | 2024 | 2023 |
|---|---|---|
| பங்கொன்றுக்கான உழைப்புக்கள் (ரூ) | 4.51 | 0.05 |
| பங்கொன்றுக்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ) | 62 | 35 |

2023 மற்றும் 2024 இற்கிடையில் பங்கொன்றுக்கான உழைப்பு மற்றும் பங்கொன்றுக்கான தேறிய சொத்துப் பெறுமதி இரண்டிலும் கணிசமான அதிகரிப்பு கம்பனியின் நிதியியல் ஆரோக்கியத்திலும் பங்குடமையாளர் பெறுமதியிலும் வலுவான மேம்படுத்தலை பிரதிபலிக்கின்றது. நிலையான எதிர்கால வளர்ச்சிக்கான வெற்றிகரமான உபாய ரீதியான முன்முயற்சிகள் மற்றும் மேம்பட்ட இலாபத்தன்மை அத்துடன் கம்பனியின் நிலை என்பவற்றை இது எடுத்துக்காட்டுகின்றது.

# தயாரிக்கப்பட்ட மூலதனம்

## கொலன்னாவ விநியோக நிலையத்திலிருந்து கொழும்புத் துறைமுகத்தின் சேரம் வாயில் வரை ஏற்கனவே காணப்படுகின்ற 10" குழாயினை புதிய 18" விட்ட குழாயினைக் கொண்டு மாற்றீடு செய்தல்

சிலோன் பெற்றோலியம் ஸ்ரோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட், கொழும்பு துறைமுகத்தின் சேரம் வாயிலில் இருந்து கொலன்னாவ விநியோக நிலையத்திலிருந்து செல்லுகின்ற பழமையான 10" விட்டக் குழாயினை 18" புதிய குழாயினைக் கொண்டு மாற்றீடு செய்வதற்கான உபாய ரீதியான கருத்திட்டத்தினை தொடங்கியுள்ளது. இத்தரமுயர்த்தலானது எரிபொருள் கொண்டுசெல்லல் உட்கட்டமைப்பை நவீனமயப் படுத்துவதற்கும் பெற்றோலிய உற்பத்திகளின் இடைத் தடங்கலற்ற வழங்கலை உறுதிசெய்வதற்குமான கம்பனியின் பரந்த முயற்சியின் பாகமொன்றாகும்.

தற்போது இலங்கை புகையிரதத்திற்கு சொந்தமான 5 நிலக்கீழ் குழாய்கள் கொழும்பு துறைமுகத்தையும் கொலன்னாவையும் தரையூடாக இணைக்கின்றன. எனினும், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளைக் கொண்டுசெல்வதற்கு இரண்டு அதாவது அண்மையில் புனரமைக்கப்பட்ட 12" விட்ட குழாய்த்தொகுதியும் 75 வருடம் பழமையான 10" குழாய்த்தொகுதியும் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன. இக்குழாய்த்தொகுதிகளின் மட்டுப் படுத்தப்பட்ட கொள்ளளவு மற்றும் சீர்குலைந்த நிலைமைகள் காரணமாக சந்தைப்படுத்தும் கம்பனிகள் அதிகரித்த கப்பல் தாமதச் செலவுகள் மற்றும் நீண்டதாங்கி இறக்குதல் நேரம் அத்துடன் தீவிரமடைந்த கசிவு தொடர்புபட்ட இழப்புகளின் இடர்நேர்வு என்பவற்றை எதிர்கொள்கின்றன.

பாதுகாப்பான மிகவும் நம்பகமான முறைமையொன்றுக்கான இன்றியமையாத தேவையினை கருத்திற்கொண்டு நிறுவனம், மின்சக்தி எரிசக்தி அமைச்சினதும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினதும் ஆலோசனையின் பின்னர் அடிப்படையில் திட்டமிடப்பட்ட 12" விட்ட குழாய்த் தொகுதிக்கு பதிலாக 18" விட்ட குழாய் தொகுதியுடன் முன்னெடுப்பதற்கு தீர்மானித்தது. இத்தீர்மானம் செயன்முறைப்படுத்தல் இயலளவினையும் தொழிற்பாட்டு வினைத்திறனையும் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தும். நடைபாதையினுள் புதிய 18" குழாய்த் தொகுதிக்கான சரியான வழித்தடத்தினை தீர்மானிப்பதற்கு விரிவான வழித்தட நில அளவீடொன்றும் நடாத்தப்பட்டது.

புதிய குழாய்த்தொகுதி கொண்டு செல்லல் தாமதங்களையும் இழப்புகளையும் குறைத்து தேசிய சக்தி பாதுகாப்பினை மேம்படுத்தும். இக்கருத்திட்டம் இலங்கை புகையிரதம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, நீர்வழங்கல் சபை, கொழும்பு மாநகரசபை போன்ற வேறு முக்கிய பங்குதாரர்களுடனான கூட்டிணைப்புடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. பொருட்கள் கொள்வனவு மற்றும் குழாய்த்தொகுதி நிர்மாணம் என்பவற்றுக்கான பெறுகைச் செயன்முறை தற்போது முன்னெடுக்கப்படுவதுடன் கருத்திட்டத்தின் நிறைவு 2027 இற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



*கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையம் தொடக்கம் இலங்கை துறைமுக அதிகாரசபை வளாகம் வரையிலான முன்மொழியப்பட்ட குழாய்த்தொகுதி வழி*

## காங்கேசன்துறையில் ஏற்கனவே காணப்படுகின்ற லங்கா மொத்தச் சாலையினை இடமாற்றுதல்

வடமாகாணத்தின் காங்கேசன்துறையிலுள்ள லங்கா மொத்தச் சாலை இலங்கை அரசாங்கத்திடமிருந்து நீண்டகால குத்தகைக்கு பெறப்பட்ட காணியில் புதிய அமைவிடத்திற்கு தற்போது நிறுவனம் இடமாற்றுகின்றது.

06 ஏக்கர் அளவுள்ள புதிய காணி 30 வருடங்களுக்காக நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. பழைய சாலை காணியினைக் மீள் குறிக்கோள்களுக்காக அரசாங்கம் திட்டமிடப்பட்டுள்ளதினால் இவ்விடமாற்றம் அவசியமாகும். புதிய இடத்திற்கு செல்வது எதிர்காலத்தில் தேவையானவாறு சாலையின் உட்கட்டமைப்பினை கட்டுவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் நிறுவனத்தை இயலச்செய்யும்.

இவ்விடமாற்ற கருத்திட்டத்திற்கு தேவையான மொத்த வரவு செலவு திட்டம் ரூ.169.6 மில்லியனாகும். இம்முதலீடு வடமாகாணத்தில் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகத்தின் நீண்டகால அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதுடன் தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களுடன் அணிசேர்ந்துள்ளது.

சாலையின் தொடர்ச்சியான தொழிற்படுதல் பிராந்தியத்தில் தற்போதைய எரிபொருள் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பிரதேசத்தில் எதிர்கால அரசாங்கத்தின் தலைமையிலான அபிவிருத்திகளுக்கான தயார் நிலையினை உறுதி செய்வதற்கும் முக்கியமாக விளங்குகின்றது. கருத்திட்டத்தின் 40% தற்போது நிறைவு பெற்றுள்ளது.



வீதி தாங்கி நிறப்பும் வசதி நிர்மாணம்





தாங்கிப் பண்ணை நிர்மானம்

## சூரிய மின்சக்தி பிறப்பாக்கத்தை ஒருங்கிணைத்தல்

இக்கருத்திட்டம் சக்தி வினைத்திறனை மேம்படுத்துதல், தொழிற்பாட்டு செலவுகளை குறைத்தல் என்பவற்றுக்கான கம்பனியின் நீண்டகால உபாயத்தின் பாகமொன்றாக காணப்படுவதுடன் நாட்டில் எரிசக்தி கலப்பில் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்கினை அதிகரிப்பதற்கான தேசிய இலக்குகளுடன் அணிசேர்ந்துள்ளது. 2021 இல் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அனுமதியைத் தொடர்ந்து நிறுவனம் இலங்கை நிறைபெறத்தக்க சக்தி அதிகாரசபை (SLSEA) மற்றும் லிக்கோ (LECO) கம்பனி என்பவற்றிடமிருந்து தேவையான இசைவுகளை பெற்றுக்கொண்டது. இக்கருத்திட்டம் இருகட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. முதல் கட்டமாக நிறுவனம் 2024 யூலையில் கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்தில் கிடைக்கப்பெறுகின்ற கூரை மேற்பரப்பினை பயன்படுத்தி மின்னிலை மாற்றி TF-02 உடன் இணைப்பதன் மூலம் 300 kWp கூரை மேல் சூரிய மின்பிறப்பாக்க முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தியது.

இரண்டாம் கட்டமாக நிறுவனம் 287 kWp கூரை மேல் சூரிய மின்சக்தி பிறப்பாக்கத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளதுடன் பெறுகைச் செயன்முறை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் 2025 யூலை அளவில் நிறைவுபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சூரிய மின்சக்தி முறைமையினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துகின்றமை தூய தொழில்நுட்பங்களை பின்பற்றுவதற்கும் தேசிய மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குக்கும் பங்களிக்கின்ற அதேவேளை அதன் தொழிற்பாடுகளின் காபன் சுவடுகளை குறைப்பதற்குமான நிறுவனத்தின் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னோக்கிய படிமுறையொன்றை அடையாளப்படுத்துகின்றது.





கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்தில் 300 kWp கூரை மேல் சூரிய மின்பிறப்பாக்க முறைமையொன்றினை பொருத்துதல்

## முத்துராஜவெலயில் 09 ஆம் மற்றும் 10 ஆம் தாங்கிகளில் திருத்தலும் உள்ளக மிதக்கும் கூரை பொருத்தலும்

முத்துராஜவெல முனையத்தில் பெற்றோல் களஞ்சிய தாங்கிகளான 9 ஆம் மற்றும் 10 ஆம் தாங்கிகளில் நிறுவனம் பாரிய திருத்தக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. 10000 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட ஒவ்வொரு தாங்கியும் டீசல் களஞ்சியப்படுத்தலுக்காக 2003 இல் பொருத்தப்பட்டதுடன் பின்னர் அழுத்த காற்று வால்வுகளையும் இணையப்பெற்ற குழாய்த்தொகுதி திருத்தியமைத்தல்களையும் சேர்ப்பதனூடாக பெற்றோல் களஞ்சியப்படுத்தலுக்காக 2021 இல் மாற்றம்செய்யப்பட்டன.

அதிக தளம்பல் மிக்க உற்பத்தியான பெற்றோல் அழுத்த காற்று வால்வு கட்டுப்பாட்டுடனும் கூட நிலையான கூரை தாங்கிகளில் குறிப்பிடத்தக்க ஆவியாதல் இழப்புக்குட்பட்டதாகும், உள்ளக மிதக்கும் கூரைகளின்றி திரவத்திற்கு மேலான ஆவியாதல் இடைவெளி அதிகரித்த ஐதரசன் காபன் வெளியேற்றத்திற்கு இயலச்செய்து, உற்பத்தி இழப்பு மற்றும் அதிகரித்த தீ இடர்நேர்வு என்ற இரண்டுக்கும் வழிவகுக்கின்றது. மாறாக உள்ளக மிதக்கும் கூரைகள் உற்பத்தியின் மேற்பரப்பின் மீது நேரடியாக மிதப்பதன் மூலம் ஆவியாதல் இடைவெளியினை குறைத்து இதன்மூலம் ஆவியாதலை கணிசமாக குறைவடையச்செய்து, தளம்பல் சேதன சேர்க்கையினை வெளியேற்றத்தை குறைவடையச்செய்து, தீ பாதுகாப்பினை மேம்படுத்தி தொழிற்துறை ரீதியான நடத்தைகள் மற்றும் சுற்றாடல் தரநியமங்கள் என்பவற்றுடனான இணங்குவித்தலை நிறைவுசெய்கின்றது.

உள்ளக மிதக்கும் கூரை பொருத்துவதற்கு முன்னர் தாங்கிகள் வடிவமைப்பு மற்றும் தொழிற்பாட்டு ரீதியான தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு முக்கிய கட்டமைப்பு சார்ந்த திருத்தங்களுக்கு உட்படும். அழுத்த சமநிலையினை பேணுவதற்கு கூரை காற்று துளைகளை சேர்த்தல், உள்ளக அலகு வழியினை மேன்படுத்துவதற்கு மேலதிக ஆள்நுழைவுத் துளைகளை பொருத்துதல் ஓட்டு குழாய் நுணிகளை மீள வலிமைப்படுத்தல் மற்றும் உள்ளக மிதக்கும் கூரை முறைமையுடனான ஒத்துப்போகும் தன்மையினை உறுதிசெய்வதற்கு ஏனைய கட்டமைப்பு சார்ந்த சீர்படுத்தல்கள் என்பவற்றை இப்பணிகள் உள்ளடக்குகின்றன.

இத்தொழிற்பாடு மற்றும் பாதுகாப்பு நன்மைகளை அங்கீகரித்து நிறுவனம் 2023இல் உள்ளக மிதக்கும் கூரை பொருத்துதல் கருத்திட்டத்தை தொடங்கியது. உள்ளக மிதக்கும் கூரைகளை பொருத்துதல், 2025 இன் ஆரம்பத்தில் தொடங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்ட திருத்தும் பணிகளுடன் 2025 நடுப்பகுதியளவில் ஒப்படைக்கப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இடைத்தடங்கலற்ற முனையத் தொழிற்பாடுகளை பேணுவதற்காக ஏனைய தாங்கி மீது ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரு தாங்கியினை நிறைவு செய்கின்ற வகையில் பணி கிரமமாக நிறைவேற்றப்படும்.

நிறைவுபெறுதலின் மீது இத்தரமுயர்த்தல் பெற்றோல் ஆவியாதல் இழப்புகளை குறிப்பிடத்தக்களவு குறைத்து, உற்பத்தி கையிருப்பு கட்டுப்பாட்டினை மேம்படுத்தி, பாதுகாப்பினை அதிகரித்து, தாங்கியின் சேவை ஆயுளை நீடிக்கச்செய்யும். இதனூடாக முனைய களஞ்சிய செயலாற்றத்தினை உச்சப்படுத்தும்.





முன்மொழியப்பட்ட 09 ஆம் மற்றும் 10 ஆம் தாங்கிகளில் உள்ளக மிதக்கும் கூரை பொருத்தல்

## கொலன்னாவையில் 21 ஆம் இலக்க தாங்கிக்கான பழுதுபார்த்தல்

கொலன்னாவை எரிபொருள் விநியோக நிலையத்தில் 21 ஆம் நிலைத்தாங்கி 21,324 கனமீற்றர் மொத்த கொள்ளளவுடன் கூடிய (விட்டம் - 41.04மீ, உயரம் 17.06 மீ) 1998 இல் நிர்மாணிக்கப்பட்ட

உள்ளக மிதக்கும் கூரையுடன் கூடிய நிலைக்குத்தான கூம்பு.. நிலையான கூரை வெல்டிங் செய்யப்பட்ட தாங்கியொன்றாகும். பெற்றோல் மற்றும் கழுவும் கடல் நீர் களஞ்சியப்படுத்துவற்காக இது தற்போது பயன்படுத்தப்படுகின்றது. 21 ஆம் இலக்க தாங்கிக்கான பழுதுபார்த்தல்கள் 2022 சனவரியில் நிறுவனத்தின் பரிசோதனை பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விரிவான பரிசோதனையொன்றின் பின்னர் தொடங்கப்பட்டது. துளைகளை அடைத்தல், வெல்டிங் நிரப்புதல் மற்றும் முழுமையான வர்ணப்பூச்சு உள்ளடங்கலாக உடனடி அடித்தள பழுதுபார்த்தல்களுக்கான தேவையினை இப்பரிசோதனை அடையாளப்படுத்தியிருந்தது.

பரிசோதனை பிரிவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பணிப்பாளர்களின் அனுமதியுடன் 21 ஆம் இலக்க தாங்கிக்கான பழுதுபார்த்தல் பணியினை முன்னெடுப்பதற்கு நிறுவனம் தீர்மானித்தது. கட்டமைப்பு சார்ந்த பழுதுபார்த்தல்கள் மற்றும் வர்ணப்பூச்சு என்பவற்றை பணியின் நோக்கெல்லை உள்ளடக்குகின்றது.

திட்டமிடப்பட்ட பணிகள் தாங்கியின் தொழிற்பாட்டு ஆயுளை மேலும் 10 வருடத்தால் நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உடனடியாக பணியை மேற்கொள்வதற்கு தவறுதல் ஒட்டுமொத்த தாங்கி அடிப்பாகத்தையும் மாற்றீடு செய்வதற்கு வழிவகுப்பதுடன் கூரை ஓட்டின் ஆயுட்காலத்தை குறைக்கக்கூடும்.

இதற்கமைய பழுதுபார்க்கும் பணிகள் 2024 நவம்பரில் தொடங்கப்பட்டு 2025 மார்ச்சில் நிறைவுபெறுதல் அட்டவணைப்படுத்தப்பட்டமையுடன் தற்போது முன்னெடுக்கப் படுகின்றது.



*21 ஆம் இலக்க தாங்கிக்கான பழுதுபார்த்தல்*

## கொலன்னாவ மற்றும் மொத்தச்சாலைகளில் வெடிப்பு காப்புவகை மென்ரக ஒளியேற்றும் பொருத்துகளும் ஆளி இணைவுகளும்

சிலோன் பெற்றோலியம் ஸ்ரோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் 40 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த 03 புகையிரத தாங்கி நிரப்பும் நிலைத்தூண்களுடன் கொலன்னாவையில் 06 வலையங்கள் மற்றும் 11 மொத்தச்சாலைகள் உள்ளடங்கலாக 17 நிரப்பும் வசதிகளை தொழிற்படுத்துகின்றது. அண்மைய ஆண்டுகளில் அதிகரிக்கின்ற எரிபொருள் கேள்வியானது மாலை நேர தொழிற்பாடுகளுக்கான தேவையினை அதிகரித்து ஒளியூட்டல் தேவைப்பாடுகள் பற்றிய விரிவான ஆய்வினை தூண்டியது. நிரப்புதல், வாழ்வுத்தொழிற்பாடுகள் மற்றும் குழாய் இணைப்புகள் போன்ற வழமையான பணிகளுக்கும் முத்திரையிடுதல் ஆழமட்ட வாசிப்பெடுத்தல் போன்ற நுண்மையான பணிகளுக்குமான குறிப்பான பணி ஒளியூட்டல் இரண்டுக்குமாக பொதுவான ஒளியூட்டலை இக்கணிப்பீடு உள்ளடக்கியிருந்தது.

12 lux - 300 lux வரையான ஒளியூட்டல் மட்ட வீச்சில் ஆயினும் ஒழுங்கின்றி பரம்பலுடைய பொருத்துக்களை ஆய்வு கண்டறிந்தது. போதுமான ஒளியூட்டுதல் பொருத்துகளை அண்மித்த பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை இடைப்பட்ட வலயங்களில் சுமார் 20 lux இடம்பெற்று தொழிற்படுத்துனர்களுக்கு இன்னல்களைத் தோற்றுவிக்கின்றது. புலப்படுகின்றமை போதாமை மாலை பணிமாற்றுகளில் தாமதத்தை ஏற்படுத்தி பாதுகாப்பு கரிசனைகளை தீவிரப்படுத்தியுள்ளதுடன் பொதுவான மற்றும் பணி ஒளியூட்டல் இரண்டிலும் மேம்படுத்தல்களுக்கான அவசர தேவையினை எடுத்துக்காட்டுகின்றது.

உள்ளக பணியிடத்திற்கான ஒளியூட்டுதல் - ISO 8995:2020 என்ற சர்வதேச தரநியமத்திற்கமைய 300 lux கொண்ட குறைந்த பட்ச வெளிச்சமேற்றல் மட்டம் பணியிடத்தில் பேணப்படுதல் வேண்டும். தற்போது நிலைத்தூண் பணியாற்றும் தளங்கள் முழுவதும் ஒளியேற்றல் ஒழுங்கின்றி காணப்பட்டு தொழிற்பாடுகளின் வினைத்திறன் குறைவடைவதற்கு வழிவகுத்துள்ளது. ஆகையினால் சராசரி பொதுவான ஒளியேற்றும் மட்டத்தை மேம்படுத்துவதற்கும் புதிய வெடிப்பு காப்புவகை பொருத்துக்களை பணியிடத்தில் அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒழுங்கற்ற பரம்பலை குறைப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

இவ்ஒப்பந்தம் 2024 யூலையில் ஒப்பந்தகாரர்களிடம் கையளிக்கப்பட்டு தற்போது பணி முன்னெடுக்கப்படுகின்றது.

முன்னோடி மாதிரி வலயம் 1 புகையிர நிலைத்தூணில் முன்மொழியப்பட்ட ஒளியூட்டல் ஏற்பாடு பற்றிய சாத்தியப் பாட்டினை மதிப்பிடுவதற்கு பரிசோதிக்கப்பட்டது. ஒளியேற்றல் முறைமை வடிவமைப்பு டயலக்ஸ் மென்பொருளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதுடன் தளம் மீதான ஒளியேற்றும் மட்டம் ஏற்கனவே காணப்படுகின்ற 22 lux இலிருந்து 497 lux கொண்ட குறைந்தபட்சம் வரை மேம்படுத்தப்படலாம் என முன்னோடி பரிசோதனை உறுதிப்படுத்தியது. முன்மொழியப்பட்ட முறைமை தொழில்நுட்ப ரீதியாக வளம்பெறத்தக்கதென்றும் இரவு நேர நிலைத்தூண் தொழிற்பாடுகளின் போது தொழிற்பாட்டு வினைத்திறனையும் பாதுகாப்பையும் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்துமென்றும் இது எடுத்துக்காட்டுகின்றது.





வலயம் ஒன்றில் நிலைத்தூண்களில் வெடிப்பு காப்புவகை மென்ரக ஒளியேற்றம் பொருத்துதல்

## கொலன்னாவ எரிபொருள் நிலையத்தில் 03 எண். 15,000 க.மீ, 2 எண். 7000 கமீ, 1 எண்: 5000 க மீ களஞ்சிய தாங்கிகளை பெறுதல். நிர்மாணித்தல், மற்றும் பொருத்துதல்

ரூபா 2,225 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவில் மொத்தமாக 64000 கமீ. கொள்ளளவுடன் கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்தில் 6 களஞ்சிய தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு நிறுவனம் தொடங்கியுள்ளது. இக்கருத்திட்டம் 40 மாதங்களுக்குள் நிறைவு பெறுமென திட்டமிடப்பட்டுள்ளதுடன் இறக்குமதி செய்யப்பட்ட வகைகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட வகைகளுக்கு இடமளிப்பதற்கான களஞ்சிய கொள்ளளவினை அதிகரிப்பதையும் இதனூடாக தரப்பட்ட நேரத்தில் ஏறத்தாள 30 நாட்களுக்கான கையிருப்பை பேணுவதன் மூலம் நாட்டின் எரிபொருள் தேவைப்பாடு நிறைவு செய்யப்படுகின்றதென்பதையும் உறுதி செய்வதை நோக்காக கொண்டது. பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியம் மற்றும் விநியோகம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் மைய வியாபாரத்தினை உருவாக்குவதனால் 03 எண். 15,000 க.மீ, 2 எண் : 7000 கமீ, 1 எண்: 5000 க.மீ. களஞ்சிய தாங்கிகளை பெறுதல், நிர்மாணித்தல், மற்றும் பொருத்துதல் என்பவற்றுக்கான ஒப்பந்தம் 2023 பெப்ரவரிக்கு நிறைவுபடுத்துவதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டு 2019 ஒக்டோபரில் வழங்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட தாங்கிகளின் கொள்ளளவுகள் பின்வருமாறு

| இலக்கம் | உற்பத்தி | கொள்ளளவு (க.மீ) | அடர்த்தி | கொள்ளளவு (மெ.தொ) |
|---|---|---|---|---|
| தாங்கி இலக்கம் பி | பெற்றோல் 92 | 15,000 | 0.745 | 11,175 |
| தாங்கி இலக்கம் சி | பெற்றோல் 95 | 15,000 | 0.745 | 11,175 |
| தாங்கி இலக்கம் டி | ஜெட் ஏ 1 | 15,000 | 0.795 | 11,925 |
| தாங்கி இலக்கம் ஜி | டீசல் 500 பிபிஎம் | 7,000 | 0.840 | 5,880 |
| தாங்கி இலக்கம் எச் | மண்ணெண்ணெய் | 7,000 | 0.795 | 5,565 |
| தாங்கி இலக்கம் ஜே | டீசல் 10 பிபிஎம் | 5,000 | 0.840 | 4,200 |
| | மொத்தம் | 64,000 | | 49,920 |

ஒப்பந்தக்காரரின் மோசமான செயலாற்றம் காரணமாக 2022 சனவரியில் நிறுவனம் ஒப்பந்தத்தை முடிவுறுத்தி ஒப்பந்தத்துடன் ஏகமான தீர்வுக்கு எட்டுவதற்கு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேவேளை பெற்றோலிய சந்தைக்குள் புதிய கம்பனிகளின் நுழைவுடன் களஞ்சிய கொள்ளளவினை விரிவுபடுத்துவதற்கான தேவையினை அங்கீகரித்து கருத்திட்டத்தின் எஞ்சிய பணியினை முன்னெடுப்பதற்கு நிறுவனம் தீர்மானித்தது. 2024 ஓகஸ்டில் புதிய விலைக்கோரல் வெளியிடப்பட்டு 2026 இற்காக கருத்திட்ட நிறைவு திட்டமிடப்பட்டமையுடன் பெறுகைச் செயன்முறை தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

தாங்கிப்பண்ணை நிர்மாணம்





கொலன்னாவ எரிபொருள் நிலையத்தில் தாங்கி பீ மற்றும் தாங்கி டி அத்திவார நிர்மாணம்

# மனித மூலதனம்




## எமது மக்கள்: சிலோன் பெற்றொலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெடின் இதயமாகும்

எமது வெற்றியின் மையக்கருவாக விளங்குவது பொறியாளர்கள், இயக்குநர்கள், சுற்றுச்சூழல் நிபுணர்கள் மற்றும் வாடிக்கையாளர் சேவை வல்லுநர்கள் போன்றோரை உள்ளடக்கும் 2,000+ இற்கும் மேற்பட்ட பல்வகைத் திறமையான வல்லுநர்கள் அடங்கிய எமது குழுவாகும். பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி என்பவற்றுக்கான எமது குழுவின் அர்ப்பணிப்பே சிலோன் பெற்றொலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் (சிபெஸ்டேலி) சக்தி துறையின் முன்னணி நிறுவனமாக ஆக்குகிறது

## எமது நிறுவனப் பொறுப்பு

வெற்றிகரமான நிறுவனம் என்பதன் அர்த்தம் சமூகத்தின் பரந்த நலனுக்குப் பங்களித்தல் என்பதாக நாம் நம்புகின்றோம். சமூக அபிவிருத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைபெறத்தக்க தொழில் நடைமுறைகள் என்பவற்றில் சிலோன் பெற்றொலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. இலங்கையின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆதரவளிப்பதிலும், எமது அனைத்து செயற்பாடுகளிலும் உயர்ந்த நெறிமுறைத் தரநியமங்களை நிலைநிறுத்துவதிலும் நாம் உறுதிபூண்டுள்ளோம்.




## நன்மைகள், வெகுமதிகள் மற்றும் அங்கீகாரம்

சிலோன் பெற்றொலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஊதியக் கட்டமைப்புகள் வெளிப்படைத்தன்மை மிக்கதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தரங்களுக்கெதிரான அதன் நியாமான மற்றும் சமத்துவமான அளவீடுகள் ஆண் பெண்களுக்கிடையில் வேறுபாடின்றி தொழில் முழுவதும் ஒரேமாதிரியான நியமங்களை பேணுகின்றன. அனைத்து ஊழியர்களும் வரைவிலக்கனம் செய்யப்பட்ட தகைமைக் கட்டமைப்பு ஒன்றின் அடிப்படையில் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடுகளுக்கு உட்படுகின்றனர்.

சிபெஸ்டேலி நிறுவனத்தின் நிரந்தர தொழிற்படைக்கு வழங்கப்படும் நன்மைகள் பின்வருமாறு

| நிரந்தர பணியாளர்களுக்கு வழங்கப்படும் நன்மைகள் | விபரம் |
|---|---|
| **விடுமுறை** | |
| வருடாந்த விடுமுறை | 14 நாட்கள் |
| அமைய விடுமறை | 7 வேலை நாட்கள் |
| மருத்துவ விடுமறை | 21 வேலை நாட்கள் |
| மகப்பேற்று விடுமுறை | 84 வேலை நாட்கள் |
| | அரை கொடுப்பனவு 84 நாட்கள் |
| | சம்பளமற்ற விடுமுறை 84 நாட்கள் |
| விபத்து விடுமுறை | பணியில் இருக்கும் போதான விபத்து |
| பதில் விடுமறை | ஒரு மாதத்தில் 4 சனிக்கிழமைகள் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் 2 நாட்கள் விடுமுறையையும் மேலதிக நேரக் கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வர் |
| விசேட விடுமுறை | விசேட நிகழ்வுகளுக்கு (தேர்தல், ஊரடங்கு போன்றன) |
| கடமை விடுமுறை | அலுவலக கடமைகளுக்கான விசேட நிகழ்வுகள் |
| சம்பளமற்ற விடுமுறை | வெளிநாட்டு கற்கைகள், பயிற்சி, செயலமர்வு போன்றன. |
| சம்பள உயர்வு | ஊழியரின் பணி, வரவு மற்றும் நடத்தை மதிப்பீடு செய்யப்படும் |
| கொடுப்பனவுகள் | உணவுக் கொடுப்பனவுகள், பயணக் கொடுப்பனவுகள், முனையக் கொடுப்பனவுகள், வருகைக்கான ஊக்குவிப்பு, பணிமாற்றல் கொடுப்பனவுகள், வருடாந்த விடுமுறைக் கொடுப் பனவுகள், வாழ்க்கைப்படிக் கொடுப்பனவுகள், தொழில்சார் கொடுப்பனவுகள், வாராந்த விடுமுறை நாள் கொடுப்பனவுகள், உத்தியோகபூர்வ தொலைபேசி நன்மைகள். |
| மிகையூதியம் | மருத்துவ மிகையூதியம், வருடாந்த மிகையூதியம் |
| **கடன்கள்** | |
| கடன்கள் - இடர் கடன் | 10 மாத சம்பளம். 60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |

| | |
|---|---|
| கடன்கள் - வீட்டுக் கடன்கள் | காணி அல்லது வீட்டை வாங்குவதற்கு அல்லது வீட்டைக் கட்டுவதற்கு வழங்கப்படும் சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்படும் 300 மாதங்களில் அல்லது ஊழியரின் மீதிச் சேவைக்காலத்தில் எது குறைவானதோ அதில் மீளப் பெறப்படும். |
| கடன்கள் - வீட்டுத் திருத்தக் கடன் | வீட்டைத் திருத்துவதற்கு வழங்கப்படும், 120 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| கடன்கள் - வீட்டு வசதிக் கடன் | தளபாடங்களை வேண்டுவதற்கு. 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| கடன்கள் - சிக்கன சங்கக் கடன் | 03 மாத சம்பளம். 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| கார் கடன் | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மட்டும் ஏற்புடையது எளிமையான சலுகை வட்டி வீதம். 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியது. |
| கடன்கள் - மோட்டார் சைக்கில் கடன் | 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| கடன்கள் - முச்சக்கர வண்டிக் கடன் | 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். |
| **முற்பணங்கள்** | |
| விழாக்கால முற்கொடுப்பனவு | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும் |
| புது வருட முற்கொடுப்பனவு | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும் |
| பாடசாலைப் புத்தகங்களுக்கான முற்பணம் | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும் |
| விருது வழங்கல் | ஊழியரின் சேவை அடிப்படையில் தங்கியுள்ளது |
| நலன்புரி சார் நன்மைகள் | - ஒவ்வொரு ஊழியரும் 3 பகல் மற்றும் 2 இரவுகள் குடும்பத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அல்லது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விடுமுறை பங்களாவில் தங்குவதற்கு உரித்துடையவர்கள்.<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விளையாட்டு கழக நிகழ்வுகளில் பங்குபற்றல்<br>- வருடாந்த சுற்றுலா<br>- இரத்ததான நன்கொடை முகாம்<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முனையங்களில் உள்ள கூட்டுறவுக் கடைகள்<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வளாகத்தில் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்படுகின்றது |
| மருத்துவ நன்மைகள் | - மருத்துவச் செலவு மீளளிப்புகள்<br>- வைத்தியசாலையில் தங்கியிருத்தலுக்கு மருத்துவ காப்புறுதி.<br>- மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான மீள் செலுத்தல்.<br>- விசேட மருத்துவ ஆய்வுகூட பரிசோதனை களுக்கான மீள் செலுத்தல். (CT scan, MRI போன்றன). |
| மரண நன்மைகள் | மரண இழப்பீடு |
| சிக்கனச் சங்க நன்மைகள் | - ஊழியரின் மரணம் உள்ளடங்கலாக நெருங்கிய குடும்ப அங்கத்தவரின் மரணத்தின் போதான மரண நன்கொடை<br>- நியதிச்சட்ட பணக்கொடை போன்ற பணிக்கொடை வழங்கப்படும். |
| ஓய்வூதிய ஏற்பாடு | நியதிச்சட்ட பணிக்கொடை |
| ஏனைய வசதிகள் | விசேட கடமைகளுக்கான சீருடைகள், ஊழியர்களின் இரவு நேர கடமைகளுக்கான உணவுகளை வழங்கல் |

கம்பனி, ஊழியர்களை மட்டுமல்லாது உயர் கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்குதன் மூலம் ஊழியர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கின்றது. இவ்வருடம் வேறுபட்ட துறைகளில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு 81 புலமைப்பரிசில்களை மீளாய்வு வருடத்தில் வழங்கியது




ஊழியர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட புலமைமைப்பரிசில் - 2024

கம்பனியில் குறிப்பிட்ட வருட கால சேவையை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த ஊழியர்கள் வருடாந்தம் கௌரவிக்கப்படுகின்றனர்.

| நிறைவுசெய்த சேவைக் காலம் | உழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 20 வருடங்கள் | 31 |
| 30 வருடங்கள் | 7 |
| 35 வருடங்கள் | 15 |
| 40 வருடங்கள் | 1 |

## பயிற்சி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி

இன்றைய வேகமாக மாறிக்கொண்டிருக்கும் வணிகச் சூழலில் ஏற்றதாகிக்கொள்வதற்கும் நிலையான வெற்றியை உறுதி செய்வதற்கும் தொடர்ச்சியான கற்றல் அத்தியாவசியமானது. நிறுவனத்தின் தொலைநோக்கை மெய்ப்பிப்பதிலும் நீண்டகாலப் பெறுமதி உருவாக்கத்தையும் முன்னெடுப்பதிலும் அதன் பணியாளர்கள் முக்கிய பங்காற்றுவதை சிபெஸ்டேலி நிறுவனம் அங்கீகரிக்கின்றது. எனவே, மூலோபாய முன்னுரிமைகளை நிறைவேற்றுவதிலும் வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைவதிலும் போட்டித் திறமைகளின் அபிவிருத்தியும், அவற்றை நிலை நிறுத்துவதும் மையமாகத் திகழ்கின்றன.

எமது அர்ப்பணிப்புமிக்க பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவானது பணியாளர்களின் தொழில்சார் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை தொடர்ந்து ஊக்குவிப்பதற்கு உறுதிபூண்டுள்ளது. பயிற்சி தேவைகளை முறையாக அடையாளம் காணுதல், தேர்ச்சிக்குறைபாடுகளை தீர்த்தல், தொடர்ச்சியான மேம்படுத்தல் மற்றும் கற்றல் கலாச்சாரத்தை ஆகியவற்றை இது ஈடுபடுத்துகின்றது.

செயலாற்றுகை மதிப்பீட்டு பின்னூட்டல் பொறிமுறைகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட திறமை கலந்துரையாடல்கள் மூலம் பயிற்சி தேவைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் அமைப்புகள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடத்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பணியாளர்கள் முனைப்புடன் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இவ்வாண்டில், பணியாளர்களின் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வலுப்படுத்தவும், மென் திறன்களை மேம்படுத்தவும்,

தலைமைத்துவ திறன்களை வளர்க்கவும் சிபெஸ்டேலி நிறுவனம் பல வகையான குறிக்கோள்மிக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இவ்வாறான முயற்சிகள் பணியாளர் அபிவிருத்தியில் 4,424 பயிற்சி மணிநேர முதலீட்டை ஏற்படுத்தின.

| நிகழ்ச்சித்திட்டம் | கால அளவு | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| வாடகைக்கமர்த்தப்பட்ட பவுசர் பணியாளர்களுக்கான பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் | 7 | 58 | 406 |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 7 | 9 | 63 |
| முதலுதவி நிகழ்ச்சித்திட்டம் | 7 | 40 | 280 |
| புதிதாகச் சேர்க்கப்பட்ட விசாரணை அதிகாரிகளுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டம் | 7 | 20 | 140 |
| இலங்கையில் ஊழியர் சமூகப் பாதுகாப்பு முறைமைக்கான அறிமுகம் | 7 | 10 | 70 |
| தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 7 | 12 | 84 |
| தனிப்பட்ட நேர்த்தி | 7 | 10 | 70 |
| சட்டப் பிரிவின் வழக்குத்தொடுத்தல் அலுவல்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் | 7 | 12 | 84 |
| தாங்கி அளவீட்டாளர்களுக்கான புதுமுகப் பயிற்சி | 7 | 23 | 161 |
| வாடகைக்கமர்த்தப்பட்ட பவுசர் பணியாளர்களுக்கான பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் | 7 | 416 | 2912 |
| விசாரணை அலுவலர்களின் வகிபாகம் | 7 | 10 | 70 |
| பிதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் பிரிவுகளின் பிரதானிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 7 | 12 | 84 |
| | | | 4424 |

கம்பனியானது ஊழியர்களின் தொழில் விருத்தியில் எப்போதும் ஆர்வமாக காணப்படுவதுடன் தராதரச் சான்றளிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனங்களுடன் இணைந்து கொள்வதற்கு விரும்புகின்ற ஊழியர்களுக்கு அதன் ஆதரவினை வழங்கி தொழில்சார் அபிவிருத்திக்காக அவர்களை ஊக்குவித்து வியாபார நிருவாக முதுமாணி மற்றும் ஏனைய பட்டப்பின் படிப்புக்களை தொடருவதற்கு நிதியியல் உதவியினையும் வழங்குகின்றது

கம்பனி வருடாந்த தொழில்சார் நிறுவன சந்தாக்களையும் மீளச் செலுத்தவதுடன் தொழில்சார் நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற மாநாடுகள் மற்றும் செயலமர்வுக்கான கட்டணைங்களை மீளளிப்பதன் வாயிலாக தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியினையும் ஊக்குவிக்கின்றது.





## தொழில்சார் ஆரோக்கியமும் பாதுகாப்பும்

கம்பனி, அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் காயங்கள் ஏற்படாத பணியாற்றும் சூழலை வழங்குவதன் மூலம் அதன் தொழிற்பாடுகள் முழுவதும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பின் உயர்வான தரநியமங்கள் மீதான அதன் பொறுப்பினை நிறைவுசெய்கின்றது.

நிறுவனம் இலங்கையில் பாரிய பெற்றோலிய முனையங்களின் முதன்மைத் தொழிற்படுத்துனராகவிருந்து, எளிதில் தீப்பற் கூடிய பெற்றோலிய உற்பத்திகளை முகாமைசெய்வதையும் விநியோகிப்பதையும் மேற்கொள்கின்றது. தேசிய வழங்கல் சங்கிலியில் எமது இன்றியமையாத வகிபாகத்தைக் கருத்திற்கொள்கையில் பாரிய அளவு தீ நாட்டின் பொருளாதாரத்தை முடங்கச்செய்யலாம். அதற்கமைய, கைத்தொழில் மற்றும் தொழில்சார் ஆரோக்கியமும் பாதுகாப்பும் எமது தொழிற்பாட்டு கட்டமைப்பினுள் மிகவும் உயர் முக்கியத்துவம் மிக்கதாக உட்பொதியச் செய்யப்பட்டுள்ளது.

மக்களையும் சொத்துகளையும் பாதுகாப்பதற்காக சிபெஸ்டேலி நிறுவனம் விசேடத்துவமிக்க, 24 மணிநேரமும் பின்வரும் வளங்களைக் கொண்டுள்ளது.

- **தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு:** 24X7 நாட்கள் பணிக்கமர்த்துவதற்கு உடனடியான, தொழிற்பாடுகளை பாதுகாப்பாக ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான தீயணைப்பு படை என்பவற்றுடன் கூடிய பிரத்தியேகமான தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு
- **மருத்துவ நிலையம்:** ஆரோக்கியத்தை கண்காணிப்பதற்கும், 24X7 நாட்களுடன் கூடிய ஊழியர்களின் மருத்துவ அவசர நிலமைகளை கவனிப்பதற்கும் உள்ளக நோயாளர் அவசர வண்டிச் சேவையுடனும் கூடிய மருத்துவ நிலையம்
- **ஆய்வுகூடப் பிரிவு:** அனைத்து பெற்றோலியப் பொருட்களிலும் உயர்தரம், பாதுகாப்புத் தரங்களும் நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உள்ளக ஆய்வுகூடம் இடையறாத முறையில் செயற்படுகின்றது. மேம்பட்ட பரிசோதனை உபகரணங்களும் திறமையான நிபுணர்களும் கொண்ட இந்த ஆய்வுகூடம் சான்றிதழ் வழங்கல் மற்றும் தயாரிப்பு முழுமைத்தன்மை என்பவற்றை உறுதிசெய்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு தொகுதியும் சந்தையை அடையும் முன் கடுமையான தேசிய மற்றும் சர்வதேச தரச் சான்றுகளை பூர்த்தி செய்வதை உறுதிசெய்து, நம்பகத்தன்மையையும் வாடிக்கையாளர் நம்பிக்கையையும் பாதுகாக்கிறது.









கம்பனியானது பின்வருவன தொடர்பில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கருமங்களையும் அத்துடன் இடர்களை இல்லாதொழிப்பதன் மீதும் விசேட கவனம் செலுத்துகின்றது. முக்கிய கவனத் துறைகள் உள்ளடக்குவன:

- தொழிற்பாட்டுரீதியான பாதுகாப்பையும் நம்பகத்தன்மையும் உறுதிசெய்வதற்கு இயந்திரங்கள், உபகரணம் மற்றும் பணி முறைமைகளை வழங்குதலும் பேணுதலும்.
- வலுவான நெறிமுறைகள் மற்றும் தொழிற்துறை சிறந்த நடத்தைகள் ஊடாக எரிபொருட்களை பாதுகாப்பாகக் கையாளுதல், களஞ்சியப்படுத்தல் மற்றும் கொண்டுசெல்லல்.
- ஊழியர்கள் தமது கடமைகளை பாதுகாப்பாகச் செயலாற்றுவதற்கு அவர்களுடன் தொடர்புடைய தகவல்கள் பயிற்சி மற்றும் மேற்பார்வையினை வழங்குதல்.
- ஊழியர்களின் நல்வாழ்வையும் தொழிற்பாடுசார்ந்த வினைத்திறனையும் ஊக்குவிப்பதற்கு உகப்பான பணியிட நிலைமைகளைப் பேணுதல்.
- ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கக்கூடிய இடர்நேர்வுகளை இனங்கண்டு தணிப்பதன் ஊடாக ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு ஆபத்துகளை செயலூக்கத்துடன் தணித்தல்.
- அனைத்து ஊழியர்களும் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கண்டிப்பான கடைப்பிடித்து, நிறுவனம் முழுவதும் வலுவான பாதுகாப்பு கலாசாரத்தைப் பேணி வளர்த்தல்.

## ஊழியர் நிகழ்வுகள்

### கிரிகெட் போட்டி

விளையாட்டு குழு, நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்களை ஒருங்கிணைத்து, நட்பு உணர்வுடன் பிரிவுகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டியொன்றை வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது. இந்நிகழ்வு உற்சாகமான பங்கேற்பு, உற்சாகக் குரல்கள் மற்றும் வலுவான நட்பு என்பன மூலம் சிறப்பிக்கப்பட்டது. அணிகள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி, போட்டித் தன்மையையும் சிறந்த விளையாட்டு ஒழுக்கத்தையும் வெளிப்படுத்தின. இப்போட்டி, ஊழியர்களுக்கு அன்றாட பணிச் செயல்பாடுகளில் இருந்து மகிழ்ச்சிகரமான ஓய்வை வழங்கியதோடு உடல் இயக்கத்தை ஊக்குவித்தது மற்றும் சக பணியாளர்களுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தியது. இது, குழுஒற்றுமை, ஐக்கியம் மற்றும் ஆரோக்கியமான பணி-வாழ்க்கை சமநிலையின் முக்கியத்துவத்துவம் என்வற்றை எடுத்துக்காட்டிய மறக்கமுடியாத நிகழ்வாக அமைந்தது.










## பௌத்த மத நிகழ்வுகள்

சிபெஸ்ரேலி பௌத்த அமைப்பு நோன்மதி தினங்களில் அலுவலக வளாகத்தில் பௌத்த நிகழ்வுகளை நடாத்துவதுடன் பங்குபற்றுவதற்கு அனைத்து ஊழியர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது. இதற்கு மேலதிகமாக, ஆழமான தொடர்பிற்கும் ஆன்மீகத்தை வளர்ப்பதற்கும் வெசாக், பொசொன், ஏசல ஆகிய முக்கிய பௌத்த விசேட தினங்களில் விசேட சமய அநுஸ்டானங்களும் ஏற்பாடுசெய்யப்படுகின்றன.








## கத்தோலிக்க மத நிகழ்வுகள்

2024 நத்தார் பண்டிகைக் கொண்டாட்டங்களை முன்னிட்டு, சிபெஸ்ரேலி கத்தோலிக்க சங்கம், நிறுவனம் முழுவதும் ஒற்றுமையும் மகிழ்ச்சியையும் குறிக்கும் வகையில் அழகாக அலங்கரிக்கப்பட்ட நத்தார் மரமும் பிறப்புக் குடிலும் இடம்பெற்ற பண்டிகை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

கொழும்பு புனித சூசையப்பர் தேவாலயத்தில், மரியாதைக்குரிய அருட்தந்தை பிரியந்த சில்வா அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பணியாளர்களும் ஓய்வுபெற்ற ஊழியர்களும் முனைப்புடன் பங்கேற்றனர். இந்நிகழ்வு, சகோதரத்துவ மற்றும் ஆன்மீக உணர்வை வெளிப்படுத்தியதுடன், நாடு முழுவதற்குமான அமைதி, மகிழ்ச்சி மற்றும் ஆசீர்வாதங்களுக்கான பிரார்த்தனைகளுடன் நிறைவுற்றது.







# ஆளுகையும் இணங்குவித்தலும்



# நிறுவன ஆளுகை

### சபையின் பிரகடனம்

சிபெஸ்ரேலி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை கம்பனி முழுவதும் நிறுவன ஆளுகை கோட்பாடுகளை பிரயோகிப்பதை அவதானிப்பதற்கு சபை உறுதியாக அர்ப்பணித்துள்ளது என்றும் நிறுவன ஆளுகை அறிக்கையானது கம்பனியினுள் நிறுவன ஆளுகை பற்றிய நியாயமான பொறுப்புக்கூறலை வழங்குகின்றது என்றும் நான் சபை சார்பில் நான் உறுதிப்படுத்த விளைகின்றேன்.

அதற்கமைய, பணிப்பாளர் சபையும் அனைத்து ஆளணியும் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செயற்பட்டுள்ளனர் என்று நான் பிரகடனப் படுத்துகின்றேன்.

திரு. டி. ஜே.ஏ.எஸ்டி.எஸ் ராஜகருன
தலைவர்

சபையினதும் முகாமைத்தவத்துவத்தினதும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை வலுப்படுத்துகின்ற ஆற்றல்வாய்ந்த மற்றும் செயல்திறன்மிக்க நிறுவன கலாசாரம் ஒன்றினை பேணிவளர்ப்பதற்கு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவன ஆளுகை கட்டமைக்கப்பட்டுள்ளது. அனைத்து கொடுக்கல்வாங்கல்களிலும் நியாயத் தன்மையை உறுதிசெய்வதுடன் நிறுவனம் பற்றிய பொதுமக்கள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கு உதவுகின்றது. நிறுவன ஆளுகையின் முதன்மைக் குறிக்கோள் கம்பனியின் நீண்டகால வெற்றியினை உறுதிசெய்வதற்கு செயல்திறன்மிக்க, தொழிற்முயற்சியாண்மை அத்துடன் முன்மதிமிக்க முகாமைத்துவத்துவம் என்பவற்றை வசதிப் படுத்தவதாகும். பரந்த நோக்கில் இது உள்ளடக்குவன:

- தொலைநோக்கு, பணி, குறிக்கோள்கள், மற்றும் உபாயம் என்பன எவ்வாறு வடிவமைக்கப்பட்டு தொடர்பூட்டப்படுகின்றன
- விழுமியங்கள் எவ்வளவு நன்றாக இணங்கியொழுகப் படுகின்றன
- இடர்கள் எவ்வாறு முகாமைசெய்யப்படுகின்றன
- வெளிப்படைத்தன்மை எவ்வாறு ஊக்கவிக்கப்படுகின்றது
- தொழிற்பாடுகளை நிலைபெறத்தக்கவகையில் எவ்வாறு முகாமைசெய்வது
- எதிர்காலத் தலைவர்கள் எவ்வாறு ஊக்குவிக்கப்பட்டு விருத்திசெய்யப்படுகின்றனர்
- பங்குடமையாளர் பெறுமதியினை அதிகரிப்பதற்கு நிறுவன கலாசாரம் எவ்வாறு ஊக்குவிக்கப் படுகின்றது.

இலங்கையின் பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியம் மற்றும் விநியோகத்தை பிரதானமாக வசதிப்படுத்தும் கம்பனி என்ற வகையில் நிறுவனமானது சட்டவாக்கங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நாட்டின் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களினால் எடுத்துரைக்கப்பட்ட நடத்தைக் கோவைகள் என்பவற்றுடனான இணங்குவித்தலில் நிறுவன ஆளுகை கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதியளிப்பதுடன் கம்பனி மூலம் விதந்துரைக்கபட்ட உள்ளக கொள்கைகள் மற்றும் வழிகாட்டல் தொகுதிகளை அது கடைப்பிடிப்பதனையும் உறுதிசெய்கின்றது.

## நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு

சபை, அதன் துணைக்குழுக்கள், சிரேஷ்ட முகாமைத்துவம், பங்குதாரர்கள், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் என்பவற்றுக்கிடையிலான அடிப்படை உறவுகள் சிபெஸ்டேலி நிறுவன ஆளுகை கட்டமைப்பினால் வழிநடாத்தப்படுகின்றன.

சிபெஸ்டேலி நிறுவனத்தில் நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு பின்வரும் 3 தூண்களின் கீழ் எடுத்துக் காட்டப்படக்கூடியது.

1. இணங்குவித்தல்
2. உள்ளக ஆளுகைக் கட்டமைப்பு
3. உத்தரவாதமும் கட்டுப்பாடும்




AC – கணக்காய்வுக் குழு, SRC – பங்கு மீளாய்வுக் குழு, DPC – திணைக்களம்சார் பெறுகைக் குழு

## 1. இணங்குவித்தல்

கம்பனியின் நிறுவன ஆளுகை நடைமுறைகள் கீழ்வரும் சட்டம், கோவைகள் மற்றும் தன்னார்வ நடத்தைகளைக் கொண்ட கட்டமைப்பின் தேவைப்பாடுகளை கடைப்பிடிக்கின்றது.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவை 2023.
- 2021 இல் நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகை மற்றும் தொழிற்பாட்டு கையேடு மீதான வழிகாட்டல்கள்.
- 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்.
- 2017 இன் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் வேறு நியதிச்சட்டங்கள்
- கம்பனியின் அகவிதி
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள்
- கம்பனி ஒழுங்குவிதிகள்
- தொழில் நடத்தைக் கோவை
- சபையின் துணைக் குழுக்களின் மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் ஆய்வெல்லை,

## 2. உள்ளக ஆளுகைக் கட்டமைப்பு

### பணிப்பாளர் சபை

கம்பனியின் அனைத்து செயற்பாடுகள் முழுவதும் உயர்தர நிறுவன ஆளுகைத் தரநியமங்களைப் பேணுவதற்கு சபை அர்ப்பணித்துள்ளது. ஆளுகையின் நோக்கம், முன்மதியுடைய மற்றும் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தின் ஊடாக நீண்ட கால பங்குதாரர் பெறுமதியை உருவாக்குதல் ஆகும்.

- **சபையின் பொறுப்புகள்**

சபையின் முக்கிய பொறுப்புகள் பினவருமாறு;

- ♦ நிறுவனத்தின் நீண்ட கால வெற்றியை ஊக்குவிக்கும் நோக்குடன் அவசியமான உபாயமார்க்கங்களை உருவாக்குவதற்கான வழிகாட்டலையும் பணிப்புரையையும் வழங்குதல்.
- ♦ வழிகாட்டலை வழங்குவதுடன் கம்பனியின் நிறுவன உபாயம், செயலாற்றுகை குறிக்கோள்களை மதிப்பீடு செய்தல், மீளாய்வுசெய்தல் மற்றும் அனுமதித்தல்.
- ♦ வருடாந்த திட்டங்களையும் நீண்ட கால வியாபாரத் திட்டங்களையும் மீளாய்வுசெய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- ♦ ஆளுகை மற்றும் இணங்குவித்தலைக் கண்காணித்தல்.
- ♦ கம்பனியினால் பின்பற்றப்படும் நிதியியல் மற்றும் ஏனைய அறிக்கையிடல் நடைமுறைகளுக்கு அனுமதியளித்தல் மற்றும் கண்காணித்தல்.
- ♦ பிரதான கையகப்படுத்தல்கள், அகற்றல்கள் மற்றும் மூலதன செலவுகளை மீளாய்வுசெய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- ♦ சபையிலிருந்து நிறைவேற்றுதர மட்டம் வரை வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கான / அதிகாரங்களுக்கான ஏதேனும் மாற்றங்கள் செய்வதை தீர்மானித்தல்.
- ♦ உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைமைகளைக் கண்காணித்தல்.

- **சபையின் உள்ளமைப்பு**

2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு சபையின் உள்ளமைப்பு பினவருமாறு;

1. திரு. டி.ஜே.ஏ.எஸ்.டி.எஸ். ராஜகருண - தலைவர்
2. கலாநிதி என்.கே.எம்.சி. நெத்திகுமாரகே - முகாமைத்துவப் பணிப்பாளர்
3. திரு. டப்ள்யூ.எஸ். ஹேமந்த குமார - பணிப்பாளர்
4. திரு. தீபக் தாஸ் - பணிப்பாளர்
5. திரு. அவினாஸ் சிங்கால் - பணிப்பாளர்
6. திரு. சுனில் கே.மஹாராண - பணிப்பாளர்
7. திரு. எம்.எம். கிறிஸ்டி டொஸ் - பணிப்பாளர்
8. திரு. எஸ். ஹேமந்த விஜித குமார - பணிப்பாளர்
9. திரு. ஏ.ஜே.எல். விமலரத்ன - பணிப்பாளர்

2024 ஆம் ஆண்டின் போதான பணிப்பாளர்களின் மாற்றங்கள்

| | பணிப்பாளரின் பெயர் | சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி | சபையிலிருந்து பதவிவிலகிய திகதி | பதவி |
|---|---|---|---|---|
| 1 | திரு. சாலிய விக்ரசூரிய | 10.10.2023 | 26.09.2024 | தலைவர் |
| 2 | கேணல் (ஓய்வுபெற்ற) பி. ரத்நாயக | 10.10.2023 | 26.09.2024 | MD |
| 3 | திரு. ஈ. ஏ. ரத்னசீல | 27.01.2020 | 10.09.2024 | NED |
| 4 | திரு. அசீம் பார்கவா | 18.08.2021 | 21.09.2024 | NED |
| 5 | திரு. ராஜேஸ் பகத் | 18.08.2021 | 21.09.2024 | NED |
| 6 | திரு. தர்மதாச பண்டிதரத்ன | 09.03.2022 | 26.09.2024 | NED |
| 7 | திரு. மனோஜ் கமகே | 13.12.2022 | 26.09.2024 | NED |
| 8 | திரு. யசிறு லங்காதிலக | 31.03.2023 | 26.09.2024 | NED |
| 9 | திரு. டி. ஜே. ஏ. எஸ். டி. எஸ். ராஜகருண | 26.09.2024 | | தலைவர் |
| 10 | கலாநிதி என். கே. எம்.சி. நெத்திகுமாரகே | 26.09.2024 | | MD |
| 11 | திரு. டப்ள்யூ. எஸ். ஹேமந்த குமார | 26.09.2024 | | ED |
| 12 | திரு. தீபக் தாஸ் | 30.05.2023 | | NED |
| 13 | திரு. அவினாஸ் சிங்கால் | 22.08.2024 | | NED |
| 14 | திரு. சுனில் கே.மஹாராண | 22.08.2024 | | NED |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | திரு. ஏ. ஜே. எல். விமலரத்ன | 26.09.2024 | | NED |
| 16 | திரு. எம்.எம். கிறிஸ்டி டொஸ் | 03.10.2024 | | NED |
| 17 | திரு. எஸ். ஹேமந்த விஜித குமார | 09.10.2024 | | NED |

NED நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் MD முகாமைத்துவப் பணிப்பாளர் ED நிர்வாக இயக்குனர்

ஆண்டறிக்கையின் 20 - 24 ஆம் பக்கங்களில் காணப்படும் தற்போதய பணிப்பாளர்களின் முகக்குறிப்புகள் கம்பனிக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்ற உபாயம், செயலாற்றம், வளங்கள் மற்றும் தொழில் நடத்தைகள் பற்றிய விடயங்கள் மீது சுயாதீன தீர்மானத்தை வழங்குவதற்கான அதிக அனுபவத்தையும் போதுமான திறமைகளையும் எடுத்துக்காட்டுக்கின்றது.

- **சபை பன்மைத்துவமும் சபையின் சமநிலையும்**

  பணிப்பாளர் சபையானது நிறுவன ஆளுகை கட்டமைப்பின் முக்கிய கூறாகும். வேறுபட்ட திறன்கள், அறிவு, அனுபவம், தொழில்சார் தகைமைகள், வயது, தேசியம் என்பவற்றின் சபையின் பன்மைத்துவம் மிகவும் வினைத்திறன்மிக்க தீர்மானங்களை மேற்கொள்ளல், ஆற்றல்மிக்க தொகுதி மற்றும் மூலவளங்களை சிறப்பாக உபயோகித்தல் என்பவற்றிலிருந்து நன்மையடைவதற்கு முனைகின்றது.

  மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுகாலப்பகுதியில் சபையானது வேறுபட்ட துறைகளில் உகப்பான கலந்த தேர்ச்சிகள், நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தை கொண்ட 9 பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

- **பணிப்பாளர்களின் நியமனம்**

  பணிப்பாளர்கள் அகவிதி நியமங்களுக்குட்பட்டு வருடாந்த பொதுக்கூட்டமொன்றினூடாக சபைக்கு நியமிக்கப்படுகின்றனர். பணிப்பாளர் உறுப்புரிமைக்கான அபேட்சகர்களை பரிசீலனையில் கொண்டு ஏனைய வற்றுக்கு மத்தியில் அனுபவத்தின் அளவு, தொழிலைப் புரிந்துகொள்ளல், தொழில் மற்றும் நிதியியல் பிரச்சினைகளை புரிந்துகொள்ளுதல், ஆற்றல் வாய்ந்த தீர்மானத்தை பிரயோகிப்பதற்கான இயலுமை, பல்வகைமை, தலைமைத்தவம் மற்றும் சாதனைகள் அத்துடன் தொழிற்துறையினை பாதிக்கின்ற கருமங்களில் அனுபவம் போன்றன உள்ளடங்கலாக அது பொருத்தமானதாக கருதுகின்ற அனைத்து காரணிகளையும் சபை கவனத்தில் கொள்ளும்.

- **பொறுப்புக்களை வகுத்தல்**

  தலைவர் மற்றும் முகாத்துவப் பணிப்பாளர் பொறுப்புகள் 2023 ஒக்டோபர் 10ஆம் திகதியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளன, மேலும் அவற்றின் பொறுப்புகள் தெளிவாக வேறுபடுத்தப்பட்டுள்ளன. இப் பிரிவுபடுத்தலானது சபையின் ஆளுகை மற்றும் கம்பனியின் தொழிற்பாடுகளின் நிறைவேற்று முகாமைத்துவம் எனபவற்றிற்கிடையே பொறுப்புக்கூறல் மற்றும் அதிகாரம் ஆகியவற்றில் சமநிலையை உறுதிசெய்கிறது.

  2003 ஒக்டோபர் 10 தொடக்கம் 2024 செப்டம்பர் 26 வரை திரு. சாலிய விக்கிரமசூரிய தலைவராக பணியாற்றியதுடன் கேணல் (ஓய்வுபெற்ற) பி. ரத்நாயக முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் திரு. டி.ஜே.ஏ.எஸ். டி. எஸ். ராஜகருணா புதிய தலைவராக நியமிக்கப்பட்டு கலாநிதி என்.கே.எம்.சி. நெத்திகுமாரகே புதிய முகாமைத்தவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

  சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குதல், அதன் செயற்பாடுகளை திறம்பட ஒழுங்கமைத்தல் மற்றும் நடத்துவதை உறுதிசெய்தல், நிறைவேற்றத்தரமற்ற மற்றும் நிறைவேற்றத்தர பணிப்பாளர்களுக்கு இடையிலான உறவின் நேர்மை மற்றும் செயல்திறனை நிலைநிறுத்துதல் ஆகியவை தலைவரின் வகிபாகமாகும். பணிப்பாளர்கள் சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாய பணிப்புரை, கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் அன்றாட செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கு முகாமைத்துவ பணிப்பாளர் பொறுப்புடையவராவார்

  சிபெஸ்டேலி நிறுவனத்தின் தொழிற்பாடுகள் துணை வகைகளாக பிரிக்கப்படலாம். அவை கொலன்னாவ எரிபொருள் விநியோக நிலையத்தின் தொழிற்பாடுகள், முத்துராஜவெல முனையத்தின் தொழிற்பாடுகள், கொழும்பு துறைமுக எரிபொருள் வளாக அலுவலகம் மற்றும் நாடுபூராகவுமுள்ள இலங்கை மொத்த சாலைகளில் தொழிற்பாடுகள் என்பனவாகும். முத்துராஜவெல முனைய தொழிற்பாடுகளுக்கு முனைய முகாமையாளர் (முத்துராஜவெல) தலைமைத்துவம் வகிக்கின்றார். தொழிற்பாட்டு முகாமையாளர் (கரைகடந்த தொழிற்பாடுகள்) கொழும்பு துறைமுக எரிபொருள் வளாக அலுவலகத்திற்கு தலைமை வகிப்பதுடன் இலங்கை மொத்தச் சாலைகள் பிரதிப் பொது முகாமையாளரின் (தொழிற்பாடுகள்) மேற்பார்வையின் கீழ் சாலை கண்காணிப்பாளர்களால் தலைமை வகிக்கப்படுகின்றன.

- **சபை கூட்டங்களும் சமூகமளித்தலும்**

  கிரமமான சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப் படுகின்ற அதேவேளை வேண்டப்படுகின்ற போதும் விசேட சபை கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. சிரேஷ்ட முகாமையாளர்களும் அழைப்பின் பேரில் கலந்து கொள்கின்றனர்.

  சபைக்கூட்டங்கள் முறையான நிகழ்ச்சிநிரல் ஒன்றின் மீது நடத்தப்படுவதுடன் பணிப்பாளர்களுக்கு கூட்டங்களுக்கு முன்னர் நிறுவன முகாமைத்துவத்தின் மூலம் தொடர்புடைய அனைத்தையும் உள்ளடக்கிய பின்னணித் தகவல்கள் வழங்கப்படுகின்றன. 2024 காலப்பகுதியில் 12 சபைக்கூட்டங்கள் இடம்பெற்றன.

இக்கூட்டங்களில் பணிப்பாளர்கள் சமூகமளித்தல்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:

| சபைக்கூட்டத்தில் சமூகமளித்தல் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயர் | 24-சன | 28-பெப் | 24-ஏப் | 31-மே | 7 ஜூன் | 10 ஜூலை | 17 ஜூலை | 22 ஓக | 20 செப் | 10 ஒக் | 8 நவ | 11 டிச |
| 1 | திரு. சாலிய விக்கிரமசூரிய | P | P | P | P | P | P | P | P | P | | | |
| 2 | கேணல் (ஓய்வுபெற்ற) பி. ரத்நாயக | P | P | P | P | P | P | P | P | P | | | |
| 3 | திரு. திபக் டயஸ் | P | P | P | P | P | P | P | P | P | P | P | P |
| 4 | திரு. இ. ஏ. ரத்னசீல | P | P | P | P | P | P | P | P | Ab | | | |
| 5 | திரு. அசீம் பர்கவா | P | P | P | P | P | P | P | P | | | | |
| 6 | திரு. ராஜேஸ் பகத் | P | P | P | P | P | P | P | P | | | | |
| 7 | திரு. தர்மதாச பண்டிதரத்ன | P | P | P | P | Ab | P | Ab | Ab | Ab | | | |
| 8 | திரு. மனோஜ் கமகே | P | P | P | P | P | P | P | P | Ab | | | |
| 9 | திரு. யசிறு லங்காதிலக | P | P | P | P | Ab | P | P | P | Ab | | | |
| 10 | திரு. அவினாஸ் சிங்கால் | | | | | | | | | P | P | P | P |
| 11 | திரு. சுனில் கே. மஹாராண | | | | | | | | | P | P | P | P |
| 12 | திரு. டி.ஜே.ஏ.எஸ்.டி.எஸ். ராஜகருண | | | | | | | | | | P | P | P |
| 13 | கலாநிதி என். கே. எம்.சி. நெத்திகுமாரகே | | | | | | | | | | P | P | P |
| 14 | திரு.டப்ள்யூ.எஸ். ஹேமந்த குமார | | | | | | | | | | P | P | P |
| 15 | திரு.எம்.எம். கிறிஸ்டி டொஸ் | | | | | | | | | | P | P | P |
| 16 | திரு.எஸ். ஹேமந்த விஜித குமார | | | | | | | | | | P | P | P |
| 17 | திரு.ஏ. ஜே. எல். விமலரத்ன | | | | | | | | | | P | P | P |

P-சமூகமளிதுள்ளார் Ab-சமூகமளிக்கவில்லை

- **அதிகார ஒப்படைப்பும் குழுக்களும்**

சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கருமங்களை தவிர சபைத் துணை குழுக்களுக்கு சபை அதிகாரங்களை ஒப்படைத்துள்ளது.

குறிப்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள பின்வரும் குழுக்கள் சபைக்கு துணையளிக்கின்றன.

**அ. கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக்குழுவானது கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதுடன்

சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றது. கணக்காய்வுக்குழு கம்பனியின் பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்ட ஒட்டுமொத்த ஆளுகைச் செயன்முறையினுள் தொழிற்படுவதுடன் அதன் பொறுப்புகளைச் செயல்திறன் வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுகின்றது.

சிபெஸ்டேலி நிறுவனக் கணக்காய்வுக்குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நிறைவேற்று தரமல்லாத 3 உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது.

கணக்காய்வு குழுவின் உள்ளடக்கமும் மேற் கொள்ளப்படும் தொழிற்பாடுகளும் ஆண்டறிக்கையின் 74 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

**ஆ. கையிருப்பு மீளாய்வுக் குழு**

கையிருப்பு மீளாய்வுக் குழுவானது சிபெஸ்டேலி நிறுவன அலுவலர்கள் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அத்துடன் லங்கா ஐஓசி நிறுவனம் ஆகிய பிரதிநிதிகளின் பங்கேற்புடன் வாராந்தம் கூடுகின்றது. கையிருப்பு நிலை மீளாய்வுசெய்யப்பட்டு அடுத்த மூன்று மாதங்களுக்கான தேவைப்பாடுகள் முன்கூட்டியே திட்டமிடப்படுகின்றன. நாட்டில் எதிர்வுகூறப்பட்ட கேள்வி, சுத்தகரிப்பு சாலையின் இயலளவுகள் மற்றும் தாங்கி களஞ்சிய கொள்ளளவு என்பவற்றை பரிசீலனைக் கொள்ளப்பட்டதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட வேண்டிய அளவு இனங்காணப்படுகின்றது. நாட்டில் இடைத்தடங்களற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்வதற்கு கிரமமான மற்றும் உன்னிப்பான கண்காணித்தல் கூட்டுத்தாபனத்தை இயலச்செய்கிறது.

**இ. திணைக்களசார் பெறுகைக் குழு**

பொருட்கள், உற்பத்திகள், பணி, சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக கம்பனி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் திணைக்களசார் பெறுகைக்குழு தொழிற்பாடுகள் ஊடாக தேசிய பெறுகை முகவராண்மையால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை கம்பனி பின்பற்றி, வழங்கல் தாமதங்களை குறைத்து கம்பனிக்கு மிகவும் அனுகூலமான அத்துடன் தரம் வாய்ந்த சிறந்த

சேவைகளையும் வழங்களையும் பெற்றுக்கொள்வதை பெறுகைப் பிரிவின் வெளிப்படைத்தன்மையினை உறுதி செய்கிறது.

இக்குழுவிற்கு சிபெஸ்டேலி நிறுவனத் தலைவர்/முகாமைத்தவப் பணிப்பாளர் தலைமைவகிப்பதுடன் பிரதிப் பொது முகாமையாளர் -தொழிற்பாடுகள் மற்றும் பெற்றோலிய வள அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோரை இது உள்ளடக்குகின்றது.

- **பொறுப்புக்களை வகுத்தல்**

கடமைகளையும் பொறுப்புக்களையும் செயல்திறன் வாய்ந்த விதத்தில் மேற்கொள்வதற்கு முகாமைத்தவ மற்றும் நிறுவனசார் தகவல்களுக்கும் அதேபோன்று வேண்டப்பட்ட மூலவளங்களுக்கும் பணிப்பாளர்கள் மட்டுப்பாடற்ற பெறுவழியினை கொண்டுள்ளனர். தொழிற்பாட்டு திட்டங்கள் உபாயம், நிதியியல் முகாமைத்துவம் செலவீடு சொத்து முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம், இணங்குவித்தல், ஒழுங்கு முறைப்படுத்தல், மாற்றங்கள் என்பவற்றுக்கெதிரான செயலாற்றம் உள்ளடங்கலாக விடயங்கள் பற்றிய எடுத்துரைப்பினை நிறைவேற்று முகாமைத்துவம் மேற்கொள்கின்றது. அவசியமானது என கருதப் படுகின்றவிடத்து கம்பனியின் செலவில் பணிப்பாளர்களுக்கு தொழில்சார் ஆலோசனை மற்றும் தகவல்களுக்கான பெறுவழியும் கிடைக்கப்பெறுகின்றது.

- **கம்பனிச் செயலாளர்கள்**

டிலொயிட் கோபரேட் சேர்விசஸ் (பிரைவட் லிமிடெட்) சபைக்கான செயலாளர்களாக செயல்பட்டு அதன் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் சபைக்கு வழிகாட்டுவதுடன் நிறுவன ஆளுகையில் சிறந்த நடத்தைகளை ஊக்கவிக்கின்றது. அனைத்து பணிப்பாளர்களும் கம்பனிச் செயலாளருக்கான பெறுவழியினை கொண்டுள்ளனர். கம்பனிச் செயலாளர் சபைக் கூட்டங்களையும் வேறு துணைக்குழுக் கூட்டங்களையும் ஒருங்கிணைத்து கூட்டக் குறிப்புகளையும் ஏனைய தொடர்புடைய பதிவுகளையும் பேணுகின்றது.

## 2. உத்தரவாதமும் கட்டுப்பாடும்

- **நிதியியல் அறிக்கையிடல்**

நிதியியல் கூற்றுக்களை உண்மையாகவும் நியாயமான நோக்கிலும் எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். முன்கூட்டி நியமிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இரண்டுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதியியல் அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னர்இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்ற விதம், பொருத்தமான தன்மை மற்றும் கணக்கீட்டு கொள்கைகளின் மாற்றங்கள் அத்துடன் முக்கிய தீர்மான கருமங்கள் என்பன உள்ளடங்கலாக முகாமைத்துவம் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் கணக்காய்வு குழு, மீளாய்வுசெய்து கலந்துரையாடுகின்றது.

- **வெளிப்படைத்தன்மையும் இணங்குவித்தலும்.**

அதன் அனைத்து கொடுக்கல்வாங்கல்களிலும் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கும் சட்டங்கள், வழிகாட்டல்களுடனான கண்டிப்பான இணங்குவித்தலை உறுதிசெய்கின்ற அதேவேளை ஒழுக்கநெறிசார் நியமங்கள், தொழில் மற்றும் வணிக உரிமைகள் அத்துடன் கம்பனிக் கொள்கைகள் என்பவற்றை பேணிகாப்பதற்கும் சபை பொறுப்புடையதாகும்.

♦ கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையானது 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

♦ 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்துடனான இணங்குவித்தலில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறுவனத்தின் வெளிவாரி கணக்காய்வினை மேற்கொள்வதுடன் நிதியியல் கூற்றுக்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

♦ பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக நிறுவனம் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் வேறுதொடர்புடைய ஒழுங்குவிதிகளையும் கடைப் பிடிக்கின்றது.

- **உள்ளகக் கட்டுப்பாடுகள்**

தொழிற்பாடுகளின் வினைத்திறன்கள் மற்றும் செயல்திறன்வாய்ந்ததன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றை எய்துதல், நிதியியல் அறிக்கையிடல் பற்றிய நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைய சட்டங்கள் அத்துடன் ஒழுங்குவிதிகளுடனான இணங்குவித்தல் அதேபோன்ற இடர்முகாமைத்துவம் என்பன தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் ஆற்றல்வாய்ந்ததும் செயல்திறன்மிக்கதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை முறையாக நிறுவப்பட்டு, பேணப்படுகின்றதை சபை உறுதி செய்கின்றது. நிதியியல் மற்றும் கணக்கீட்டு தகவல்களின் நேர்மை, தொழிற்பாட்டு மற்றும் இலாபத் தன்மை இலக்குகளை நிறைவேற்றுதல் மற்றும் முகாமைத்துவ கொள்கைகளை நிறுவனம் முழுவதும் ஊடுகடத்தல் என்பன பற்றி அது உறுதிசெய்கின்றது. ஏதேனும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நியாயமான உத்தரவாதத்தை மாத்திரம் உறுதி செய்யக்கூடியது என்பதும் தவறுகள் அல்லது முறைகேடுகள் முன்வைக்கப்படலாம் அல்லது நியாயமான காலப்பகுதிக்குள் கண்டுபிடிக்கப்படலாம் என்பதற்கு முற்றுமுழுதான உத்தரவாதம் இல்லை என்பதனையும் குறிப்பிடுவது அவசியமாகும்.

உள்ளகக் கணக்காய்வு பிரிவானது சிபெஸ்டேலி நிறுவனத்தின் நிறுவப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினுள் நிறுவனம் வினைத்திறன்மிக்கவாறு தொழிற்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றது.

- **உள்ளகக் கணக்காய்வு**

முகாமைத்துவத்தின் சுயாதீனமாகவுள்ள உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வுகள் கொண்டு நடாத்தப்படுகின்றன. உள்ளக கணக்காய்வொன்றின் குறிக்கோள் நிறுவனம் ஒன்றின் அனைத்து நடவடிக்கைகள் மீதும் கண்டிப்பான

கட்டுப்பாட்டினை பேணுவதாகும். நிதியியல் பதிவுகளின் உண்மையான தன்மை மற்றும் நிறுவனத்தின் தொழிற்பாடுகளின் வினைத்திறன் பற்றிய உத்தரவாதம் முகாமைத்துவத்திற்கு தேவைப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வொன்று இவை இரண்டினையும் உறுதிசெய்வதற்கு உதவுகின்றது. எடுத்துரைக்கப்பட்ட நடைமுறைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இசைவாக நிறுவனத்தினுள் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை பேணப்படுவதை இது உறுதி செய்கின்றது.

உள்ளகக் கணக்காய்வு பிரிவின் நோக்கலை பின்வருமாறு:

- காணப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக முறையாக அதிகாரமளிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்.
- அனைத்து கணக்கீட்டு தகவல்களும் SAP முறைமையில் முறையாக பதிவுசெய்யப்படுகின்றன அதேபோன்று முதல்நிலை பதிவுகள் செம்மையாக பேணப்படுகின்றன அத்துடன் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தை உறுதிசெய்வதற்கு தொடர்புடைய புள்ளிவிபரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு தரவுகள் முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்தல்.
- நிதியியல் மற்றும் கணக்கீட்டு கூற்றுகள் நிறுவனத்தின் உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை வெளிப்படுத்துவதை உறுதிசெய்தல்.
- தொழிற்பாடுகளில் உள்ளக கட்டுப்பாட்டின் முறைமைகளின் வினைத்திறனை மதிப்பிடுதல்.

பின்வருவனவற்றை மீளாய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்கும் முறைமை அடிப்படையில் அமைந்த அணுகுமுறையினை பின்பற்றுதல்:

- திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களும் ஏனைய தொழிற்பாடுகளும் கொள்கைக் குறிக்கோள்களை எய்துவதில் வெற்றிகரமானவையாக காணப்படுகின்றன என்ற ரீதியில் அளவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றவை உள்ளடங்கலாக திணைக்களம் ஒன்றின் தொழிற்பாட்டை கட்டுப் படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து முறைமைகளையும் செயன்முறைமைகளையும் வடிவமைத்தலும் தொழிற்படுத்தலும்.
- சட்டம் மற்றும் முன்வைக்கப்பட்ட ஏனைய தேவைப்பாடுகள் அத்துடன் முகாமைத்துவ திட்டங்கள், நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றுடன் இணங்குவித்தலின் அளவு.
- சொத்துகளைக் கையகப்படுத்தல், கையுதிர்த்தல் மோசடி, துர்நடத்தை முறைகேடு உள்ளடங்கலாக சொத்துகளை அல்லது நலன்களை இழப்புகளிலிருந்து பாதுகாத்தல்.
- மூலவளங்களை சிக்கனமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பயன்படுத்தவதற்கும் விரயங்களை தவிர்ப்பதற்குமான ஒழுங்குகள்.
- தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அத்துடன் பொறுப்புக்கூறுவதற்கு வழங்கப்படுகின்ற தகவல்களின் போதுமை, நம்பகத்தன்மை மற்றும் ஒருங்கமைவு மற்றும் அத்தகவல்கள் பயன்படுத்தப்படுகின்ற அளவு.

- **வெளிவாரிக் கணக்காய்வு**

கம்பனியின் நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கும் அத்துடன் கம்பனியின் நிதியியல் நிலை மற்றும் செயலாற்றம் என்பனவற்றின் நியாயமான மற்றும் உண்மையான எடுத்துரைத்தல் மீது நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் வெளிவாரி கணக்காய்வாளர்கள் பொறுப்புடையவர்களாவர்

1971இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 இன் தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுக்கு இணங்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறுவனத்தின் வெளிவாரி கணக்காய்வினை கொண்டு நடாத்துவதுடன் ஆண்டுதோறும் நிதியியல் கூற்றுகளை வெளியிட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 2023 இல் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை சிறந்த நடத்தைக் கோவையுடனான இணங்குவித்தல்

| கோவைத் தொடர்பு | நிறுவன ஆளுகைக் கொள்கை கோட்பாடுகள் | இணங்குவித்தல் விபரங்கள் | இணங்குவித்தல் நிலை |
|---|---|---|---|
| A | பணிப்பாளர்கள் | | |
| A.1 | சபை | உபாய வழிகாட்டலை உருவாக்குவதற்கும் கம்பனியின் வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு ஆற்றல்வாய்ந்த கட்டுப்பாட்டு கட்டமைப்பை உருவாக்குவதற்கும் பணிப்பாளர் சபை தலைமைத்துவத்தை வழங்கும். | இணங்கியது |
| A1.1 | வழமையான பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் | • பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்பட்டதுடன், அவசியமான வேளையில் விசேட கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.<br>• பணிப்பாளர் சபைக்கான கூட்டத்திற்கு வருகை தந்தவர்களின் விபரங்கள் 56 ஆம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. | இணங்கியது |

| | | | |
|---|---|---|---|
| A1.2 | பணிப்பாளர் சபையின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள் | சபை கீழ்வருவனவற்றுக்கான பொறுப்புகளை எடுத்துக்கொள்வதன் ஊடாக தொழில்முயற்சி தலைமைத்துவத்தை வழங்குகின்றது<br>• உபாய வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்தல்<br>• முக்கிய முகாமைத்துவ ஆளணியின் திறன்கள் மற்றும் பதவியுரிமை<br>• தகவல், உள்ளக கட்டுப்பாடுகள், வியாபார தொடர்ச்சி மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய நேர்மை<br>• சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நெறிமுறை நியமங்களுடனான இணைகுவித்தல்.<br>• தீர்மானம் எடுத்தலின் போது அனைத்து பங்குதாரர்களின் நன்மைகள் தொடர்பாக கவனமெடுத்தல்.<br>• நிலைபேறான வியாபார அபிவிருத்தி.<br>• பொருத்தமான கணக்கீட்டுகொள்கைகளை பின்பற்றுதல் மற்றும் நிதியியல் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவித்தல் | இணங்கியது |
| A1.3 | நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக செயற்படல் | அனைத்து ஏற்புடைய விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கம்பனி இணங்கியொழுகுவதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தும். | இணங்கியது |
| A1.4 | கம்பனிச் செயலாளரின் ஆலோசனைக்கும் சேவைகளுக்கமான பெறுவழி | • டிலொயிட் கோபரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் பணிப்பாளர் சபையின் செயலாளர்களாக தொழிற்படுவதுடன், பணிப்பாளர் சபை அதன் கடமைகள் மற்றும் பெறுப்புகளை நிறைவெற்றுவதில் வழிகாட்டி, நிறுவன ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கின்றது.<br>• கடைப்பிடிக்க வேண்டிய புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி பணிப்பாளர் சபைக்கு செயலாளர் அறிவிப்பார். | இணங்கியது |
| A1.5 | சுயாதீனமான தீர்மானம் | சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களின் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான சமமான சந்தர்ப்பம் பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது. | இணங்கியது |
| A1.6 | சபை மற்றும் கம்பனி விடயங்கள் தொடர்பாக போதிய நேரத்தை முயற்சிகளையும் ஒதுக்குதல | அறிவித்தல், நிகழ்ச்சிநிரல் மற்றும் சபைப் பத்திரங்கள் என்பவற்றை மீளாய்வதற்கு பணிப்பாளர்களுக்கு போதிய நேரம் உள்ளென்பதையும் தேவையாயின், மேலதிக தகவல்களை அல்லது விளக்கங்களைப் பெற்றுக்கொள்வததையும் உறுதிசெய்வதற்கு ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்னரும் அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் அவை முன்கூட்டியே வழங்கப்படுகின்றன. | இணங்கியது |
| A1.7 | அவசியமாயின், கம்பனியின் நலனுக்காக மூன்றில் ஒரு பணிப்பாளர்கள் வாக்கெடுப்பினை கோரி தீர்மானத்தை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க முடியும். | | ஏற்புடையதல்ல |
| A1.8 | சபை அறிமுகம் மற்றும் பயிற்சி | உள்ளக மற்றும் வெளிவாரிச் சூழல் தொடர்பாக உரிய தகவல்களை தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் தொடர்ச்சியாக பணிப்பாளர்களை இற்றைப்படுத்துகின்றது. | இணங்கியது |
| A.2 | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் இருவருக்கும் இடையிலான பொறுப்புகளின் பிரிப்பு | மீளாய்வுக்குட்பட்ட இந்த வருடம் பொறுப்புகளினதும் ஆளுகையினதும் தெளிவினை உறுதிசெய்வதற்கு தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் எனும் இரு வகிபாகங்களும் வேறுபடத்தப்பட்டன. | இணங்கியது |
| A.2.1 | ஒரு நபராக தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் வகிபாகங்களின் இணைக்கப்பட்டமையின் நியாயப்படுத்தல் | | ஏற்புடையதல்ல |

| | | | |
|---|---|---|---|
| A.3 | சிறந்த நிறுவன ஆளுகையைப் பேணுவதில் தலைவரின் வகிபாகம் | தலைவர், பணிப்பாளர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவதுடன் கீழ்வருவனவற்றை உறுதிசெய்கின்றார்,<br>• பணிப்பாளர்களின் வினைத்திறனான பங்களிப்பு மற்றும் பங்குபற்றல்<br>• பரிசீலனையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக பணிப்பாளர்களின் கருத்துகள் உறுதிப்படுத்தபட்டுகின்றன.<br>கம்பனி விவகாரங்கள் தொடர்பாக சபை பூரணக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் அனைத்து பங்குதாரர்களுக்கும் அதன் கடப்பாடுகள் தொடர்பாக விழிப்பூட்டுகின்றது. | இணங்கியது |
| A.4 | நிதிசார் புத்திஜீவிகளின் கிடைக்கப்பெறுதல் | கம்பனியின் நிதி விடயங்களைக் கையாளுவதற்கு சபைக்கு வழிகாட்டலை வழங்குவதற்கு அவசியமான நிதி அறிவினைக் கொண்ட அனுபவமுள்ள 2 தொழில்சார் நிபுணர்கள் சபையில் உள்ளனர்.<br>• திரு. அவினாஷ் சிங்ஹால், டெல்லி பல்கலைக்கழகத்தின் இந்துக் கல்லாரியின் வணிக பட்டதாரியொருவராவதுடன் இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்தின் பட்டயம் பெற்ற கணக்காளரொருவராவார்.<br>• திரு. விமலரத்ன இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திலிருந்து பொது முகாமைத்துவ முதுமானி பட்டத்தை பெற்றுள்ளதுடன் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் அமைப்பின் இறுதிப் பரீட்சையினை சித்தி யெய்தியுள்ளார். இவர் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரொருவருமாவார். இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்துடனான சான்றுபடுத்தப்பட்ட வியாபார கணக்காளரொருவராவார். | இணங்கியது |
| A.5 | சபையின் சமநிலை | 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு 9 பணிப்பாளர்களில், 6 பேர் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களாகும். | இணங்கியது |
| A.6 | உரிய நேரத்தில் சரியான தகவல்களை சபைக்கு வழங்குதல் | அட்டவணைப்படுத்தப்பட்ட கூட்டங்களுக்கு முன்னர் பணிப்பானர்களுக்கு தொடர்புடைய தகவல்கள் பற்றி போதிய விளக்களமளிப்பதற்கு சபைப் பத்திரங்களும் நிகழ்ச்சிநிரல்களும் முன்கூட்டியே வழங்கப்படுகின்றன. | இணங்கியது |
| A.7 | பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள் | அகவிதியின் நியதிகளுக்குட்பட்டு வருடாந்தப் பொதுக்கூட்டமொன்றினூடாக பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்படுகின்றனர்.<br>2024 ஆண்டின் போது சபையில் மாற்றங்கள் 54-55 ஆம் பக்கங்களில் உள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது |
| B | பணிப்பாளர்களின் ஊதியம் | | |
| B.1 | நிறைவேற்றுத் தரத்தினருக்கும் பணிப்பாளர்களுக்கு மான ஊதியம் மீது கொள்கையொன்றை உருவாக்கும் செயன்முறை யொன்றை நிறுவல். | | இணங்கியது |
| B.2 | ஊதிய மட்டம் மற்றும் எல்லை | | இணங்கியது |
| B.3 | கொடுப்பனவு செய்யப்பட்ட சபைக்கான ஊதியம் பற்றிய வெளிப்படுத்தல் | நிதியியல் தகவல்கள் - விரிவான வருமானக்கூற்று | இணங்கியது |
| C | பங்குதாரர்களுடனான உறவுகள் | | |
| C.1 | வருடாந்த பொதுக் கூட்டத்தின் ஆக்கபூர்வமான பயன்பாடு மற்றும் பொதுக்கூட்டங்களை நடாத்துதல் | | இணங்கியது |

| | | | |
|---|---|---|---|
| C.2 | பங்குதாரர்குளுடனான தொடர்பூட்டல் | உரியகாலத் தகவல்களை ஏனைய இரு பங்குதாரர்களுக்கும் பரப்புவதற்கு கம்பனி முறையான வழியினைக் கொண்டுள்ளது. | இணங்கியது |
| C.3 | தொடர்புடைய தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக அனைத்து முன்மொழியப்பட்ட முக்கியமான கொடுக்கல் வாங்கல்களையும் பணிப்பாளர்கள் வெளிப்படுத்தல் வேண்டும் | | இணங்கியது |
| D | பொறுப்புக்கூறல் மற்றும் கணக்காய்வும் | | |
| D.1 | நிதியியல் அறிக்கையிடல் | • வருடாந்த அறிக்கையில் நிதியியல் நிலமை, செயலாற்றுகை, வியாபார மாதிரி, ஆளுகைக் கட்டமைப்பு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள், சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் தொடர்பான நடுநிலையான மீளாய்வினை வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>• வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய இடைக்கால அறிக்கைகளை கம்பனி தயாரிக்கும் போது கம்பனிக்கு பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியுள்ளது.<br>• கோவையில் குறிப்பிட்டவாறு வருடாந்த அறிக்கையில் கீழ்வருவன வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br>• முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வுகள் 30-50 ஆம் பக்கங்கள் வரை<br>• பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை 71-73 ஆம் பக்கங்கள் வரை<br>• கம்பனியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று 86 ஆம் பக்கம்<br>• தொடர்ந்தியங்கும் நிலை மீதான கூற்று<br>• உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளரின் கூற்று 71 ஆம் பக்கம்<br>• சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை 78-85 ஆம் பக்கம் வரை<br>• தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று 16-19 ஆம் பக்கம் வரை<br>• நிதியியல் சுற்றுகளின் குறிப்பு 19 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள்<br>• அழைக்கப்படுவதற்கு மூலதனத்தில் கடுமையான இழப்பு இல்லை<br>அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக அமைச்சினால் கோரப்படும் ஏனைய இடைக்கால அறிக்கைகளை கம்பனி சமர்ப்பித்துள்ளது | இணங்கியது |
| D.2 | இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு | கம்பனிக் கொள்கைகளுக்கு அமைவாக ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ சட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது.<br>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் வழிகாட்டலுடனும் உதவியுடனும் உள்ளக கட்டுப்பாடுகள் காலமுறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பான விபரங்கள் வருடாந்த அறிக்கையில் இடர் முகாமைத்துவப் பிரிவு தொடர்பாக 63-70 ஆம் பக்கங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 74-76 ஆம் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. | இணங்கியது |
| D.3 | கணக்காய்வுக் குழு | கணக்காய்வுக் குழு, பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவு துணைபுரிகின்றது. கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் ஆண்டறிக்கையின் அறிக்கையின் 74-76 ஆம் பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இணங்கியது |
| E | நிறுவன முதலீட்டாளர்கள் | | |
| | பங்குடமையாளர் வாக்கெடுப்பு | அனைத்து நிறுவனத்தின் பங்குடமையாளர்களும் பங்குடமையாளர் கூட்டத்தில் பங்கெடுப்பதற்கும் அனைத்து விடயங்கள் தொடர்பாக அவர்களுடைய கருத்தினை வழங்குவதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர். | இணங்கியது |
| | ஆளுகை வெளிப்படுத்துகை தொடர்பான மதிப்பீடு | ஆண்டறிக்கை அறிக்கை, நிறுவன ஆளுகை செயன்முறையை வெளிப்படுத்துகின்றது. | இணங்கியது |

| | | | |
|---|---|---|---|
| G | இணையத்தில் விடயங்களும் இணையப் பாதுகாப்பும் | | |
| | இணைய இடர்வுகளைகளை முகாமை செய்வதற்கும் நிறுவன வலையமைப்புக்கு கம்பனியின் உள்ளேயும் வெளியேயும் தகவல் தொழில்நுட்ப கருவிகள் இணைக்கப்படுவதற்குரிய செயன்முறையையும் பணிப்பாளர் சபை கொண்டிருத்தல் வேண்டும். | • முழுமையான தொழிற்படுத்தப்பட்ட அனர்த்த மீட்பு முகாமைத்துவ நிலையக் கருத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது<br>• வலையமைப்புப் பாதுகாப்பு, தரவு இழப்பு, இணைய வழியில் ஏமாற்றுதல், விநியோகிக்கப்ட்ட சேவை தாக்குதல், மொபைல் சாதனம் மற்றும் சந்தேகத்திற்கிடமான சைபர் நடவடிக்கைகள் கண்காணிப்பு என்பவற்றுடன் கூடிய வலையமைப்பு பாதுகாப்பு தொழில்நுட்ப அமுல்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான அன்றாட பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தல்<br>• காப்பு சேவையகம் மற்றும் மீட்பு சேவையகம்<br>மேலதிக விபரங்கள் 63-70 ஆம் பக்கங்களில் உள்ள இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது | இணங்கியது |
| H | சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகைகளை அறிக்கையிடல் | | |
| | சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகை அறிக்கையிடல் செயலாற்றுகை தொடர்பாக போதிய வெளிப்படுத்துகைகளை வழங்குதல் | செயலாற்றுகை பற்றிய முழுமையான மீளாய்வினை ஆண்டறிக்கை அறிக்கை வழங்குகின்றது. அறிக்கையின் வேறுபட்ட பகுதிகளில் குழுக்களினால் பயன்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட மூலதனங்களின் செயலாற்றுகை விவரிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது |

# இடர்நேர்வு முகாமைத்துவம்

நிலைபேறான வளர்ச்சியை உறுதிசெய்வதில் ஆற்றல் வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடத்தைகள் அத்தியாவசிய மானவையென சிபெஸ்டேலி நிறுவனம் உறுதியாக நம்புகின்றது. எமது அனைத்தையும் உள்ளடக்குகின்ற குறிக்கோள், அனைத்து எமது நிறுவனசார் முயற்சிகளினதும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் பெறுமதியினை மேம்படுத்துவதாகும். முன்னெடுக்கப்படுகின்ற எமது தொழிற்பாடுகளை மோசமாக பாதிக்கக்கூடிய காரணிகளுடன் இணையப்பெற்ற சாத்தியமான அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் இரண்டினையும் நன்கு பரிசீலனையிற்கொள்வது வரை இக்கடமைப் பொறுப்பு நீடிக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான எமது அணுகுமுறையானது அதன் தொடர்ச்சியான மற்றும் ஏற்றதாக்கிக்கொள்கின்ற தன்மை மூலம் வகைப்படுத்தப்பட்டு, எமது நிறுவன உபாயத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் இன்றியமையாத கூறாக ஆக்குகின்றது.

எமது கம்பனி எதிர்கொள்ளும் தொழில் இடர்நேர்வுகள் பல எண்ணிக்கையான காரணிகளால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றன என்பதுடன் அவற்றில் அனைத்தும் எமது நேரடியான கட்டுப்பாட்டுக்குட்பட்டவை அல்ல என்பதை ஏற்றுக்கொள்வது முக்கியமாகும். நிறுவனத்தின் கீர்த்தி, பாதுகாப்பு, சுற்றாடல் கரிசனைகள், ஆரோக்கியம், பாதுகாப்பு பிரச்சினைகள், உற்பத்தித் தரம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பொதுவான சவால்களால் தூண்டப்படும் தொழில் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையுடன் ஒன்றிணைந்த வெளிவாரியாக உந்தப்படுகின்ற சவால்கள் கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறையின் பாகமாக இடையறாது மீளாய்வுசெய்யப்படுகின்றன.

## சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்காள தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்ளை

இடர்நேர்வு முகாமைத்துவ உபாயமானது கம்பனியின் நிறுவன ஆளுகைக் கட்டமைப்பின் மிக முக்கியமான பாகமாக காணப்பட்டு, முகாமைத்துவ தீர்மானங்கள், உபாயத் திட்டமிடல் மற்றும் நாளாந்த தொழிற்பாடுகள் என்பவற்றினுள்ள தங்குதடையின்றி ஒருங்கிணைங்கப்பட்டுள்ளது. தொழிற்பாடு சார்ந்த தொடர்ச்சியினைப் பேணுவதற்கு குறிப்பாக, சிபெற்கோ, எல்ஐஓசி, சினோபெக், மற்றும் ஆர்எம் பார்க் என்பன சார்பில் மொத்த பெற்றோலியப் பொருட்களின் பாதுகாவலர் என்ற வகையில் அதன் முக்கிய பங்கைக் கருத்தில் கொண்டு, செயல்திறன்மிக்க நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் அத்தியாவவசியமானது என்பதை நிறுவனம் அங்கீகரிக்கிறது. அதிக ஆபத்துள்ள சூழலில் செயற்படும் சிபெஸ்டேலி நிறுவனம், எதிர்பாராத நிகழ்வுகளால் வணிகக் குறிக்கோள்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு சாத்தியமான அச்சுறுத்தல்களை முன்கூட்டியே கண்டறிந்து தணிப்பதில் வலுவான முக்கியத்துவத்தை அளிக்கிறது. வணிகத் திட்டமிடல், அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் தகவல் முறைமைகளில் இடரநேர்வுக் கரிசனைகளை உட்பொதியச் செய்துள்ளமை, நிறுவனம் இடர்நேர்வு தணிப்பிற்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் முன்னோக்கிய அணுகுமுறையைப் பின்பற்ற இயலச்செய்கின்றது.

நிறுவனம், இடர்நேர்வு ஆளுகைக்கென வலுவான மற்றும் முழுமையான நிறுவனமட்டக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இக்கட்டமைப்பு, நிறுவனத்தின் கலாசாரத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்திறன் மிக்க தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அடித்தளமாக அமைகிறது. நிறுவனசார் கலாசாரமானது அதன் விழுமியங்கள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள் மற்றும் இடர்நேர்வு பற்றிய ஒட்டுமொத்தப் புரிதல் உள்ளடங்கலாக கம்பனியின் ஒழுக்கநெறியைப் பிரதிபலிக்கின்றது. இது, நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் இடர்நேர்வு விழிப்புணர்வுடன் கூடிய மனப்பான்மையை ஊன்றுவதிலும், நிறுவனத்தின் மூலோபாய குறிக்கோள்களுடன் நடத்தை ஒருங்கிணைக்கப்படுவதிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

இடர்நேர்வுகளை கலந்துரையாடி தீர்வுகாண்பதில் பொறுப்புக்கூறல், ஒழுக்கமான தீர்மானம் எடுத்தல், திறந்த மனப்பாங்கு என்பனவற்றை வலுவான இடர்நேர்வுக் கலாசாரம் வலுப்படுத்துகிறது .இடர்நேர்வு பற்றிய கரிசனைகள் நாளாந்த செயல்பாடுகளிலும் மூலோபாய தீர்மானம் எடுக்கும் செயன்முறைகளிலும் ஒருங்கிணைக்கப்படுவதை இது உறுதி செய்கிறது. மேலும், இடர்நேர்வு பற்றிய தகவல்களை உரியகால வெளிப்படையானதுமான முறையில் தொடர்பூட்டுவதற்கு ஊக்குவிக்கும் சூழலை உருவாக்குவதற்கு ஆதரவளித்து நிறுவனம் அச்சுறுத்தல்களுக்கு முன்கூட்டியே பதலிறுத்தவும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளவும் இயலச்செய்கின்றது.

நிறுவனமுழுவதும் இடர்நேர்வுகளை அடையாளம்கண்டு, மதிப்பீடுசெய்து, நிர்வகித்து கண்காணிக்க கட்டமைக்கப்பட்ட மற்றும் நிலைத்திருக்கக்கூடியதுமான அணுகுமுறையை இக்கட்டமைப்பு வழங்குகிறது. முன்னணி பணியாளர்கள் தொடக்கம் சிரேஸ்ட முகாமைத்துவ குழுவினர் வரை, அனைத்து ஊழியர்களும் இடர்நேர்வை நிர்வகிப்பதில் தங்களின் பங்குகள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்துகொள்ளுவதை இது உறுதிசெய்கிறது. இதன் மூலம் ஒருங்கிணைந்ததும் ஒருமித்ததுமான இடர்நேர்வு முகாமைத்துவ முயற்சியை ஊக்குவிக்கின்றது.

இக்கட்டமைப்பு ஆறு முக்கிய ஒன்றுடன் ஒன்று இணைந்த கூறுகளை கொண்டு ஆக்கப்பட்டதுடன் இடர்நேர்வு விழிப்பு கலாசாரத்திற்கும் செயல்திறன் வாய்ந்த தீர்மானம் மேற்கொள்ளலுக்கும் ஆதரவளிப்பதில் ஒவ்வொன்றும் இன்றியமையாத பங்காற்றுகின்றது.

**I. இடர்நேர்வு முகாமைத்துவம், மற்றும் தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய வரைவிலக்கணம்**

நிறுவனம் முழுவதும் பொதுவான புரிந்துகொள்ளலை தாபிப்பதற்கு முக்கிய எண்ணக்கருக்களை தெளிவு படுத்துகின்றது.

**ii. பணி, தொலைநோக்கு, மைய விழுமியங்கள் மற்றும் வழிகாட்டுகின்ற தொழில்முயற்சி இடர்நேர்வு கோட்பாடுகள்**

இடர்நேர்வு முகாமைத்துவ நடத்தைகளை வழிகாட்டுகின்ற உபாய ரீதியான பின்னணியையும் அடிப்படை சார்ந்த விழுமியங்களையும் வழங்குகின்றது.

**iii. இடர்நேர்வு ஏற்பு**

நிறுவனம் அதன் குறிக்கோள்களை நாடிச்செல்வதில் ஏற்றுக்கொள்வதற்கு விரும்புகின்ற இடர்நேர்வு அளவு மற்றும் வகையினை வரைவிலக்கணம் செய்கின்றது.

**iv. முகாமைத்துவக் குறிக்கோள்கள்**

இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடுகளை வியாபார

இலக்குகள் மற்றும் செயலாற்ற பெறுபேறுகளுடன் அணிசேரச் செய்கின்றது.

**v. தொழில்முயற்சி முழுவதுமான இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பு**

நிறுவனம் முழுவதும் தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவ ஆளுகை மற்றும் பொறுப்புக் கூறலுக்கு ஆதரவளிக்கின்ற வகிபாகங்கள், பொறுப்புகள். மேற்பார்வை பொறிமுறைகள் மற்றும் அறிக்கையிடல் பிரிவுகள் பற்றி விபரிக்கின்றது.

**vi. இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறை**

இடர்நேர்வுகளை இனங்காணுதல், மதிப்பிடுதல். தணித்தல், கண்காணித்தல், அறிக்கையிடல் என்பவற்றுக்கான முறைமைசார்ந்த படிமுறைகளை எடுத்துரைக்கின்றது.




இவ் ஆறு கூறுகளும் ஒன்றாகஇணைந்து இடர்நேர்வு பற்றிய விழிப்புணர்வை சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டின் கலாசாரம், உபாயம் மற்றும் நாளாந்த தொழிற்பாடுகளினுள் உட்பொதியச் செய்கின்ற அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் ஒருங்கிணைந்த தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை உருவாக்குகின்றன. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டின் உபாய குறிக்கோள்களுடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தை அணிசேரச் செய்தல், நிறுவனம் முழுவதும் பொறுப்புக்களை வரைவிலக்கணம் செய்தல் மற்றும் கட்டமைக்கப்பட்ட செயன்முறையொன்றினை நடைமுறைப்படுத்தல் என்பன வாயிலாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் நிச்சயமின்மைகளை செயலூக்கத்துடன் முகாமை செய்வதற்கு நன்கு நிலைநிறுத்தப்பட்டு, தொழிற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மையினை உறுதிசெய்து அனைத்து பங்குதாரர்களுக்குமான நீண்டகால பெறுமதி உருவாக்கத்திற்கு ஆதரவளிக்கின்றது. இக்கட்டமைப்பானது இயக்கவாற்றலும் இடர்நேர்வு உணர்திறனுமுடைய சூழலில் வெளிப்படைத்தன்மைக்கும், பொறுப்புக்கூறலுக்கும் நிலைபேறான வளர்ச்சிக்குமான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டின் கடமைப்பொறுப்பினை மீள வலியுறுத்துகின்றது.

## இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பு

இடர்நேர்வு ஆளுகை என்பது கம்பனியின் ஒட்டுமொத்த நிறுவன ஆளுகை கட்டமைப்பின் அடிப்படை கூறொன்றாகும். நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் இடர்நேர்வு முகாமைத்துவம் உட்பொதியச் செய்யப்பட்டுள்ளதென்றும் உபாயத்திட்டமிடல், தீர்மானம் மேற்கொள்ளுதல், நாளாந்த தொழிற்பாடுகள் என்பவற்றினுள் செயல்திறன் வாய்ந்த விதத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதென்றும் இது உறுதிசெய்கின்றது. நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பு பொறுப்புக்கூறலை ஊக்கமளித்து, வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தி, நீண்டகால நிறுவனசார் குறிக்கோள்களை எய்துவதற்கு துணையளிக்கின்றது.

கம்பனியின் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பானது நிறுவனம் முழுவதும் இடர்நேர்வை முகாமைசெய்வதற்கு தெளிவான விகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களை வரையறை செய்கின்றது. இவ்வகிபாகங்கள் மேற்பார்வை. தொழிற்பாடு அத்துடன் மீளாய்வு பணிகளுடன் கூடிய பல்வேறு பங்குதாரர்கள் மத்தியில் பகிரப்பட்டு, இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றை உறுதிசெய்கின்றது.

இக்கட்டமைப்பு இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய பல்வேறு அடுக்குகளுக்கிடையில் வேறுபடுத்திக் காட்டுகின்ற பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடத்தைக் கட்டமைப்பொன்றான 03 பாதுகாப்பு நிலை மாதிரியுடன் நெருக்கமாக அணிசேர்ந்துள்ளது.



## இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறை

இடர்நேர்வு முகாமைத்துவமானது தொடர்ச்சியான செயன்முறையொன்றாவதுடன் கம்பனியின் செயலாற்றுகை மீளாய்வு மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதல் செயன்முறைகளினுள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இடர்நேர்வு முகாமைத்துவத்தின் நோக்கம் இடர்நேர்வை கையாளுகின்ற செயற்பாடுகள் திட்டமிடப்படக்கூடிய அத்துடன் குறிக்கோள்களை அடைவதன் மீது பாதகமான தாக்கங்களை தணிப்பதற்கு தேவையான போது அல்லது குறித்துகாட்டப்படுகின்றவாறு தொடங்கப்படக்கூடிய விதத்தில் சாத்தியமான பிரச்சினைகள் தோன்றுவதற்கு முன்னர் அவற்றை அடையாளப்படுத்துவதாகும். இடர்நேர்வு முகாமைத்தவ செயன்முறை பின்வரும் முக்கிய படிமுறைகளை கொண்டுள்ளது

1. **சூழ்நிலையினை நிறுவுதல்**

   இடர்நேர்வை முகாமைசெய்வதற்கான குறிக்கோள்கள், நோக்கெல்லை, பிரமாணத்துடன் ஒன்றாக இணைத்து நிறுவனம் தொழிற்படுகின்ற உள்ளக மற்றும் வெளிவாரி சூழலை வரைவிலக்கணம்செய்தல். இப்படிமுறை ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறைக்குமான தளத்தினை அமைக்கின்றது.

2. **இடர்நேர்வு மதிப்பீடு**

   உள்ளக மற்றும் வெளிவாரி மூலங்கள் இரண்டிலிருந்தும் தோன்றுகின்ற தற்போது காணப்படுகின்ற, தோற்றம்பெறுகின்ற மற்றும் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளங் காணுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல் என்பவற்றுக்கான முறைமை சார்ந்த செயன்முறையொன்று. வியாபார குறிக்கோள்களை அடைவது தொடர்பில் இடர்நேர்வுகளின் முக்கியத்துவத்தை நிர்ணயிப்பதற்கு இது உதவுகின்றது.

3. **இடர்நேர்வுப் பரிகாரம்/ இடர்நேர்வு தணிப்பு**

   இடர்நேர்வுகளின் தன்மை மற்றும் மதிப்பிடப்பட்ட மட்டம் என்பவற்றின் அடிப்படையில் அவற்றை முகாமைசெய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள்

   இடர்நேர்வுகளின் தீவிரத்தன்மை மற்றும் நிகழக்கூடிய தன்மை என்பவற்றை சார்ந்து இடர்நேர்வை தவிர்த்தல், கைமாற்றுதல். குறைத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளல் என்பவற்றை பரிகாரத் தெரிவுகள் உள்ளடக்கலாம்.

4. **அறிக்கையிடல், கண்காணித்தல் மற்றும் மீளாய்வுசெய்தல்**

   இடர்நேர்வுகளும் கட்டுப்பாட்டு வழிமுறைகளும் கிரமமாக மீளாய்வுசெய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றதை உறுதிசெய்கின்ற தொடர்ச்சியான செயன்முறையொன்றாகும். இடர்நேர்வு சூழலிலுள்ள மாற்றங்களை இனங்காண இது உதவுகின்றதுடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்கள் செயற்பாட்டில் இருப்பதை உறுதிசெய்கின்றது.

5. **தொடர்பாடலும் ஆலோசனையும்**

   இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட தொடர்ந்து நிகழுகின்ற செயன்முறையொன்றாகும். ஊழியர்களின் வகிபாகங்களுக்கு அமைவாக அவர்கள் நிறுவனத்தின் இடர்நேர்வு உபாயம், முன்னுரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி விழிப்பாக இருக்கின்றனர் என்பதை அது உறுதி செய்கின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை மேற்பார்வை செய்வதில் பணிப்பாளர் சபை முக்கிய வகிபாகத்தை கொண்டிருந்து செயல்திறன்மிக்க உள்ளக தொடர்பாடல் செயன்முறைகளை உறுதி செய்வதுடன் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் பற்றி வெளிவாரி அறிக்கையிடலுக்கான பொறுப்பினை ஏற்கின்றது.



| நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வுகள் பற்றிய கண்ணோட்டம் | | |
|---|---|---|
| இடர்நேர்வு | முக்கிய ஊக்கிகள் | தணிப்பு உபாயங்கள் |
| போட்டியாளர் இடர்நேர்வு | | |
| எமது வாடிக்கையாளர்களுக்கு ஒப்பிடக்கூடிய களஞ்சிய இயலளவை குறைந்த விலையில் வழங்கக்கூடிய வேறு முனைய நிறுவனங்களின் போட்டி, எமது நிதியியல் நிலை மற்றும் தொழிற்பாடுகளின் பெறுபேறுகளை மோசமாகப் பாதிக்கலாம்.<br><br>2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தின் ஊடாக 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலியப் பொருட்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் திருத்தத்துடன், இலங்கையில் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் தனியார் தரப்பினருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது இது எதிர்காலத்தில் போட்டியாளரை உருவாக்கும் இடர்நேர்வைக் கொண்டிருக்கலாம். | • சிபெஸ்டேலி நிறுவனத்தின் இரண்டு பங்குதாரர்களான ஏனைய முனையை நிறுவனங்களிடமிருந்து (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஐஓசி) நாம் போட்டியை எதிர்கொள்கிறோம்.<br><br>• பெற்றோலியத் தொழிற்துறையில் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது எதிர்காலத்தில் போட்டி இடர்நேர்வை அதிகரிக்கலாம். | • களஞ்சிய கொள்ளளவை அதிகரிப்பதன் மூலம் அல்லது வேறுவிதமாக தற்போதுள்ள முனையங்களின் விரிவாக்கம்.<br><br>• பவுசர் தொகுதிகளை அதிகரித்தல்<br><br>• சரியான திறன் கொண்ட பணியாளர்களை ஆட்சேர்த்தல், பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டல் மூலம் உயர் சேவை தரநியமங்கள் பேணப்படுகின்றன.<br><br>• எமது போட்டியாளர்களை விஞ்சிச் செல்ல புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மாறிவரும் வாடிக்கையாளர் விருப்பங்களைப் பூர்த்திசெய்ய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம் புத்தாக்கங்களில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறோம். |
| ஊழியர் தக்கவைத்தல் இடர்நேர்வு | | |
| எமது எதிர்கால வெற்றி எமது நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் ஏனைய முக்கிய பணியாளர்களின் தொடர்ச்சியான சேவையிலேயே தங்கியுள்ளது. எமது நிறைவேற்று அலுவலர்களில் அல்லது முக்கிய ஊழியர்களில் ஒருவரின் அல்லது பலரின் சேவைகளை நாம் இழந்தால், எமது வணிகம், தொழிற்பாட்டுப் பெறுபேறுகள், நிதியியல் நிலைமை என்பன பாதிக்கப்படலாம். நாட்டில் தற்போது நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாக, திறன்மிக்கோர் குடிபெயர்வுப் போக்கு காணப்படுகின்றது, அனுபவம்வாய்ந்த ஊழியர்களை இழப்பதன் மூலம் இது நிறுவனத்தை பாதிக்கலாம். | • நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை<br><br>• தற்போதுள்ள பதவி உயர்வுத் திட்டம் மற்றும் நடைமுறைகள் பற்றிய ஊழியர்களின் ஏமாற்றம்.<br><br>• தொழில் அபிவிருத்தி வாய்ப்புகள் இல்லாமை.<br><br>• பெறுமதி குறைவாக உணர்தல்<br><br>• மோசமான தலைமைத்துவம்<br><br>• நெகிழ்வுத்தன்மை இல்லாமை | • முக்கிய வகிபாகங்களுக்கான பதவியுரிமை திட்டமிடல்.<br><br>• உயர் திறன்படைத்தோருக்கு "திறமைப் பொருத்தம்" திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.<br><br>• பணியாளர் அங்கீகாரம், மதிப்பீடுகள் மற்றும் பதவி உயர்வுகளை உள்ளடக்கிய வலுவான பணியாளர் மதிப்பு முன்மொழிவு மூலம் பணியாளர் ஊக்கத்தை பேணுதல்.<br><br>• தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள்.<br><br>• தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் சமூக மற்றும் நலன்புரி நிகழ்வுகளை நடத்துதல்.<br><br>• அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய பயிற்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிதிட்டத்தில் தொடர்ச்சியான முதலீடு. |
| பொருளாதார இடர்நேர்வு | | |
| எமது முனையங்களில் நாம் செய்யும் இலகுவான சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள், கனரக சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள், மசகு எண்ணெய் மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகளுக்கான கேள்வியிலேயே எமது நிதியியல் பெறுபேறுகள் தங்கியுள்ளன. | • மசகு எண்ணெய்க்கான விலை சூத்திரத்தின் தாக்கம் உலக சந்தையில் பீப்பாய் ஒன்றின் விலைக்கு ஏற்ப எரிபொருள் விலையை தொடர்ந்து மாற்றுவதற்கு வழிவகுக்கும்.<br><br>• தீர்வைகள்/ வரிகள், வட்டி வீதங்கள், பணவீக்கம், சக்தி விலைகள் மீதான அரசின் கொள்கைகள் எரிபொருள் பொருட்களின் கேள்வியில் நேரடி தாக்கத்தை கொண்டிருக்கின்றன. | • பாதகமான பொருளாதார காரணிகளால் எழும் நிச்சயமற்ற நிதி நெருக்கடிகளை எதிர்கொள்ள குறுகிய கால மற்றும் நீண்ட கால நிதியியல் சாதனங்களில் முதலீடுகள் செயற்பாட்டிலுள்ளன.<br><br>• வேறு மூலங்களில் இருந்து வருமானத்தை மேம்படுத்துதல், அதாவது ஆய்வுகூடப் பரிசோதனைக் கட்டணங்கள், தனியார் பவுசர்களுக்கான பயிற்சி/ சுமையாளர் கட்டணங்கள், தீயணைப்பான்கள் நன்நிலைப்படுத்தல், அளவுத்திருத்தக் கட்டணங்கள், வாடகை வருமானம் போன்றவை.<br><br>• பெற்றோலிய தொழிற்துறையை தாராளமயமாக்குவதன் மூலம் வெளிநாட்டு செலாவணி மூலமான நெருக்கடியால் எரிபொருள் விநியோகத் இடையூறுகளின் இடர்நேர்வுகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நடவடிக்கை தனியார் நிறுவனங்களை சந்தையில் நுழைய அனுமதிக்கின்றது, இது தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்ய உதவுகிறது மற்றும் வெளிநாட்டு செலாவணி கையிருப்பு மீதான அழுத்தத்தைத் தணிக்க உதவுகிறது. |

| அரசியல் இடர்நேர்வு | | |
|---|---|---|
| அரசியல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் காரணிகள் வணிகச் சூழலை கணிசமான அளவில் பாதிக்கக்கூடிய இலங்கையில் பெற்றோலியத் துறையில் தொழிற்படுவதை கருத்திற்கொள்கையில் நிறுவனம் பல அரசியல் இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடும். சிபெஸ்டேலி சந்திக்கக்கூடிய சில சாத்தியமான அரசியல் இடர்நேர்வுகள் பின்வருமாறு: | • **ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்கள்:** இலங்கையில் பெற்றோலிய தொழிற்துறையை தாராளமயமாக்க 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் திருத்தம்.<br>• **எரிபொருள் விலைக் கட்டுப்பாடுகள்**<br>• **அரசாங்கக் கொள்கை மாற்றங்கள்:** 2024 சனாதிபதித் தேர்தல் குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றங்களுக்கும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும் வழிவகுத்தது. விலை நிர்ணய ஒழுங்குவிதிகள், வரிவிதிப்பு மற்றும் இறக்குமதி/ ஏற்றுமதி கொள்கைகள் உள்ளிட்ட பெற்றோலியத் துறை தொடர்பான அரசாங்கக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் சிபெஸ்டேலியின் செயல்பாடுகள் மற்றும் இலாபத்தை நேரடியாகப் பாதிக்கலாம்.<br>• **வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகள்:** நாணய நெருக்கடிகள் அல்லது பொருளாதார சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில், அரசாங்கம் வெளிநாட்டு செலாவணி கட்டுப்பாடுகளை விதிக்கலாம், இது சிபெஸ்டேலி நிறுவனத்தின் இறக்குமதி மற்றும் கொடுப்பனவுகளுக்கான வெளிநாட்டு நாணயத்தை அணுகும் திறனை பாதிக்கிறது.<br>• **புவிசார் அரசியல் பதற்றங்கள்:** அண்டை நாடுகள் மற்றும் உலக வல்லரசுகளுடன் இலங்கையின் புவிசார் அரசியல் உறவுகள் பெற்றொலிய தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் மற்றும் நிச்சயமற்ற தன்மையை அறிமுகப்படுத்தலாம். | • இவ்வரசியல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு, சிபெஸ்டேலி நிறுவனம் செயலூக்கமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் அரசாங்க உறவு முயற்சிகள் என்பவற்றில் ஈடுபடலாம். இது அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடல், ஒழுங்குவிதிப்படுத்தல் மற்றும் இணங்குவித்தல் தரநியமங்களைக் கடைப்பிடித்தல் என்பவற்றை ஈடுபடுத்தலாம்.<br>• வணிக நடவடிக்கைகளை பன்முகப்படுத்தல். |
| **ஊழியர் உறவுகள் இடர்நேர்வுகள்** | | |
| ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்திற்கான உரிமையை நாம் அங்கீகரிப்பதால், எமது ஊழியர்களில் சுமார் 99% ஊழியர்கள் தொழிற்சங்கங்களுடன் இணைந்துள்ளனர்.<br>உதாரணமாக, அரச நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கும், பெற்றோலிய சட்டத் திருத்தத்துக்கும் எதிராக பல போராட்டங்கள் இவ்வாண்டில் நடத்தப்பட்டன. | • தொழிற்சங்க வேலை நிறுத்தங்கள் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்தலாம். | • தொழிற்சங்கங்களுடனான உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் இடர்நேர்வு அச்சுறுத்தல்களாக இவை உருவாகும் முன்னர் குறைகளைத் தீர்ப்பதற்கான தளமாக இதனைப் பயன்படுத்துதல்.<br>• கரிசனைக்குரிய துறைகளை அடையாளங்காண தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் கிரமமான கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல்<br>• கரிசனைக்குரிய பகுதிகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு ஊழியர்களுக்கான திறந்த கதவு கொள்கை. |

| | | |
|---|---|---|
| **இயற்கை ஆபத்துகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள்** | | |
| இயற்கை அனர்த்தங்கள் மற்றும் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறு நிகழ்வுகளால் எமது தொழிற்பாடுகள் பாதிக்கப்படலாம். | • வெள்ளம், நிலச்சரிவு, கடுமையான புயல் போன்றவற்றின் குறுக்கீடுகள்.<br>• பயங்கரவாத செயற்பாடுகள். | • அடையாளம் காணப்பட்ட சில இடர்நேர்வுகளுக்கு எதிராக காப்புறுதிகள் பெறப்படுகின்றன.<br>• நிறுவனம் பொருளாதாரத்தின் மையமாக நரம்பாகவிருப்பதனால், உயர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன. |
| **தொழிற்பாட்டு இடர்நேர்வுகள்** | | |
| தொழிற்பாடு தொடர்பான அபாயங்கள் நிறுவனத்தை பாதிக்கலாம் | • எதிர்பாராத கசிவுகள்/ குழாய்களில் ஏற்படும் சேதங்கள் தொழிற்பாட்டு தாமதத்தை ஏற்படுத்தலாம்.<br>• விநியோக உட்கட்டமைப்பு அல்லது ஏற்பாட்டுச் சேவைகளில் இடையூறுகள்.<br>• விபத்துக்கள்<br>• பாரிய அளவிலான தீ | • கசிவுகளை மற்றும் சேதங்களைக் குறைக்க குழாய்களின் வழக்கமான நன்னிலைப்படுத்தல் மற்றும் பராமரிப்பு.<br>• எந்தவொரு தீங்கு விளைவிக்கும் விளைவையும் குறைக்க பணியாளர்களுக்கு போதுமான பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.<br>• சிபெஸ்டேலி நிறுவனம் உள்ளக தீயணைப்பு பிரிவைக் கொண்டுள்ளது. |
| **சட்ட இடர்நேர்வு** | | |
| எமது தொழிற்பாடுகள் உற்பத்தி தர விவரக்குறிப்புகள் தொடர்பான இலங்கை சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டது, மேலும், நாம் விநியோகிக்கும் உற்பத்திகளின் சில தர விவரக்குறிப்புகளை பூர்த்திசெய்ய தவறுவதன் விளைவாக எமது விநியோகத்தர்கள் மூலம் எமக்கு எதிராக கொண்டு வரும் உரிமைகோரல்களின் அடிப்படையில் நாம் சேதங்களுக்கு உட்பட்டிருக்கலாம். | • ஆவி அழுத்தம், கந்தக உள்ளடக்கம், எத்தனோல் உள்ளடக்கம் மற்றும் பயோடீசல் உள்ளடக்கம் அடங்கலாக உற்பத்தி தர விவரக்குறிப்புகள் அல்லது கலவை தேவைகள் மீதான சட்டத் தேவைப்பாடுகள்.<br>• எமது தொழிற்பாடுகளுக்குக் காரணமான உற்பத்தித் தரச் சட்டங்களை மீறுதல் கணிசமான அபராதம் மற்றும் தண்டப்பணம் மற்றும் எதிர்மறையான பிரச்சாரம் என்பவற்றுக்கு நாம் ஆளாகலாம்.<br>• பொதுமக்களுக்கு பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்படும் உற்பத்தி தர விவரக்குறிப்புகளை தாண்டிய (தரமற்ற) உற்பத்தி, மோசமான இயந்திர செயல்திறன் அல்லது இயந்திர சேதத்தை விளைவிக்கலாம், இது சேதங்கள் மற்றும் எதிர்மறையான விளம்பரம் தொடர்பான பொறுப்புக் கோரிக்கைகளை ஏற்படுத்தலாம். | • சிபெஸ்டேலி நிறுவனம் எந்த வகையான பெற்றோலிய எரிபொருள் பரிசோதனைகளுக்கும் அதிநவீன ஆய்வுகூடத்தைக் கொண்டுள்ளதுடன் கடுமையான தரக் கட்டுப்பாட்டு பொறிமுறைகளையும் ஒழுங்குவிதிப்படுத்தல் மற்றும் சான்றிதலுடன் இணங்குவித்தலையும் பின்பற்றுகிறது. |

| ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் இடர்நேர்வு | | |
|---|---|---|
| சிக்கலான மற்றும் அடிக்கடி மாற்றமடையும் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்களுடன், ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதில் குறிப்பிடத்தக்க செலவுகள் மற்றும் பொறுப்புகள் எமக்கு ஏற்படலாம். | • கம்பனியினால் உயர் தீப்பற்றக்கூடிய பிரதான பண்டங்கள் கையாளப்படுவதனால் தொழிற்பாட்டு செயற்பாடுகள் உயர் இடர்நேர்வு வகையீட்டினுள் வருகின்றன. சிறிய தவறு பாரிய தீயினை ஏற்படுத்தக்கூடும். இது கம்பனியினதும் நாட்டின் பொருளாதாரத்தினதும் தொழிற்பாடுகளில் பாரிய தாக்கத்தை உருவாக்கும்<br>• பெற்றோலியப் பண்டங்களின் களஞ்சியப்படுத்தல், கையாளுகை மற்றும் போக்குவரத்து என்பன சுற்றாடலுக்கு அபாயமான பதார்த்தங்கள் மற்றும் வாயுக்களையும் புகையையும் வெளியிடக்கூடும்.<br>• எமது வணிகமானது இயற்கையாகவே பெற்றோலிய உற்பத்திகளின் தற்செயலான கசிவுகள், சிந்துதல்கள், வெளியேற்றங்கள் அல்லது வேறு வெளியேற்றல்கள் அல்லது சுற்றுச்சூழலுக்கும் மற்றும் அண்டை பகுதிகளில் ஏற்படும் அபாயகரமான சம்பவங்களுக்கும் உட்பட்டது, இதற்காக நாங்கள் விசாரணை மற்றும் பரிகாரமளிப்பதற்கு கணிசமான பொறுப்புகளை சந்திக்க நேரிடும்.<br>• பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கத் தவறுதல், நிர்வாக, சிவில் அல்லது குற்றவியல் தண்டனைகள், அனுமதி இரத்துகள் மற்றும் எமது தொழிற்பாடுகளில் சில அல்லது அனைத்தையும் கட்டுப்படுத்தும் அல்லது தடைசெய்யும் மதிப்பிடுதல்கள் அல்லது தடைகள் உட்பட பொருளாதாரத் தடைகளுக்கு வழிவகுக்கலாம். | • சிபெஸ்டேலி நிறுவனம் பிரத்தியேக உள்ளக தீயணைப்பு அலகு, முதலுதவி பயிற்சி, தீயணைப்பு படை, பாதுகாப்புப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. தீயணைப்பு உபகரணங்கள் தொடர்ச்சியாக பரிசோதனை செய்யப்பட்டு அவை நல்ல நிலமையில் உள்ளன என உறுதிப்படுத்தப்படுகின்றன.<br>அதாவது தீயணைப்பு விழிப்பூட்டல் கிரமமாக பரிசீலிக்கப்படுகின்றது. அலுவலக உபகரணங்கள், குழாய்கள் கிரமமாகப் பரிசோதிக்கப்படுகின்றன<br>• எண்ணெய்ப் படிவுகள் உரிய கேள்விப்பத்திர முறை ஊடாக காலத்திற்கு காலம் அகற்றப்படுகின்றதுடன், அது சுற்றாடலில் எவ்வித சேதத்தையும் உருவாக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.<br>• வேண்டப்பட்ட நியமத்தினுள் கழிவுநீரை வைத்திருப்பதற்கான கழிவுநீர் அகற்றல் முறைமையை ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றது.<br>• உரிய முறையிலான கழிவு வேறாக்கல் மற்றும் அகற்றல் முறைமை அமுல்படுத்தப்பட்டுள்ளது.<br>• குழாய் இணைப்புகள் மற்றும் கரைகடந்த கசிவுகளை கையாளுவதற்கு ஊழியர்கள் உரிய முறையில் பயிற்றப்பட்டுள்ளனர். |

| இணைய இடர்நேர்வு | | |
|---|---|---|
| எமது சொத்துக்களை இயக்குவதற்கும் எமது வணிகங்களை நிர்வகிக்கவும் தொழில்நுட்ப முறைமைகளைப் நாம் பயன்படுத்துகிறோம். எமது தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் இணையத் தாக்குதல் அல்லது வேறு பாதுகாப்பு மீறல் முக்கியமான தொழிற்பாட்டு அல்லது நிதிக் கட்டுப்பாடுகளை மீறுவதற்கு வழிவகுத்து எமது தெரிற்பாடுகள், வணிக நடவடிக்கைகள் அல்லது நிதி செயன்முறைகளில் இடையூறுகளை ஏற்படலாம். | • தாக்குதல்காரர்களின் இலக்கிடப்பட்ட தாக்குதல், இலக்கு அல்லாத தாக்குதலின் விளைவாக இணையச் சேதம், உள்ளகத் தாக்குதல், தற்செயலான இணைய சம்பவம் அல்லது இவற்றின் ஒருங்கிணைதல் ஊடாக இணைய சம்பவங்களின் தாக்கம். | • வலையமைப்பு சுற்றயல் பாதுகாப்பு, தரவுகள் இழப்பு, இணைய ஏமாற்று, பகிரப்பட்ட சேவைத் தாக்குதலை நிராகரித்தல், மொபைல் சாதனங்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான இணையச் செயற்பாடுகளை கண்காணித்தல் செயற்பாடுகளுடன் சேர்த்து கிரமமான பரிசோதனை மற்றும் கட்டுப்பாடுகளின் உறுதிப்படுத்தல் ஆகியவற்றை முகாமைசெய்வதற்கு வலையமைப்பு பாதுகாப்பு தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தல்<br>• முழுமையாக தொழிற்பாட்டில் உள்ள அனர்த்த மீட்பு முகாமைத்துவ நிலையம்.<br>• காப்பெடுப்பு சேமிப்பகம் மற்றும் மீட்பு சேமிப்பகம். |
| **பொருட்பதிவேடு, ஆதனம் மற்றும் உபகரணங்கள் மீதான இடர்நேர்வு** | | |
| களஞ்சியப்படுத்தும் உற்பத்திகளின் தீபற்றக்கூடியதன்மை காரணமாக, காப்புறுதி காப்பீட்டில் ஏதேனும் போதிய/ தெளிவற்ற தன்மை, காப்புறுதி நிறுவனங்களால் காப்பீட்டுக் உரிமைக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதற்கு வழிவகுக்கலாம். | | • இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட காப்புறுதி.<br>• சிபெஸ்டேலி நிறுவனம் தீ மற்றும் வணிகக் காப்பீடு, நீர்க்கல பூட்கை (கரைகடந்த குழாய் இணைப்பு) உற்பத்திக் காப்பீடு, வாகனக் காப்பீடு, களஞ்சிய தாங்கிகள் மற்றும் உபகரணக் காப்பீடு போன்ற போதுமான காப்பீட்டுக் பூட்கைகளை எடுத்துள்ளது. |
| **எரிபொருள் முனையம் தொடர்பான குறிப்பிட்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் கிடைக்கப்பெறாமை /வரையறுக்கப்பட்டளவில் கிடைக்கின்றமை.** | | |
| வேலைகளை நிறைவேற்றும் வேகத்தைப் பாதிப்பதுடன் அதிக வேலைச் செலவு | | • வேலைகளை ஒப்படைப்பதன் மூலம் உள்நாட்டு தரப்பினர் முன்னேற்றப்பட்டு வருகின்றனர்.<br>• உள்நாட்டு தரப்பினர்களுடன் கூட்டமைப்பு பங்காளிகளாக வெளிநாட்டு திறன் கொண்ட தரப்பினரை பங்கேற்பு இயலச்செய்யப்பட்டது. |
| **உள்ளூர் சமூக உறவுகளில் மீதான இடர்நேர்வு** | | |
| நாம் செயற்படும் சமூகங்களின் சமூக-பொருளாதார முன்னேற்றத்தை வலுவூட்டி பங்களிப்பது நிறுவனம் பற்றிய எண்ணப்பாங்கிற்கு முக்கியமானது. | | • உயர் மட்ட சமூக ஈடுபாடும் நமது சமூகங்களுடன் அர்த்தமுள்ள உறவுகளை வளர்த்தலும்.<br>• முன்னெடுக்கப்படும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களில் முதலீடு |
| **மோசடிகள் மற்றும் சட்டவிரோத செயல்கள்** | | |
| முகாமைத்து மோசடி, ஊழியர் மோசடி மற்றும் வேறு சட்டவிரோத செயல்களின் இடர்நேர்வு | | • உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறைகள் பற்றிய சுயாதீனமான உத்தரவாதத்தை வழங்குவதற்கு சிபெஸ்டேலி நிறுவனம் தனியான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைக் கொண்டுள்ளது.<br>• பிரிவுத் தலைவர்களின் மேற்பார்வை மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வழிகாட்டுதலின் கீழ் ஒவ்வொரு செயன்முறைக்கும் அதிகாரப் ஒப்படைப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.<br>• வெளிவாரி கணக்காய்வாளர்களால் மதிப்பிடப்பட்ட நிதியியல் நிலை அறிக்கையின் நேர்மைத்தன்மை. |

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

## பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கம்பனியின் விவகாரங்கள் பற்றிய 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது.

### முதன்மைத் தொழிற்பாடுகள்

கம்பனியின் முதன்மை நடவடிக்கையானது, இலங்கையில் பெற்றோலிய களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளை வசதிப்படுத்தல் மற்றும் எண்ணெய் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய்த்தொகுதிகள் மற்றும் பவுசர் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய மற்றும் விநியோக உட்கட்டமைப்பை உரித்தாகக் கொள்ளுதல், தொழிற்படுதல் 2003 ஒக்டோபர் 13ஆம் திகதி வெளியிடப்பட்ட 1310-8 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் மற்றும் கொலொன்னாவை, முத்துராஜவெல மற்றும் நாடு முழுவதிலும் உள்ள மொத்தக் சாலைகள் மற்றும் தொடர்புடைய வசதிகள் மற்றும் முத்துராஜவெல எண்ணெய் நிலையத்திற்கான தனி நிலைய நங்கூர மிதவை, கொழும்பு துறைமுகம் முதல் கொலொன்னாவை நிலையம் வரை மற்றும் வாடிக்கையாளர் சேகரிப்பு எல்லைகள் வரை அவற்றின் கிளைகள், காலி துறைமுகம் தொடக்கம் மாகல்ல வரை மொத்தக் சாலைகள் மற்றும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நிலையங்கள் மொத்தச் சாலைகளிலுள்ள குழாய்த் தொகுதி போன்றன தொடர்பில் பயன்படுத்தவதற்கான உரிமை அத்துடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அனுபவிக்கப்படும் குத்தகை உரித்து உரிமையுடன் தாபிக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாட்டாளர் வசதியாகும்.

### தொழிற்பாடுகள் மற்றும் நிதி சிறப்புக்கூறுகள் பற்றிய மீளாய்வு

தொழிற்பாடானது ரூ. 3,381,228,846.00 கொண்ட தேறிய இலாபத்துடன் ரூ. 18,898,875,688.00 வருவாயைக் காண்பித்தது.

| விபரங்கள் | 2024.12.31<br>ரூ. | 2023.12.31<br>ரூ. |
|---|---|---|
| புரள்வு | 18,898,875,688 | 10,150,031,584 |
| வரிக்கு முந்திய இலாபம் | 4,998,057,255 | (314,493,117) |
| வரிக்குப் பிந்திய இலாபம்/ (நட்டம்) | 3,381,228,846 | 36,611.411 |

### சாட்டப்பட்ட மூலதனம்

2024 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு குறிக்கப்பட்ட மூலதனம் ரூ. 7,500,000,000 ஆகும். பங்குரிமை விநியோகம் பின்வருமாறு:

| | சாதாரண பங்குகள் |
|---|---|
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 500,000,000 |
| லங்கா இந்தியன் ஒயில் கம்பனி லிமிடெட் | 250,000,000 |

### ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இவ் ஆண்டின் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 10 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### பங்கிலாபம்

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்காக பணிப்பாளர்கள் பங்கிலாபம் எதனையும் பரிந்துரைக்கவில்லை.

### 2024 டிசம்பர் 31 இன் பணிப்பாளர்கள்

2024 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பணிபாளர் சபை பின்வருமாறு:

திரு. டி.ஜே.ஏ.எஸ்.டி.எஸ். ராஜகருண
கலாநிதி என்.கே.எம்.சி. நெத்திகுமாரகே
திரு. தீபக் தாஸ்
திரு. டப்லிவ். எஸ். எச். குமார
திரு. அவினாஸ் சிங்கால்
திரு. சுனில் கே. மஹாராண
திரு எஸ். எச் வி. குமார
திரு. ஏ.ஜே.எல். விமலரத்ன
திரு. எம்.எம்.சி டொஸ்

### பணிப்பாளர்களின் வேதனாதிகள்

பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற வேதனாதிகள் நிதிக்கூற்றக்கான வருமானக் கூற்றில் விபரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### அக்கறைகள் பற்றிய பதிவேடு

கம்பனியானது 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக நலன்கள் பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணுகின்றது. 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 192 (2)ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அனைத்துப் பணிப்பாளர்களும் பிரகடனங்களை மேற்கொண்டுள்ளனர். தொடர்புடைய பதிவுகள் மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் போது நலன்கள் பற்றிய பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டன.

### நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசாங்கத்துடன் தொடர்புடைய மற்றும் ஊழியர்களுக்கான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்கும் உரிய திகதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. அல்லது கம்பனியின் ஏடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

### தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

வியாபார தொழிற்பாடுகளை தொடர்வதற்கு கம்பனி போதிய வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர்கள் நம்புகின்றனர். அதற்கமைய நிதி கூற்றுகளை தயாரிக்கையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவினை பின்பற்றுவது பொருத்தமானது என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

**ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகள்**

நிதியியல் கூற்றுக்கான குறிப்பு இல. 22 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய சரிப்படுத்தல்களை வேண்டுகின்ற கம்பனி மீதான ஏதேனும் முக்கிய தாக்கத்தை கொண்டிருக்கக்கூடிய ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிகழ்ந்துள்ள முக்கிய நிகழ்வுகள் ஏதும் காணப்படவில்லை.

**கணக்காய்வாளர்கள்**

அரசியலமைப்பின் 19ஆவது திருத்த நியதிகளுக்கு அமைய கம்பனியின் கணக்காய்வாளராக பணிப்பாளர்களாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை அல்லது அவர் பெயர் குறிப்பிட்டவரை நியமிப்பதற்கு கம்பனி வேண்டப்பட்டுள்ளது.

2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டுக்கான கணக்காய்வு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளருக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் நிதியியல் கூற்றுக்களுக்கான விபரிக்கப்பட்ட வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் அறிந்தவரையில் மேலே வெளியிடப்பட்டவை தவிர கணக்காய்வாளர்கள் கம்பனியுடன் ஏதேனும் உறவினை (கணக்காய்வாளர் ஒருவராகத் தவிர) கொண்டிருக்கவில்லை. கணக்காய்வாளர்கள் கம்பனியில் அல்லது அதன் குழுமக் கம்பனிகளில் ஏதேனும் நலனையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்கநெறிக் கோவைகளுக்கு அமைவாக அவர்கள் சுயாதீனமானவர்கள் என்பதை உறுதிசெய்கின்றனர்.

கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டம் 2025 ஓகஸ்ட் 26 பி.ப 3 மணிக்கு கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் இடம்பெறும்.

பணிப்பாளர் சபைக்காகவும் சார்பாகவும்

**தலைவர்** **பணிப்பாளர்**

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைவாக

டிலொட் கோபரேட் சேர்விஸஸ் (பிறைவட்) லிமிடெட்
**கம்பனிய்ன செயலாளர்கள்**

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

## குழுவின் வகிபாகம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது பணிப்பாளர் சபையின் கீழ் முறையாக நிறுவப்பட்ட துணைக் குழுவாகும். இது சபைக்கு அறிக்கையிடுவதுடன் அதற்கு பொறுப்புக்கூறத்தக்கதாகும். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முதன்மை வகிபாகம், நிறுவனத்தின் நிர்வாகச் செயன்முறைகள், இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறை, மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறை தொடர்பில் சபையின் தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, பிரச்சினைகளை தீர்த்து, துணையளிக்கின்ற அதேவேளை, நிறுவனத்தின் நிதி அறிக்கையில் செயன்முறையின் நம்பகத்தன்மை மற்றும் நேர்மையினை உறுதிப்படுத்துவதாகும். சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காய்வாளர்கள் நிறுவனத்தினதும் ஏற்புடைய உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் மூலம் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு கணக்கியல் தரநியமங்களுடன் அது இணங்குவதை உறுதிசெய்தல்.

## உள்ளமைப்பு

2024 மே 29 வரை இலங்கை பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடெட் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்ட 04 அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருந்தது

- திரு.ஈ.ஏ ரத்னசீல - தலைவர்
- திரு.அசீம் பர்கவா - உறுப்பினர்
- திரு. மனோஜ் கமகே - உறுப்பினர்
- திரு. யசிறு லங்காதிலக - உறுப்பினர்

2024 நவம்பர 22 தொடக்கம் இலங்கை பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடெட் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழவை பின்வரும சுயாதீன நிறைவேற்று பணிப்பாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

- திரு எஸ். எச் விஜித குமார - தலைவர்
- திரு. அவினாஸ் சிங்கால் - உறுப்பினர்
- திரு. ஏ.ஜே.எல். விமலரத்ன - உறுப்பினர

அரசாங்க வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வு குழுக்களை நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்ட பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறித்துரைத்த கடமைகளின் நோக்கெல்லையினை உள்ளடக்கி அதேபோன்று பணிப்பாளர் சபையினால் குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கி கணக்காய்வுக் குழுவின் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பணிகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான அவற்றின் இணக்கப்பாடு என்பவற்றை உறுதி செய்வதற்கு நிதியியல் அறிக்கையிடலை தயாரித்து எடுத்துரைப்பதில் கம்பனியால் பின்பற்றப்பட்ட முறைமை, செயன்முறைகளில் நம்பகத்தன்மை, கணக்கீட்டு கொள்கைகளின் மற்றும் பின்பற்றப்பட்ட முறைகளின் ஒத்திசைவு மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டவைகளில் போதுமான தன்மை என்பவற்றை குழு, மீளாய்வு செய்கின்றது. கம்பனிகள் சட்டம் மற்றும் வேறு தொடர்புடைய நிதியியல் அறிக்கைகளுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்படுத்தல்களுடன் நிதியியல் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மற்றும் தகவல் தேவைப்பாடுகள் என்பவற்றுடனான கம்பனி இணக்கபாட்டையும் மீளாய்வு செய்கின்றது. வெளிவாரி கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் செயலாற்றத்தை மதிப்பிட்டு உள்ளக கட்டுப்பாடுகளின் போதுமான தன்மையையும் குழு மீளாய்வு செய்கின்றது. நிதியியல் கூற்றுகளை அவை அனுமதிப்பதற்காக குழு சபைக்கு பரிந்துரைகளை வழங்குகின்றது. கம்பனி ஆட்பட்டுள்ள இடர்நேர்வுகளையும் குழு மீளாய்வு செய்து அத்தகைய இடர்நேர்வுகளில் இருந்து தோன்றுகின்ற தாக்கத்தை முகாமைசெய்து தணிக்கும் விதத்தில் கம்பனியினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் அனுமதிக்கின்றது.

## உள்ளகக் கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு திரு. மகேந்திர ஜயசேகர, FCMA, CPA (அவுஸ்திரேலியா), வியாபார நிருவாக முதுமாணி, என்பவர் 2020 ஒக்டோபர் தொடக்கம் தலைமை வகித்தார். உள்ளக கணக்காய்வு அணி நிதி, தகவல் தொழில் நுட்பம், தகவல் பாதுகாப்பு, மோசடி விசாரணை என்பவற்றில் கலந்த நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் உலகளாவிய சிறந்த நடத்தைகளிலிருந்து இப்பிரிவு அனுகூலம் பெறுகின்றது.

சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றன என்றும் நிதியியல் கூற்றுக்களை தயாரித்து வெளிப்படுத்துவதில் நிதியியல் அறிக்கையிடல் முறைமை நம்பியிருக்கக்கூடியது என்றும் பணிப்பாளர்களுக்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்ற வகையில் வடிவமைக்கப்பட்ட கணக்கீட்டு முறைமையையும் வினைத்திறனான நிதியியல் கட்டுப்பாடுகளையும் மதிப்பிடுவதற்கு உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையின் நோக்கெல்லை மற்றும் உள்ளடக்கத்தை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வு செய்தது. உள்ளக கணக்காய்வுப் பிரிவு கம்பனியுள் நிறுவப்பட்டுள்ளது. கணக்காய்வு விதப்புரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதற்கு பின்தொடர் நடவடிக்கை மீளாய்வுகள் காலமறையாக திட்டமிடப்படுகின்றன.

இடர்நேர்வு அடிப்படையிலான உள்ளக கணக்காய்வானது உள்ளக கணக்காய்வு நோக்கெல்லையினை விரிவு படுத்துவதற்காக 2018 இல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறையாகும். இடர்நேர்வுத் தரப்படுத்தலானது உடனடி தீர்வு நடவடிக்கைகளுக்காக அத்தகைய பிரச்சினைகள் மீது மிகுந்த கவனத்தை முகாமைத்துவத்திற்கு வழங்குகின்றது. உள்ளடக்க கணக்காய்வின் நோக்கெல்லை உள்ளக கணக்காய்வு சாசனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

## நியதிச்சட்ட கணக்காய்வுகள்

2018 இன தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வின் தன்மை, அணுகுமுறை மற்றும் நோக்கெல்லை ஆகியவற்றை மீளாய்வுசெய்வதற்கு இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலகமான நியதிச்சட்ட கணக்காய்வாளர்களுடன் குழு ஆலோசிக்கிறது.

எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கு பதிலிறுத்துவதில் முகாமைத்தவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும் செயற்பாட்டில் உள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் செயல்திறன் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

## கூட்டங்கள்

மீளாய்வுக்கு உட்படுகின்ற ஆண்டின் போது மேலே குறிப்பிட்டவாறு குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை செயலாற்றுவதற்காக 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆண்டின் போது கூட்டங்களில் பங்குபற்றிய மற்றும் அவதானிப்பு உறுப்பினர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| தொடர் இல. | திகதி | குழு உறுப்பினர் எண்ணிக்கை | பங்குபற்றிய உறுப்பினர்கள் | உறுப்பினர்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 20.02.2024 | 04 | 04 | திரு. ஈ.ஏ. ரத்னசீல - தலைவர்<br>திரு. அசீம் பர்காவா - உறுப்பினர்<br>திரு. மனோஜ் கமகே - உறுப்பினர்<br>திரு. யசிறு லங்காதிலக - உறுப்பினர்<br>திரு. அனுலசிறி (அவதானிப்பாளர்)<br>தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>திருமதி. கே. எஜ் சமதரா (அவதானிப்பாளர்)<br>தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்)<br>அரசாங்க தொழில்முயற்சிகள் அமைச்சு |
| 02 | 29.05.2024 | 04 | 02 | திரு. ஈ.ஏ. ரத்னசீல - தலைவர்<br>திரு. யசிறு லங்காதிலக - உறுப்பினர்<br>திரு. அனுலசிறி (அவதானிப்பாளர்)<br>தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>திருமதி. கே. எஜ் சமதரா (அவதானிப்பாளர்)<br>தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்)<br>அரசாங்க தொழில்முயற்சிகள் அமைச்சு |
| 03 | 22.11.2024 | 03 | 03 | திரு எஸ். எச் விஜித குமார - தலைவர்<br>திரு. அவினாஸ் சிங்கால் - அங்கத்தவர்<br>திரு. ஏ.ஜே.எல். விமலரத்ன்<br>திரு. என் எச் ஏ ஆர் கே. குணரத்னே -<br>அவதானிப்பாளர்) தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>திரு. எஸ் யூ டி. மானவசிங்க அவதானிப்பாளர்<br>தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்)<br>அரசாங்க தொழில்முயற்சிகள் அமைச்சு |
| 04 | 06.12.2024 | 03 | 03 | திரு எஸ். எச் விஜித குமார - தலைவர்<br>திரு. அவினாஸ் சிங்கால் - அங்கத்தவர்<br>திரு. ஏ.ஜே.எல். விமலரத்ன்<br>திரு. என் எச் ஏ ஆர் கே. குணரத்னே-<br>அவதானிப்பாளர்) தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>திரு. டி.பி.எஸ்.ஜே. குமார (அவதானிப்பாளர்) அரசாங்க தொழில்முயற்சிகள் அமைச்சு |

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு வகிபாகம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது உபாயமார்க்க பிரச்சினைகள் மீது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு பல தீர்மானங்களையும் விதப்புரைகளையும் வழங்கியது.

- முகாமைத்துவம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுடன் இணைந்து உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தல்.
- வெளிப்படைத்தன்மை, புரிந்துகொள்ளல் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதிசெய்வதன் மூலம் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான எடுத்துரைப்பினை உறுதி செய்வதற்கு நிதியியல் அறிக்கையிடல் முறைமையை மேற்பார்வை செய்தல்.

- நட்டங்களை உருவாக்கும் அலகுகளுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக விதப்புரைகளை முன்மொழிவதற்காக ஏற்பட்ட நட்டங்களுக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்களை அடையாளம் காணுதல் மற்றும் விரிவான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆய்வுசெய்தல்
- வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் மற்றும் செயற்பாட்டு திட்டத்தை மீளாய்வு செய்தல்.
- இடர்நேர்வு முகாமைத்துவமானது அனைத்தையும் உள்ளடக்கியது மற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதன் மூலம் இடர்நேர்வுகளை அடையாளப்படுத்தல் ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்திற்கு இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு பரிகார நடவடிக்கைகளை எடுத்தல்.
- உயர் மட்டத்தின் தொனியிலிருந்து வெளிக்கொணருகின்ற வலுவான மற்றும் செயற்திறன் மிக்க உள்ளக கட்டுப்பாடுகளுக்காக நிறுவனம் முழுவதும் கடமைப்பொறுப்பொன்றினை உருவாக்குதல்.
- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், ஒழுக்கநெறிகள், ஆர்வமுரண்பாடு, துர்நடத்தை மற்றும் மோசடி விசாரணைகள் போன்றவற்றுடனான இணங்குவித்தல் தொடர்பில் நிறுவனக்கொள்கைகளை மீளாய்வு செய்தல்.
- நிலமைகள், முன்னேற்றங்கள், புதிய அபிவிருத்திகள், பிரச்சினை மிக்க விடயப் பரப்புகள் தொடர்பில் சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் தொடர்ச்சியான தொடர்பினை ஏற்படுத்துதல்.

## நிறுவனசார் வினைத்திறனையும் செயல்திறனையும் மேம்படுத்துவதற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகள்

- உள்ளக அபிவிருத்தியில் நீண்டகால தாமதமடைதலை கருத்திற் கொண்டு குழு உரியகால நடைமுறைப்படுத்தலையும் மேம்பட்ட தொழிற்பாட்டு தன்மையினையும் உறுதி செய்வதற்கு புதிய சம்பள வழங்கல் முறைமையொன்றினை உருவாக்குவதற்கான வெளியிலிருந்து சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு பரிந்துரைத்தது.
- ஊழியர்களின் பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல், உயர் செயலாற்றுகையினை அங்கீகரித்தல் மற்றும் பெறுபேறுகளால் இயக்கப்படும் நிறுவனசார் கலாசாரமொன்றுக்கு ஆதரவளித்தல் என்பவற்றுக்காக முறைசார்ந்த செயலாற்றுகை கணிப்பீட்டு முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு குழு பரிந்துரைத்தது.
- பெற்றோலிய கைத்தொழிலின் பரிணாம வளர்ச்சியடைகின்ற இயக்கவாற்றல்களை கருத்திற் கொண்டு தொடர்பு மற்றும் பின்னணி சார்ந்த செம்மையினை உறுதிசெய்வதற்கு நிறுவனத் திட்டமொன்றினை தயாரிப்பதற்காக உள்ளக நிபுணத்துவத்தை உபயோகிப்பதை குழு பரிந்துரைத்தது.
- உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் என்பவற்றின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை மதிப்பிடுவதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய முறைமை சார்ந்த கணக்காய்வொன்றினை நடாத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தை ஈடுபடுத்துவதற்கு குழு பரிந்துரைத்தது.
- விலை மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக நிலையான சொத்துக்கள் பற்றிய விலைமதிப்பீடொன்றினை தொடங்குவதன் மீது குழு வழிகாட்டல்களை வழங்கி நிதியியல் கூற்றுகளில் சொத்துக்களின் பெறுமதியினை சரியாக எடுத்துரைப்பதை உறுதிசெய்கின்றது.
- இடர்நேர்வு முகாமைத்துவத்தினதும் தகவல் ஆளுகையினதும் முக்கியத்துவத்தை அங்கீகரித்து குழு பிரத்தியேகமான இடர்நேர்வு அலுவலர் ஒருவரினதும் மற்றும் பிரதம தகவல் அலுவலகரொருவரினதும் நியமனத்தை பரிந்துரைத்தது.
- சிசிசிடி முறைமை கருத்திட்டத்தின் நிறைவினை குழு வழி நடாத்தியது.



**திரு.எஸ். ஹேமந்த விஜிதகுமார**
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

# நிதியியல்
# அறிக்கைகள்



# கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல. ENR/C/CPSTL/AR/2024 — 11 யூலை 2025

தலைவர்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெடின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1. (அ) முனைப்பலியுள்ள அபிப்பிராயம்**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினலஸ் லிமிடெடின் (கம்பனி) 2024 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம், எனது அறிக்கையின் முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களுக்கான விளைவுகள் தவிர, இணைந்துள்ள நிதிக்கூற்றுகள், 2024 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான கம்பனியின் நிதியியல் நிலைமை மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்றன.



අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

## 1.2 முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

அ. முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் கொள்விலை ரூ. 10,477 மில்லியனாகும். இது இ.க.நி 16- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் இன் 51 ஆம் பந்திக்கமைவாக அவற்றின் எஞ்சியிருக்கின்ற பெறுமதியினையும் பயன்பாடுமிக்க ஆயுட் காலத்தையும் மீளாய்வு செய்யாது கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற 26,267 ஆதன, பொறித்தொகுதி மற்றும் உபகரண உருப்படிகளை உள்ளடக்குவதுடன் அச்சொத்துக்கள் நியமத்தின் 79(ஆ) பந்திக்கமைவாக நிதியியல் கூற்றுகளில் எடுத்துரைக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் 2003இல் கம்பனியின் தொடக்கத்தில் இருந்து காணி மற்றம் கட்டடங்கள் தவிர அதன் சொத்துக்களை கம்பனி மீள்விலைமதிப்பீடு செய்திருக்கவில்லை. ஆகையினால் காணி மற்றும் கட்டடங்கள் தவிர நடைமுறையற்ற சொத்துக்களின் சீர்மதிப்பு பெறுமதி மீளாய்வு செய்யப்படும் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகளில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆ இ.க.நி 16- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் இன் 36 ஆம் பந்திக்கமைவாக “இ.க.நி 16- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண உருப்படியொன்று மீள் விலை மதிப்பீடு செய்யப்படுமாயின் அச்சொத்துக்கள் உரித்துடைய ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண ஒட்டுமொத்த வகுப்பும் மீள் விலைமதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்” என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் கம்பனிக்கு சொந்தமான 371 கட்டடங்களில் 81 கட்டடங்களை மீள் விலைமதிப்பீடு செய்வதற்கு தவறியிருந்தது. இதன் கொள்விலை கட்டடங்களின் மொத்தக் கொள்விலையின் ரூபா 246,985,014 அல்லது 13 சதவீதம் ஆகும். மேலும் நிலையான சொத்துப் பதிவேட்டுடன் கூடிய விலைமதிப்பீட்டு அட்டவணையில் 147 மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்ட கட்டடங்களை உறுதி செய்வதற்கு இயலாதிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ) தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

i. மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுக்காக கம்பனியின் நிதிக்கூற்றுகளுக்கமைவாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்கப்பெறத்தக்க தொகை ரூ. 8,100,420,819 ஆகவிருந்தது. எனினும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நிலுவை ரூ. 6,753,780,207 ஆக இருந்தது. அதற்கமைய ரூ. 1,346,640,612 கொண்ட வேறுபாடு அவதானிக்கப்பட்டது. கம்பனி வேறுபாட்டை இணக்கம் செய்திருந்ததுடன் இவ்வேறுபாட்டுடன் இணங்குவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடல்களை கொண்டிருந்தது. அதற்கமைய, ரூ. 24,000,000 கொண்ட தேறிய வேறுபாட்டுடன் கம்பனி பரஸ்பரம் உடன்பட்டிருந்தது. எனினும் கம்பனியின் நிதியியல் பதிவேடுகளில் கணக்கிடப்பட வேண்டியிருந்த வேறுபாட்டுக்கு வழிவகுக்கின்ற ரூ. 777,413,155 தொகையுடைய மொத்த கொடுக்கல்வாங்கல்கள் 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு பதியப்பட்டிருக்கவில்லை. மேலும் இணக்கம் பார்த்தலில் ரூ. 1,322,640,612 வேறுபாடு பரஸ்பர இணங்கிக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூ. 719,393,334 தொகையுடைய 5 தொடக்கம் 14 ஆண்டுகளுக்கு மேல் நீண்டகாலமாக நிலுவையாகவிருந்து வருகின்ற கிடைக்கப் பெறத்தக்க மீதிகள் அவதானிக்கப்பட்டன.

ii. மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுகளுக்கமைவாக லங்கா இந்தியன் ஒயில் கம்பனியிடமிருந்து (எல்ஐஓசி) கிடைக்கப்பெறத்தக்க தொகை ரூ. 1,163,874,058 ஆகவிருந்தது. எனினும் எல்ஐஓசி மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நிலுவையின் பிரகாரம் அது ரூ. 356,002,161 ஆகும. அதற்கமைய, ரூ. 807,871,879 கொண்ட வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, வேறுபாட்டினை இனங்காண்பதற்கு கணக்கிணக்கம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ரூ. 637,032,487 தொகையுடைய மொத்த போக்குவரத்து கட்டணங்கள் எல்ஐஓசியுடன் பரஸ்பரம் உடன்பட்டிருக்கவில்லை.

ஆகையினால், இவ்வருமதியை அறவிடும் தன்மை கேள்விக்குறியாகும். மேலும் நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற ரூ.2,495,897 தொகை 8 ஆண்டுகளுக்கு மேல் தீர்ப்பனவு செய்யாது காணப்படுகின்றது.

ஆ) பிராந்திய அடிப்படையில் களஞ்சிய வசதிகளை பராமரிப்பதற்கு நீண்ட கால வாடகை அடிப்படையில் கம்பனி 09 புகையிரத ஒதுக்குகளை பயன்படுத்துகின்றதென்றும் இணங்கியவாறு 2013 ஆம் ஆண்டு வரை வாடகை கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருக்க வில்லை என்றும் அவதானிக்கப்பட்டது. புகையிரத திணைக்களத்தின் பொது முகாமையாளரின் 2024 செப்டெம்பர் 12 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் நிலுவையாக இருக்கின்ற செலுத்தப்படத்தக்க வாடகை ரூபா 111,108,874 ஆகும். 2024 நிதியியல் கூற்றுகளில் செலுத்தப்படத்தக்க வாடகையாக இனங்காணப்பட்ட பெறுமதி ரூபா 99,876,792 ஆகும். அதற்கமைய கம்பனி மூலமான கொடுப்பனவு செய்யத்தக்க வாடகையின் குறைவான ஏற்பாடு ரூபா 11,232,282 தொகை 2024.12.31 அன்றின்படியான நிதியியல் கூற்றுகளில் இணங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் இக்குத்தகை உடன்படிக்கைகள் 2013ம் ஆண்டின் காலாவதியடைந்திருந்தன என்பதும் அவதானிக்கப்பட்டது. இருந்த போதிலும் விலை மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து வாடகை பெறுமதியினை பெற்றுக் கொள்வதன் மூலம் புகையிரத திணைக்களம் குத்தகை உடன்படிக்கைகளை சமர்ப்பித்திருந்த போதிலும் வாடகை பெறுமதியுடன் இணங்காமையின் காரணமாக கம்பனி உடன்படிக்கையினை கைச்சாத்திட்டிருக்கவில்லை.

**1.2.3 கணக்காய்வுக்காக ஆவண ரீதியான சான்றுகள் கிடைக்கப்பெறச் செய்யப்படாமை**

அ. அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான தொழிற்பாட்டு கையேட்டின் 6.7 ஆம் பந்திக்கமைவாக நிலையான சொத்துக்கள் வருடாந்த அடிப்படையில் பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். எனினும் 2003 ஆம் ஆண்டில் கம்பனி மீள கட்டமைக்கப்பட்டதன் பின்னர் நிலையான சொத்துக்களை கம்பனி பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தியிருக்கவில்லை. ஆகையினால் ரூபா 18,597,745,238 பெறுமதியிடப்பட்ட மீளாய்வு ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகளில் பதிவாகிய பாரியளவிலான நிலையான சொத்து வகுப்புக்கள் உள்ளமை மற்றும் பெறுமதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு எனக்கு இயலாதிருந்தது.

ஆ. 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 23,137,341 தொகையுடைய 6 கருத்திட்டங்களுடன் தொடர்புடைய முன்னெடுக்கும் பணி ஆண்டின் போதான இலாபத்திற்கெதிரான பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது. ரூபா 16,979,325 தொகை கொண்ட இப்பதிவழிப்பு விலைப்பட்டியல்களை ரூ. 8,225,012 தொகையுடைய பொறியியலாளர் சான்றிதல்களை பரீட்சித்தலின் மீதும் அவை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக கணக்காய்வுக்கு கிடைக்கப் பெறாத மேற்குறித்த பதிவழிப்புக்காக சபை அனுமதி கிடைக்கப்பெறவில்லை. ஆகையினால் சொல்லப்பட்ட பதிவழிப்பு பற்றிய அதிகாரம், செம்மை மற்றும் பெறுமதியை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக எனது கணக்காய்வை நான் நடாத்தினேன். அந்நியமனங்களின் கீழ் எனது பொறுப்புகள், எனது அறிக்கையின் நிதிக்கூற்றுகள் பிரிவின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றானது எனது முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதுமானதும், பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.3 கம்பனியின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

கம்பனியின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை ஏனைய தகவல்கள் கொண்டுள்ளன ஆனால் நிதிக் கூற்றுகளையும் அதன் மீதான எனது கணக்காய்வாளரின் அறிக்கையையும் அது உள்ளடக்கவில்லை. இது கணக்காய்வாளரின் இவ்வறிக்கையின் திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறச் செய்யப்பட்ட வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

நிதிக் கூற்றுகள் மீதான எனது அபிப்பிராயம் வேறு தகவல்களை உள்ளடக்குவதுடன் அதன் மீதான உத்தரவாத தீர்மானத்தினை எவ்வடிவிலும் நான் வெளிப்படுத்துவதில்லை.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது ஏனைய தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றதாகின்ற போது மேலே இனங்காணப்பட்ட வேறு தகவல்களை வாசிப்பதாகும். என்பதுடன் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதியியல் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் பெற்றுக்கொண்ட எனது அறிவுடன் முக்கியமாக முரண்படுகின்றதா அல்லது முக்கிய பிறழ் கூற்றாக உள்ளதாக அல்லது வேறு வகையில் தவறாக குறிப்பிடப்பட்டதாக தென்படுகின்றதா என்பதை பரிசீலிப்பதாகும்.

கம்பனியின் 2024 ஆண்டறிக்கையினை நான் வாசிக்கின்ற போது அதில் முக்கிய பிறழ் கூற்றுகள் காணப்படுகின்றன என நான் தீர்மானிப்பதாயின், சரிப்படுத்தலுக்கான ஆளுகையுடன் பொறுப்பானவர்களுக்கு அவ்விடயத்தினை அறிவிப்பதற்கு வேண்டப்படுகின்றேன். மேலும், முக்கிய சரிப்படுத்தப்படாத தவறுக் கூற்றுகள் காணப்படுமாயின், காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளை அனுசரித்து பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்படும்.

**1.4 முகாமைத்துவத்தினதும் நிதி கூற்றுக்களின் நிர்வாகத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டோரினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ்ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) இன் பிரகாரம் கம்பனியானது, கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான முறையான ஏடுகளையும் பதிவுகளையும் பராமரித்தல் வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இணங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனியிடமுள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இணங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பலியுள்ள அபிப்பிராயப் பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களுக்காக தாக்கங்கள் தவிர, கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவு மற்றும் 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2. கம்பனியின் நிதிக் கூற்றுகள் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றன.

2.1.3 சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த வருடத்துடன் ஒத்ததாகக் காணப்படுகின்றது.

2.1.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய, எனது அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட 1.2(அ)(i), 1.2(அ)(ii), 1.2(ஆ), 1.2(இ)(i), மற்றும் 1.2(இ)(ii), ஆம் பந்திகளின் விடயங்கள் தவிர்த்து, சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுகள் கடந்த ஆண்டுகளின் என்னால் செய்யப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 பின்வருபவை தவிர 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய ஏதேனும் ஏற்புடைய சட்டம், கம்பனியின் ஆளுகைக் குழுவின் மூலம் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுடன் கம்பின் இணங்கியொழுகவில்லை என்பதைக் குறிப்பிடுதல்.

2.2.2 பின்வருவனவற்றைத் தவிர்த்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியானது ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்து மூல சட்டங்கள், கம்பனியின் ஆளுகைக் குழுவினால் வழங்கப்பட்ட பொது மற்றும் விசேட வழகாடல்களுடன் இணங்கியொழுகவில்லை என குறிப்பிடுதல்.

(அ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகை மீதான வழிகாட்டல்களின் 2.3 ஆம் பிரிவு. இறுதிப்படுத்தப்பட்ட உபாய திட்டம் கம்பனி மூலம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் (தாய்கம்பனி) பொதுத் திறைசேரிக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 பின்வருவனவை தவிர 2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு அமைவாக கம்பனி செயலாற்றவில்லை என குறிப்பிடுதல்.

2.2.4 கம்பனியின் மூலவளங்கள் பின்வருவன தவிர 2018 ஆம் ஆண்டின் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக ஏற்புடைய நேரக் கட்டமைப்பினுள் மற்றும் சட்டங்களுக்கு இசைவாக சிக்கனமாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் செயல்திறன் வாயந்ததாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதை குறிப்பிடுதல்.

(அ.) கொலன்னாவ முனையத்தில் ஆறு எரிபொருள் தாங்கிகளை நிர்மாணித்து தொழிற்படுத்தவதற்கான ஒப்பந்தம் (15 க.மீ 3 தாங்கிகள், 7000 க.மீ 2 தாங்கிகள், 5000 க.மி 1 தாங்கிகள்) 2019 செப்டெம்பர் 18ம் திகதியிடப்பட்ட 19/2129/119/078/TBR ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் ஐ.அ.டொ. 12,680,000 தொகைக்காக JPMA-CTPL அசோசியேனிற்கு வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றம் காரணமாக ஆறு தாங்கிகளினதும் நிருமாணத்திற்கான கருத்திட்டத்தின் நிறைவு தொடர்பில் 2025 மார்ச் 10 அன்று கம்பனியும் ஒப்பந்தாரரும் நடுத்தீர்ப்பு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டனர். நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் நியதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி 2025 ஏப்ரல் 02 ஆம் திகதியிடப்பட்ட 25/0466/825/028 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இவ் ஒப்பந்த உடன்படிக்கையினை கைச்சாத்திடலின் மீது ஒப்பந்ததாரர் நிர்மாணத்திலிருந்து விலகியிருந்தார். 2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கம்பனியின் கணக்குகளுக்கமைய அவருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூ. 435,389,607.51 முற்பண கொடுப்பனவு முன்னெடுக்கப்படும் பணியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்நேரம் அளவில் தாங்கிப்பணியின் அத்திவாரம் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியின்படி புதிய ஒப்பந்ததாரர் தாங்கிகளை நிறைவு செய்வதற்கு தேவையான எஞ்சியிருக்கும் பாகங்களுக்கு இன்னும் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனி, யூரோ 44,911 செலவில் நுணிகாப்புடன் கூடிய இரு கப்பல் கட்டும் கயிறுகளை இறக்குமதி செய்து, 2022 மற்றும் 2023 இறுதியில் கம்பனிக்கு அவை கையளிக்கப்பட்டன. மேலும் ரூ. 13 மில்லியன் பெறுமதியான கப்பல் கட்டும் கயிறு கம்பனியின் எரிபொருள் வசதிகள் பிரிவின் வெளிக் களஞ்சியசாலையில் பாதுகாப்பற்ற களஞ்சியப்படுத்தல் காரணமாக பயன்பாட்டை தாண்டி சேதமடைந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. ஆகையினால் கப்பல் கட்டும் கயிறு களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய நிலைமைகளை உறுதிப்படுத்துவதை கம்பனி கருத்திற் கொண்டிருக்கவில்லை என்பதுடன் களஞ்சியப்படுத்தலின் போது சேதமடைதலை தடுப்பதற்கு போதுமான வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் வெளியான இடங்களில் உயர் பெறுமதி மிக்க பதிவேட்டு பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கும் கரைகடந்த தொழிற்பாடுகள் தொடர்பிலான சொத்துக்களுக்கும் அது பயன்படுத்தப்பட்ட போதிலும் இப்பிரிவினை உள்ளடக்கி இணையவழி பதிவேட்டு பொருள் கண்காணித்தல் முறைமையொன்றை கம்பனி பொருத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. ஒன்றில் ரூ. 13 மில்லியன் தொகையுடைய சேதத்தை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு 2025 மே 20 வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 ஏனைய விடயங்கள்**

அ. இலங்கை அரசாங்கம் எல்ஐஓசி என்பவற்றுக்கு இடையிலான 2007 ஜனவரி 5 ஆம் திகதி இடப்பட்ட தீர்பனவு உடன்படிக்கையின் 3 ஆம் பிரிவுக்கு அமைய சீனக்குடா நிரப்பு நிலையத்தில் இருந்து எல்ஐஓசி மூலம் பெற்றோலிய உற்பத்திகளை விநியோகிப்பது நாட்டின் பெற்றோலிய உற்பத்திகள் செயன்முறைப்படுத்தலில் ஐந்து சதவீத உயர்ந்தபட்சத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிக்க வேண்டும் என்பதுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய விநியோகம் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு சாலையில் இருந்தான விநியோகங்கள் தவிர 5 சதவீத உயர்ந்தபட்சத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், விநியோக செயன்முறையினை கண்காணிப்பதற்கு கம்பனியினால் முறையான முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் கம்பனியின் செயன்முறைப்படுத்தல் கட்டடங்களில் இருந்து வருமானம் இலக்கும் அபாயம் காணப்பட்டது.

ஆ. உள்ளக விசாரணை அறிக்கையின் பிரகாரம் விநியோகச் செயன்முறையில் மோசடியொன்று இனங்காணப்பட்டது. அதற்கமைய, விற்பனை மற்றும் விநியோகச் செயன்முறையில் தடயவியல் கணக்காய்வொன்றினை நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது. இந்நோக்கத்திற்காக கம்பனி வரிகள் உள்ளடங்களாக ரூபா 8,600,000 கொண்ட ஆலோசனை கட்டணத்திற்கு கணக்கீட்டு நிறுவனமொன்றை தெரிவு செய்தது. ஆலோசனை உடன்படிக்கைக்கமைவாக பணி 2023 ஆகஸ்ட் 31 அளவில் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும் ஆலோசனை நிறுவனத்தினால் வரைவு இடைக்கால அறிக்கை 2024 மே 06 அன்று சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் 2025 மே 05 கணக்காய்வு திகதியிலும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பணியின் இணங்கிய மைல்கல்களுக்கு முரணாக இப்பணிக்காக உடன்பட்ட ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகையிலிருந்து சபையின் அனுமதி அடிப்படையில் 2024 யூலை 29 அன்று ரூபா 5,836,691 கொண்ட முற்பணத்தொகை கம்பனி செலுத்தியது. இறுதி அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. மேலும் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் செல்லுபடியான தன்மையை மதிப்பீடு செய்வதன் மூலம் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைபடுத்துவதற்கு தேவையான பரிசீலனை நடவடிக்கைகளை கம்பனி எடுத்திருக்கவில்லை.

இ. கம்பனியின் அகவிதியின் 83 ஆம் உறுப்புரைக்கமைவாக முகாமைத்துவ பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படலாம். ஆகையினால் அகவிதியின் 83 ஆம் பந்தி சபை உறுப்பினராக முகாமைத்துவ பணிப்பாளரின் நியமனம் தொடர்பில் சாத்தியமான ஆளுகை பிரச்சினையை சுட்டிக்காட்டுகின்றது. குறிப்பாக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்காக சபை முகாமைத்துவ பணிப்பாளரின் அல்லது இணைந்த பணிப்பாரொருவரின் பதவிக்கு ஆளொருவரை நியமிக்கலாம். அத்துடன் இந்நியமனம் ஏதேனும் உடன்படிக்கையின் நியதிக்களுக்கு உட்பட்டிருக்குமென குறிப்பிடுகின்றது. முகாமைத்துவ பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் சபை உறுப்பினர் என்று இரண்டுமாக இருக்கின்ற இரட்டை வகிபாகம் தொடர்பில் அக்கறையொன்று காணப்படுகின்றது. இந்நிலைமை தனது சொந்த செயலாற்றம், ஊதியம் அல்லது வேறு அவர்களின் ஒப்பந்த நியதிகளில் நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற சபை தீர்மானங்களில் முகாமைத்து பணிப்பாளர் செல்வாக்கு செலுத்தலாம் என்பதனால் இந்நிலைமை அக்கறை முரண்பாடொன்றிற்கு வழிவகுக்கலாம். இதற்கு மேலதிகமாக சபைக்கு முகாமைத்துவ பணிப்பாளரை நியமிக்கும் நடைமுறை சபையின் சுயாதீனத்தினை வலுவிழக்கச் செய்து பாரபட்சமின்றி முகாமைத்துவ பணிப்பாளரின் செயலாற்றத்தை மேற்பார்வை செய்வதற்கும் செயல்திறன்வாய்ந்த விதத்தில் மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பிடுவதற்கும் சபைக்கு சவால் விடுக்கின்றது.

ஒப்பம்.
**ஜி.எச்.டி. தர்மபால**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)**

# நிதியியல் நிலைக் கூற்று

## 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| சொத்துக்கள் | குறிப்பு | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|---|
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் | 10 | 40,477,687,179 | 15,904,378,816 |
| அருவச் சொத்துக்கள் | 11 | 103,765,746 | 9,323,758 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 14.1 | 1,479,620,703 | 1,333,567,815 |
| | | 42,061,073,628 | 17,247,270,389 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட் பதிவேடு | 12 | 870,657,190 | 886,038,842 |
| வர்த்தக மற்றும் ஏனைய வரவுகள் | 13 | 11,145,281,753 | 10,087,520,325 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 14.2 | 1,730,157,178 | 1,612,783,310 |
| கிடைக்கப்பெறத்தக்க வருமான வரி | | - | 280,560,047 |
| ஒதுக்கு நிதியத்தில் முதலீடு | | 1,148,174,651 | 1,000,000,000 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 15 | 4,329,323,552 | 1,113,340,473 |
| | | 19,223,594,324 | 14,980,242,996 |
| **மொத்த சொத்துக்கள்** | | 61,284,667,952 | 32,227,513,385 |
| | | | |
| **பங்குரிமையும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கு** | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம் | 16 | 7,500,000,000 | 7,500,000,000 |
| மூலதன ஒதுக்கு | 16.1 | 979,000,000 | 979,000,000 |
| மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கு | | 16,868,080,909 | - |
| சுய காப்புறுதி ஒதுக்கு | | 2,651,405,099 | 2,500,000,000 |
| பிடித்து வைக்கப்பட்ட வருமானம் | | 18,850,120,827 | 15,501,672,905 |
| **மொத்த பங்குரிமை** | | 46,848,606,835 | 26,480,672,905 |
| | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடு | 17 | 1,906,978,095 | 1,918,901,303 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 8.1 | 9,055,640,712 | 1,566,066,771 |
| | | 10,962,618,807 | 3,484,968,074 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வர்த்தகம் மற்றும் எனைய செலுத்த வேண்டியவை | 18 | 2,492,698,618 | 2,261,872,406 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 980,743,691 | - |
| **மொத்த பொறுப்புகள்** | | 3,473,442,309 | 2,261,872,406 |
| **மொத்த பங்குபுரிமையும் பொறுப்புகளும்** | | 61,284,667,952 | 32,227,513,385 |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இந்நிதியியல் கூற்றுகள் இணங்குகின்றன என சான்றுப்படுத்துகின்றேன்.

**ஒ.பி கக்கொட ஆராய்ச்சி**
பிரதானி - நிதி

இந்நிதியில் கூற்றுகளை தயாரித்து எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்புடமையாகும். பணிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பிலும் ஒப்பமிட்டது

**கலாநிதி மயூர நெத்திகுமாரகே**
முகாமைத்துவப் பணிப்பாளர்

**டி ஜே ஏ எஸ் ராஜகருண**
தலைவர்

90 தொடக்கம் 114 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பாகத்தை தோற்றுவிக்கின்றன."
2024 பெப்ரவரி 24
கொழும்பு

# அனைத்தையும் உள்ளக்கிய வருமானக் கூற்று

## 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 18,898,875,688 | 10,150,031,584 |
| நேரடிச் செலவுகள் | | (9,562,225,548) | (6,846,378,434) |
| **மொத்த இலாபம்** | | 9,336,650,140 | 3,303,653,150 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 4 | 1,015,248,890 | 1,180,257,199 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவு | 4.1 | - | (7,734,143) |
| நிருவாகச் செலவுகள் | | (5,687,556,959) | (5,097,503,828) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | 4,664,342,071 | (621,327,622) |
| நிதி வருமானம் | 5 | 333,715,184 | 306,834,505 |
| **வரிக்கு முந்தைய இலாபம்** | 6 | 4,998,057,255 | (314,493,117) |
| வருமான வரிச் செலவுகள் | 7.1 | (1,616,828,409) | 351,104,528 |
| **ஆண்டுக்கான இலாபம்** | | 3,381,228,846 | 36,611,411 |
| **தொடர்ந்து வருகின்ற காலப்பகுதயியல் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தக் கூடாத அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகள் மீதான கணிப்பீட்டு இலாபம்/ நட்டம் | 17 | 169,463,108 | (579,415,871) |
| காணி, கட்டங்களில் இருந்து மீள் விலை மதிப்பீட்டு இலாபம் | | 24,097,258,442 | |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் மீதான வரி | 8.1 | (7,280,016,464) | 173,824,761 |
| ஆண்டுக்கான வரியினைக் கழித்து மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | 16,986,705,086 | (405,591,110) |
| **ஆண்டுக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் வரி கழித்து** | | 20,367,933,932 | (368,979,699) |
| **பங்கொன்றிற்கான உழைப்பு** | 9.2 | 4.51 | 0.05 |

90 தொடக்கம் 114 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பாகத்தை தோற்றுவிக்கின்றன.”

# பங்குரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று

## 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | குறிக்கப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கு | மீள்விலை மதிப்பீட்டு ஒதுக்கு | சுய காப்புறுதி ஒதுக்கு | பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **2023 சனவரி 01 அன்றுள்ளவாறு மீதி** | 7,500,000,000 | 979,000,000 | | | 18,749,877,607 | 27,228,877,607 |
| ஆண்டுக்கான இலாபம் | | | | | 36,611,411 | 36,611,411 |
| மிகைக் கட்டண வரிக்கான சீராக்கம் | | | | | (19,225,003) | (19,225,003) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | (405,591,110) | (405,591,110) |
| மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | | | (388,204,702) | (388,204,702) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | | | (360,000,000) | (360,000,000) |
| சுய காப்புறுதி ஒதுக்கிற்கான மாற்றல்கள் | | | | 2,500,000,000 | (2,500,000,000) | - |
| **2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 7,500,000,000 | 979,000,000 | - | 2,500,000,000 | 15,501,672,905 | 26,480,672,905 |
| ஆண்டுக்கான இலாபம் | | | | | 3,381,228,846 | 3,381,228,846 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம், வரி கழித்து | | | 16,868,080,909 | | 118,624,176 | 16,986,705,085 |
| மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 16,868,080,909 | - | 3,499,853,022 | 20,367,933,931 |
| காப்புறுதி ஒதுக்கு நிதியத்திலிருந்து வட்டி வருமானம் | | | | 105,572,470 | (105,572,470) | - |
| சுய காப்புறுதி ஒதுக்கிற்கான மாற்றல்கள் | | | | 45,832,629 | (45,832,629) | - |
| **2024 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 16,868,080,909 | 2,651,405,099 | 18,850,120,827 | 46,848,606,835 |

# காசுப்பாய்ச்சல் கூற்று

## 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2023 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|---|
| வருமான வரிக்கு முன்னர் இலாபம் | | 4,998,057,255 | (314,493,117) |
| **சீராக்கங்கள்** | | | |
| நிதி வருமானம் | 5 | (333,715,184) | (306,834,505) |
| அலுவலர் கடன் சேதஇழப்பிற்கான ஒதுக்கீடு | | 24,846,278 | (4,917,710) |
| பதிவேட்டுப் பொருள் சேதஇழப்பிற்கான ஒதுக்கீடு | | 2,805,711 | 1,593,413 |
| ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைக்கான ஒதுக்கீடு | | 508,288,309 | 1,122,128 |
| ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணம் விற்பனை மீதான நட்டம் / இலாபம் | 4 | (26,974,090) | - |
| வரையறைசெய்யப்பட் நலத் திட்டங்களுக்கான ஏற்பாடு | | 338,268,907 | 300,507,148 |
| பெறுமானத் தேய்வு | 10.2 | 715,132,673 | 830,785,668 |
| சொத்துகளின் மீள்விலைமதிப்பீடு மீதான இழப்பு | 11.2 | 83,862,857 | |
| அசையா சொத்தின் பெறுமதிக் குறைப்பு | | 3,920,990 | 27,575,201 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படு இலாபம்/ (நட்டம்)** | | 6,314,493,706 | 535,338,225 |
| பதிவேட்டுப் பொருட்களில் அதிகரிப்பு/ (குறைவு) | | 12,575,941 | (25,108,794) |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் அதிகரிப்பு / (குறைவு) | | (1,566,049,737) | 508,799,347 |
| ஏனைய நிதியியல் சொத்துகளில் அதிகரிப்பு / (குறைவு) | | (288,273,034) | 175,136,576 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு/(குறைவு) | | 253,963,552 | (612,572,035) |
| **தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட /(பயன்படுத்தப்பட்ட) காசு** | | 4,726,710,428 | 581,593,319 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (145,967,194) | |
| செலுத்தப்பட்ட மிகைக்கட்டண வரி | | - | (19,225,003) |
| செலுத்தப்பட்ட வரையறை செய்யப்பட்ட நலன் | 17 | (180,729,006) | (244,894,568) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையில் இருந்து ஈட்டப்பட்ட/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | 4,400,014,228 | 317,473,748 |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல் | 10.1 | (1,298,182,793) | (157,077,004) |
| அருவச் சொத்துகள் கையகப்படுத்தல் | 11.1 | (98,362,978) | |
| ஆதனம், பொறித்தொகதி மற்றும் உபகரணங்கள் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் | | 26,974,090 | - |
| காப்புறுதி ஒதுக்கு நிதியத்தில் முதலீடு | | (148,174,651) | (1,000,000,000) |
| நிதி வருமானம் | 5 | 333,715,184 | 306,834,505 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | (1,184,031,148) | (850,242,499) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | - | (360,000,000) |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்தப்படும்) நிகர தேறிய காசுப்பாய்ச்சல்)** | | - | (360,000,000) |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | 3,215,983,080 | (892,768,751) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | 15 | 1,113,340,473 | 2,006,109,224 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | 15 | 4,329,323,553 | 1,113,340,473 |

90 தொடக்கம் 114 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பாகத்தை தோற்றுவிக்கின்றன.”

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

### 1. நிறுவனம் பற்றிய தகவல்கள்

#### 1.1 பொது

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் (கம்பனி) நிறுவனமானது 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஒக்டோபர் 8 ஆம் திகதியன்று கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றாவதுடன் இலங்கையில் வாழிடத்தைக் கொண்டுள்ளது. கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட், எரிபொருள் விநியோக நிலையம், கொலன்னாவ என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

#### 1.2 முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

ஆண்டின் போது கம்பனியின் முதன்மைச் செயற் பாடுகளானவை பெற்றோலியப் பொருட்களைக் களஞ்சியப் படுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியனவாகயிருந்தன்

#### 1.3 தாய்க்கம்பனியும் இறுதியாக கட்டுப்படுத்துகின்ற தரப்பும்

பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின் படி கம்பனியின் பொறுப்பேற்கின்ற தாய்க் கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமாகும்.

#### 1.4 வெளியிடுவதற்கான அங்கீகாரத் திகதி

2024 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டின் நிதியியல் கூற்றுகள், 2024 பெப்பரவரி 24 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றுக்கு அமைவாக வெளியிடுவதற்காக அங்கீகாரமளிக்கப்பட்டது.

### 2. தயாரித்தல் அடிப்படை

#### 2.1 இணங்குவித்தல் கூற்று

'நிதியியல் நிலைக்கூற்று, அனைத்துமடங்கிய வருமானக் கூற்று, பங்குரிமை மாற்றக்கூற்று காசுப்பாய்ச்சல்கள் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற கம்பனியின் நிதியியற் கூற்றுகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் எடுத்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) இற்கமைவாகவும் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

##### 2.1.1 அளவீட்டுஅடிப்படை

கம்பனியின் நிதியற் கூற்றுக்களானவை நிதியியல் நிலைக் கூற்றில் உள்ள பின்வரும் விடயங்களுக் கானவை தவிர வரலாற்றுக் கிரய அடிப்படை மீது தயாரிக்கப்பட்டுள்ளன:

- வரையறுக்கப்பட்ட நலக்கடப்பாடுகளுக்கான பொறுப்பானது காப்பீட்டு கணிப்பீட்டு அடிப்படையில் விலைமதிப்பீடு செய்யப்பட்டு தற்போதைய பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளது.

##### 2.1.2 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றுடன் தொடருவதற்கான கம்பனியின் இயலுமை பற்றிய மதிப்பீடொன்றினைப் பணிப்பாளர்கள் மேற் கொண்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்திற்காக தொழிலினைத் தொடருவதற்கு கம்பனி மூலவளங்களைக் கொண்டுள்ளது என திருப்தியடைகின்றனர். கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமை மீது ஏதேனும் குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் முக்கிய நிச்சயமின்மைகள் பற்றி சபை அறிந்திருக்கவில்லை. அத்துடன் கம்பனித் தொழிற்பாடுகளை தீர்த்துக்கட்டுவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ அவர்கள் உத்தேசிக்கவில்லை. எனவே, நிதியியல் கூற்றுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.2 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயம்

நிதியியல் கூற்றுகள், இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும்.

#### 2.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியினால் ஒரேமாதிரியாக பிரயோகிக்கபட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுக்கு இசைவானதாகும். முன்னைய ஆண்டின் தொகைகளும் சொற்றொடர்களும் நடைமுறை எடுத்துரைப்புக்கு இணங்குவதற்கு அவசியப்படுகின்ற போது மீள்ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

#### 2.4 முக்கிய கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக கம்பனியின் நிதியியல் கூற்றுகளின் எடுத்துரைப்பானது கணக்கீட்டுக் கொள்கை பிரயோகத்தினையும் சொத்துகளின், பொறுப்புகளின், வருமானத்தின் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கின்ற தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை ஆக்குவதற்கு முகாமைத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்றது. இவ்வூகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமின்மைகள் எதிர்காலங்களில் சொத்துகளினது அல்லது பொறுப்புகளினது கொண்டு செல்லும் தொகைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற முக்கிய சீராக்கமொன்றினைத் வேண்டுகின்ற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

மதிப்பீடுகளும் ஊகங்களும் முன்னெடுக்கப்படும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீட்டுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்படுகின்ற காலத்திலும் அத்துடன் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்காலத்திலும் இனங்காணப்படுகின்றன.

கம்பனியின் நிதியியல் கூற்றுகளில் தொகைகள் மீது மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளைப் பிரயோகிப்பதில் மதிப்பீடுகள், நிச்சயமின்மை மற்றும் முக்கிய தீர்புகள் பற்றிய மிக முக்கிய விடயப்பரப்புக்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

அ) ஊழியர் நலப்பொறுப்பு

வரையறை செய்யப்பட்ட நலத்திட்டங்கள் - பணிக்கொடையின் செலவும் அதேபோன்று தற்காலப்பெறுமதியும் காப்பு கணிப்பீட்டு விலை மதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. காப்பு கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடானது கழிவுவீதங்கள், எதிர்காலச் சம்பள அதிகரிப்புகள் மற்றும் ஏனைய முக்கிய தொடர்புடைய தரவுகள் பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்துகின்றது. ஊழியர் நலங்களின் நீண்டகாலதன்மையின் விளைவாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயிமின்மைக்கு உட்படுத்தப்படுகின்றன. மேற்குறித்த முக்கிய ஊகங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினால் கொண்டு நடாத்தப்பட்டவாறான அவற்றின் உணர்வுத்தன்மை பகுப்பாய்வுடன் சேர்த்து ஊகங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் உணர்வு பகுப்பாய்வுகளின் பெறுபேறுகள் என்பன 17.2 ஆம் மற்றும் 17.4ஆம் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

ஆ) வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை சேதஇழப்பு

வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை பெறுமதி சேதம் இழந்துள்ளன என்ற பொருண்மையான சான்றுவுள்ளதா என்பது பற்றி நிதியில்நிலைக்கூற்றுத் திகதியில் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. தற்போதுள்ள கிடைக்கப்பெறத்தக்கவைகளின் நடைமுறை நிலைமை மற்றும் வரலாற்று ரீதியான சேகரிப்பு அனுபவம் என்பவற்றின் மீளாய்வொன்றின் அடிப்படையில் மதிப்பிழப்பு நட்டங்கள் கணிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் உள்ளபடியான சேதஇழப்புகளை பிரதிபலிக்கும்படியாக அத்தகைய ஏற்பாடுகள் காலமுறையாக சீர்செய்யப்படுகின்றன. 13 மற்றும் 19 ஆம் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை மீது 2024 காலப்பகுதியில் கம்பனி ஏதேனும் சேதஇழப்பை இனங்காணவில்லை.

இ) வருமான வரியும் பிற்போடப்பட்ட வரியும்

கம்பனி வருமான வரிக்குட்பட்டதாகும். வருமான வரிக்கான ஏற்பாடுகளைத் நிர்ணயிப்பதில் முக்கிய தீர்பு தேவைப்படுகின்றது. இறுதி வரி நிர்ணயம் நிச்சயமற்றதாகவுள்ள பல கொடுக்கல்வாங்கல்களும் கணிப்புக்களும் காணப்படுகின்றன. மேலதிக வரிகள் செலுத்தப்பட வேண்டலாம் என்ற மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட வரி தொடர்பிலான பொறுப்புக்களை நிறுவனம் இணங்காண்கின்றது. இவ்விடயங்களின் இறுதி வரி வெளிப்பாடானது ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த தொகை யிலிருந்து வேறுபடுகின்றவிடத்து அத்தகைய வேறுபாடுகளானவை அத்தகைய நிர்ணயம் மேற்கொள்ளப்பட்ட காலத்தின் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள் போன்றவற்றில் தாக்கம் செலுத்தும். மேலதிகத் தகவல்கள் 07ஆம் மற்றும் 08ஆம் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.5 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாரம்சம்

### 2.5.1 வெளிநாட்டு நாணய மாற்றங்கள்

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும். வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல்வாங்கல்கள், கொடுக்கல்வாங்கல் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய வீதத்தில் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் மாற்றம் செய்யப்பட்ட நாணயச் சொத்துகளும் பொறுப்புக்களும் அறிக்கையிடும் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய மாற்றுவீதத்தில் மீள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து வேறுபாடுகளும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றில் எடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்று கிரய நியதிகளில் அளவிடப்படுகின்ற நாணயமல்லாத விடயங்கள், ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயமல்லா விடயங்கள், சீர்மதிப்புப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்த நாணய மாற்று வீதங்களைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 2.5.2 வருமானத்தினை இனங்காணுதல்

பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உட்பாயும் மற்றும் வருமானம் நம்பகமாக அளவிடப்படக்கூடியதாகவிருக்கும் என்ற நிகழ்வுள்ள என்ற ரீதியில் வருமானம் இனங்காணப்படுகின்றது. வருமானமானது கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கபெறத்தக்க பிரதிபலன்களின் வர்த்தக கழிவுகள், மீளளித்தல்கள், தள்ளுபடிகள் மற்றும் விற்பனை வரிகள் (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி) ஆகியவற்றை கழித்து சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

வாடிக்கையாளரொருவருக்கு அத்தகைய சேவையைப் மாற்றல்செய்வதற்கான பரிமாற்றத்தில் உரித்துடையதாக விருப்பதற்கு கம்பனி எதிர்பார்க்கின்ற விலையீட்டுத் தொகையில் வாக்குறிதியளிக்கப்பட்ட சேவையினை மாற்றல்செய்வதன் மூலம் செயலாற்றக் கடப்பாடொன்றை அது திருப்பதிப்படுத்துகின்றபோது கம்பனி வருமானத்தை இனங்காண்கின்றது.

எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவத்திற்கு கிடைக்கும் அத்துடன் கீழே விவரிக்கப்பட்டவாறு

கம்பனியின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் குறித்துரைத்த மூலப்பிரமாணம் நிறைவுசெய்யப்படுகின்ற நிகழ்வுள்ளது என்ற அடிப்படையில், வருமானம் நம்பகமாக அளவிடப்படக்கூடியதாகவுள்ளபோது கம்பனி வருமானத்தினை இனங்காணுகின்றது. விற்பனையுடன் தொடர்புடைய அனைத்து எதிர்பாராச் செலவுகளும் தீர்க்கப்படும் வரை வருமானம் நம்பத்தகுந்தவாறு அளவிடத்தக்கதாக கருதப்படுவதில்லை.

**அ) சேவைகளை வழங்குதல்**

சேவைகளை வழங்குவதில் இருந்தான வருமானமானது சேவைகள் வழங்கப்படுகின்ற அல்லது செயலாற்றப்படுகின்ற கணக்கீட்டுக் காலத்தில் இனங்காணப்படுகின்றது.

**முனையக் கட்டணம்**

2003 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லங்கா ஐஓசி மற்றும் திறைசேரித் திணைக்களம் என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டு அதனைத்தொடர்ந்து 2011, 2019 மற்றும் 2023 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பொது பயன்பாட்டாளர் உடன்படிக்கைக்கு அமைவாக சந்தைப்படுத்தும் கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படுகின்ற தொழிற்படுத்தல் செலவுகளை இது உள்ளடக்குகின்றது. இது, அவர்களுக்கு உரித்தான பெற்றோலிய உற்பத்திகளை விநியோகத்தர்களுக்கு அல்லது நுகர்வோருக்கு மாற்றப்படும் போது இனங்காணப்படுகின்றது. முனையக் கட்டணமானது விநியோகத்தர்களுக்கு அல்லது நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக அளவிடப்படுகின்றது. சந்தைப்படுத்தல் கம்பனிகளுக்காக உருவாக்கப்படும் விலைப் பட்டியல்களின் அடிப்படையில் மாதாந்த அடிப்படையில் கம்பனி புரள்வினைப் பதிவுசெய்கின்றது.

**தொழிற்படுத்தல் இலாபம்**

தொழிற்படுத்தல் இலாபமானது விலைகுறித்தல் சூத்திரத்தில் முன்கூட்டி நிர்ணயிக்கப்படுகின்ற வீதத்தினை அடிப்படையாக கொண்டு இனங்காணப்படுகின்றது. விந்யோகத்தர்களுக்கு அல்லது நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக தொழிற்படுத்தல் இலாபம் அளவிடப்படுகின்றது. சந்தைப்படுத்தல் கம்பனிகளுக்காக உருவாக்கப்படும் விலைப்பட்டியல்களின் அடிப்படையில் மாதாந்த அடிப்படையில் கம்பனி புரள்வினைப் பதிவுசெய்கின்றது.

**போக்குவரத்து வருமானம்**

புகையிரத கொள்கலன், குழாய்த் தொகுதி, பவுசர் வணிகர்கள் மீது ஏற்பட்ட போக்குவரத்து செலவின் அறவிடுகின்றது. வருமானமானது லீட்டர் அளவு மற்றும் பயணம் செய்த தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது. சந்தைப்படுத்தல் கம்பனிகளுக்கு வழங்கப்படுகின்ற விலைப்படடியல்களின் அடிப்படையில் மாதாந்த அடிப்படையில் கம்பனி புரள்வைப் பதிவு செய்கின்றது.

2022 நவம்பர் 24 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் 2022 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வரலாற்று இலங்கை பவுசர் அமைப்பு வீதங்களின் அறவீட்டுக்குப் பதிலாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் எல்ஐஓசி உடன் கைச்சாத்திடப்படவுள்ள புதிய உடன்படிக்கையின் 6 ஆம் இலக்க வாசகத்தின் பிரகாரம் லங்கா மொத்தச் சாலை எரிபொருள் விற்பனை மீது முனையங்களுக்கிடையிலான மொத்த எரிபொருள் பொக்குவரத்துக் கட்டணங்களை அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**ஆ) நிதி வருமானம்**

நிதி வருமானமானது விளைவு வட்டி முறையினை பயன்படுத்தி திரளுகின்ற வட்டியாக இனங்காணப்படுகின்றது

**இ) ஏனையவை**

ஏனைய வருமானமானது திரளுகின்ற அடிப்படையொன்றில் இனங்காணப்படுகின்றது.

முதலீடுகள் உள்ளடங்கலாக ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்கள் அத்துடன் ஏனைய நடைமுறையற்ற சொத்துகளின் விற்பனையில் இருந்து தோன்றுகின்ற தன்மையிலான வருமானம் ஒன்றின் தேறிய பெறுகைகள் அல்லது இழப்புகள், சொத்துகள் கொண்டுள்ள தொகை மற்றும் தொடர்புடைய விற்பனை செலவுகளை விற்று அகற்றுவதன் மீதான பெறுகைகளில் இருந்து கழித்து வருமானக் கூற்றில் கணக்கிடப்படுகின்றது.

பிரதானமாக வருமானம் ஈட்டுகின்ற செயற்பாடுகளுக்கு இடைநேர்விளைவான செயற்பாடுகளில் இருந்து தோன்றுகின்ற அத்துடன் முக்கியத்துவம் அற்ற அதனை ஒத்த கொடுக்கல் வாங்கல்களில் குழுவொன்றில் இருந்து தோன்றுகின்ற பெறுகைகள் அல்லது இழப்புகள் ஒன்றுசேர்க்கப்பட்டு தேறிய அடிப்படை ஒன்றில் அறிகையிடப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.5.3 செலவினத்தை இனங்காணல்

வியாபாரத்தினை தொழிற்படுத்துவதில் அத்துடன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை வினைத்திறன்மிக்க விதத்தில் பேணுவதில் ஏற்படுகின்ற அனைத்து செலவினமும் காலப்பகுதிக்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றன.

### 2.5.4 வரிவிதிப்பு

காலத்திற்கான வரிச்செலவானது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. வரியானது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படும் விடயங்களுடன் அது தொடர்புபடுகின்றது என்ற அடிப்படையிலானவை தவிர ஆண்டுக்கான இலாபத்தில் இனங்காணப்படுகின்றது. இவ்விடயத்தில் வரியானது முறையே ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படுகின்றது.

**நடைமுறை வரிகள்**

நடைமுறை மற்றும் முன்னைய காலங்களுக்கான நடைமுறை வருமான வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் வரிவிதிப்பு அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்பட அல்லது கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் அளவிடப்படுகின்றது. தொகையினை கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் வரி வீதங்களும் வரிச்சட்டங்களும் அறிக்கையிடும் திகதியன்று இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்டுள்ளவையாகும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதியியல் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு வருமான மற்றும் செலவின கூறுகளை அடிப்படையாக கொண்டதுடன் தொடர்புடைய வரிச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்படுகின்றது.

பங்குரிமையில் நேரடியாக இனக்காணப்படுகின்ற விடையங்களுடன் தொடர்புடைய நடப்பு வரியானது பங்குரிமை மூலதனத்தில் இனங்காணப்படுவதுடன் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்படுவதில்லை.

**பிற்போடப்பட்ட வரிவிதிப்பு**

நிதியியல் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் நோக்கங்களுக்காக அவை கொண்டுள்ள தொகை என்பவற்றிக்கிடையில் அறிக்கையிடும் திகதியில் தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறையினை பயன்படுத்தி பிற்போடப்பட்டு வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்புகளானவை வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல்வாங்கல் ஒன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனங்காணுதலில் இருந்து தோன்றுகின்ற, கொடுக்கல்வாங்கல் நேரத்தில், கணக்கீட்டு இலாபத்தினையோ அன்றில் வரி விதிக்கத்தக்க இலாபத்தினையோ அல்லது நட்டத்தினையோ பாதிக்காத பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்பு உள்ளவை தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்குமென இனக்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துக்கலானவை கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கு எதிராக வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைப்பெறும் என்ற நிகழ்வின் அடிப்படையில், அத்துடன் வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனக்காணுதலில் இருந்து தோன்றுகின்ற தற்காலிக வேறுபாட்டுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து காணப்படுகின்றவிடத்து அத்துடன் கொடுக்கல்வாங்கல் நேரத்தில், கணக்கீட்டு இலாபத்தினையோ அன்றி வரிவிதிக்கத்த இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத பயன்படுத்தப்படாத வரி சொத்துகளினதும், பயன்படுத்தப்படாத வரி இழப்புகளினதும் முன்கொண்டு செல்லும் தொகை பயன்படுத்த கூடியதாக உள்ளபோது அனைத்து கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கும் இனக்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து ஒன்றின் கொண்டுசெல்லும் தொகையானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பிற்போடப்பட்ட வருமானவரிச் சொத்தின் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியினை பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு போதிய வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்ற நிகழ்வு இனிமேலும் இல்லையென்ற அடிப்படையில் குறைக்கப்படுகிறது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது பொருன்மையாக சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களை (அத்துடன் வரிச் சட்டங்கள்) அடிப்படையாகக்கொண்டு சொத்து தேறுகின்றபோது அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்றபோது ஆண்டுக்காக பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன

**மிகைக்கட்டண வரி**

**நிதியியல் கூற்றுகள் தயாரித்தல் அடிப்படை**

மேலும், 2022இன் 14 ஆம் இலக்க மிகைக்கட்டண வரிச் சட்டத்திலிருந்த தோன்றுகின்ற வரிப்பொறுப்பானது மிகைக்கட்டண வரி மீதான 22.1 ஆம் இலக்க குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவாறு இலங்கை பட்டயக் கணக்களார் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட மாற்றுப் பரிகார கூற்றின் மூலம் பரிந்துரைக்கப்பட்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

**விற்பனைகள் வரி (பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடும்)**

வருவாய்கள், செலவுகள் மற்றும் சொத்துகள் என்பன வரிவிதிப்பு அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட முடியாததுள்ள சொத்துகள் அல்லது சேவை கொள்வனவொன்றின் மீது ஏற்பட்ட விற்பனைகள் வரிகள் தவிர விற்பனை வரித்தொகையினை கழித்து இனக்காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விற்பனை வரியானது ஏற்புடையவாறு சொத்துச் செலவின் பாகமொன்றாக அல்லது செலவு விடயங்களின் பாகமொன்றாக அத்துடன் விற்பனை வரிகள் உள்ளடக்கப்பட்டுள்ள தொகையுடன் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் கிடைக்கத்தக்க மற்றும் செலுத்தத்தக்கவையாக இனங்காணப்படுகின்றது. வரிவிதிப்பு அதிகாரிகள் தொடர்பில் அறவிடத்தக்க அல்லது செலுத்ததக்க விற்பனைகள் வரித்தொகையானது நிதியியல் நிலைமைக்கூற்றில் கிடைக்கத்தவைகளின் அல்லது செலுத்ததக்கவைகளின் பாகமொன்றாக உள்ளடக்கப்படுகின்றது.

### 2.5.5 நிதியியல் சாதனங்கள் – ஆரம்ப இனங்காணலும் தொடர்ந்துவருகின்ற அளவீடும்

#### 2.5.5.1 நிதியியல் சொத்துகள்

கம்பனியின் நித்ச்சொத்துக்கலானவை காசு, மற்றும் குறுகியகால வைப்புகள் வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கத்தவை அத்துடன் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்தான நிலுவைத்தொகை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

**ஆரம்ப இணங்காணலும் அளவீடும்**

நிதியியல் சொத்துக்களானவை கடன்கழிக்கப்பட்ட செலவு, ஏனைய அனைத்து உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி, மற்றும் இலாபம் அல்லது நட்டமூடாக சீர்மதிப்புப் பெறுமதி ஆகியவற்றில் தொடர்ந்து வருகின்றவாறு அளவிடப்பட்டு ஆரம்ப இனங்காணலில் வகைப்படுத்தப்படுகின்றன. நிதியியல் சொத்தொன்று (முக்கிய நிதியியல் கூறொன்று இல்லாத வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவையாக அது இருந்தால் தவிர) அல்லது நிதியியல் பொறுப்பு, இலாபம் அல்லது நட்டமூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அல்லாத பொருளொன்றுக்கான அதன் கையகப்படுத்தலுக்கு அல்லது வழங்கலுக்கு நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல்வாங்கல் செலவுகளுடன் சேர்த்து ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. குறிப்பிடத்தக்க நிதியியல் கூறு இன்றி வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை, ஆரம்பத்தில் கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன.

**தொடர்ந்துவருகின்ற அளவீடு**

தொடர்ந்துவருகின்ற அளவீடு நோக்கங்களுக்காக நிதியியல் சொத்துகளின் நான்கு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன்

- கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் (படுகடன் சாதனங்கள்)
- திரண்ட இலாபங்கள் மற்றும் நட்டங்களின் மீள்சுழற்சியுடன் கூடிய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள் (படுகடன் சாதனங்கள்)
- இணங்காணாமையின் மீது திரண்ட இலாபங்கள் மற்றும் நட்டங்களின் மீள்சுழற்சி இல்லாமல் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள் (பங்குரிமை மூலதனச் சாதனங்கள்)
- இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் நிதியியல் சொத்துகள்

எனினும், கம்பனியின் நிதியியல் சொத்துகள் கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதியியல் சொத்துகள் வகைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவையாகும்.

**கடன்களும் கிடைக்கத்தக்கவையும்**

கடன்களும் கிடைக்கத்தக்கவையும் செயற்பாடுமிக்க சந்தை ஒன்றில் விலைகுறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதி அல்லாத நிதியியல் சொத்துக்களாகும். அத்தகைய நிதியியல் சொத்துகள் ஆரம்ப அளவீட்டின் பின்னர் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி சேதஇழப்பினை கழித்து கடன்கழிக்கப்பட்ட செலவில் அதனைத் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. கடன்கழிப்பு செலவானது கையகப்படுத்தல் மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீத முறையின் மிக முக்கிய பாகமொன்றான கட்டணங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு கணிக்கப்படுகின்றது. விளைவு வட்டிவீத முறை பெறுமதிகுறைத்தலானது வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சேதஇழப்பில் இருந்து தோன்றுகின்ற நட்டங்கள் நிதிச்செலவுகளில் வருமானக் கூற்றில் இணங்காணப்படுகின்றன.

**கடன்கழிக்கப்பட்ட செலவில் நிதியியல் சொத்துகள் (படுகடன் சாதனங்கள்)**

பின்வரும் இரு நிபந்தனைகளும் நிறைவுசெய்யப்படுமாயின், நிதியியல் சொத்துகளை கம்பனி கடன்கழிக்கப்பட்ட செலவில் அளவிடுகின்றது:

- நிதியியல் சொத்தானது ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை சேகரிக்கும் பொருட்டு நிதியியல் சொத்துகளை வைத்திருப்பதற்கான குறிக்கோளுடனான தொழில் மாதிரியினுள் வைக்கப்பட்டிருத்தல்.

அத்துடன்

- நிதியியல் சொத்துகளின் ஒப்பந்த நியதிகளானவை செலுத்தவேண்டிய முதன்மை மற்றும் முதன்மைத் தொகை மீது வட்டி என்பவற்றின் ஏக கொடுப்பனவுகளாகக் காணப்படுகின்ற காசுப்பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதியன்று இடம்பெறுதல்.

கடன்கழிக்கப்பட்ட செலவில் உள்ள நிதியியல் சொத்துகள் அதனைத் தொடர்ந்து விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் சேதஇழப்பிற்கு உட்படுகின்றன. சொத்தானது இனங்காணப்படாத, திருத்தியமைக்கப்படுகின்ற அல்லது சேதமிழக்கின்ற போது இலாபங்களும் நட்டங்களும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

கடன்கழிக்கப்பட்ட செலவில் உள்ள கம்பனியின் நிதியியல் சொத்துகளானவை கடன்கள் மற்றும் கிடைக்கப்பெறத்தக்கவை, காசு மற்றும் குறுகியகால வைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**நிதியியல் சொத்துக்களை மீள வகைப்படுத்தல்**

நிதியியல் சொத்துக்களை முகாமைசெய்வதற்கான அதன் தொழில் மாதிரியினை கம்பனி மாற்றுகின்ற போதும் அத்துடன் அப்போது மாத்திரம் அதன் நிதியியல் சொத்துக்களை கம்பனி மீள வகைப்படுத்துகின்றது. கடன் கழிக்கப்பட்ட செலவில், ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர் மதிப்பு பெறுமதியில் அல்லது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர் மதிப்பு பெறுமதியில் நிதியியல் சொத்துக்களை கம்பனி மீள வகைப்படுத்துமாயின், கம்பனி மீள் வகைப்படுத்தல் திகதியில் இருந்து எதிர்கால மீள் வகைப்படுத்தலை பிரயோகிக்கின்றது. கம்பனி ஏதேனும் முன்னர் இனங்காணப்பட்ட இலாபங்களை, நட்டங்களை (சேதஇழப்பு, இலாபங்கள் அல்லது நட்டங்கள் உள்ளடங்கலாக) அல்லது வட்டியை மீள நிறுவுவதில்லை.

கடன் கழிக்கப்பட்ட செலவு அளவீட்டு வகையிலிருந்து இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு

பெறுமதிக்கான வகையினுள் நிதியியல் சொத்தொன்றினை கம்பனி மீள் வகைப்படுத்துமாயின், அதன் சீர்மதிப்பு பெறுமதி மீள் வகைப்படுத்தல் திகதியில் அளவிடப்படுகின்றது. நிதியியல் சொத்தின் முன்னைய கடன் கழிப்பு செலவிற்கும் சீர்மதிப்பு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

கடன் கழிக்கப்பட்ட செலவு அளவீட்டு வகையிலிருந்து ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய அளவீட்டு வகை ஊடாக சீர்மதிப்புபெறுமதிக்கான வகையினுள் நிதியியல் சொத்தொன்றினை கம்பனி மீள் வகைப்படுத்துமாயின், அதன் சீர்மதிப்பு பெறுமதி மீள் வகைப்படுத்தல் திகதியில் அளவிடப்படுகின்றது. நிதியியல் சொத்தின் முன்னைய கடன் கழிப்பு செலவிற்கும் சீர்மதிப்பு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றன. விளைவு வட்டி வீதமும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அறவீடும் மீள் வகைப்படுத்தலின் விளைவாக சீர் செய்யப்படுவதில்லை

**இனங்காணாமை**

நிதியியல் சொத்தொன்று பின்வரும் சந்தர்ப்பங்களின் போது இனங்காணப்படுவதில்லை

- சொத்தில் இருந்தான காசுப்பாச்சல் கிடைப்பதற்கான உரிமைகள் காலாவதியாதல்.
- "கடந்துசெல்லல்" ஒப்பந்தம் ஒன்றின் கீழ் முக்கிய தாமதம் இன்றி மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கான சொத்தில் இருந்து காசுப்பச்சல்களை பெறுவதற்கு அல்லது கிடைக்கப்பெற்ற காசுப்பாச்சல்களை முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடு ஒன்றினை ஊகித்துள்ள போது கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ளது அத்துடன் ஒன்றில்

(அ) சொத்தின் கணிசமாக அனைத்து இட நேர்வுகளையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி மாற்றம் செய்து இருக்கின்றது

அல்லது

(ஆ) சொத்தொன்றின் கணிசமாக அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி இடமாறறவோ அன்றில் பிடித்துவைத்தில்லாமல், ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றம் செய்துள்ளது.

சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி அதன் உரிமைகளை கைமாற்றம் செய்துள்ள போது அல்லது கடந்துசெல்லல் ஒழுங்கொன்றினை கைச்சாத்திட்டுள்ள போது அத்துடன் சொத்தினது கணிசமான அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் மாற்றம் செய்தோ அன்றில் பிடித்து வைத்தோ அன்றி கட்டுப்படுத்தலினை மாற்றம் செய்தோ இல்லாத போது சொத்தானது கம்பனி அதில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது என்ற ரீதியில் இனம்காணப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பத்தில் கம்பனியானது இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் இனங்காண்கின்றது. மாற்றம் செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் கம்பனி பிடித்துவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையொன்றில் அளவிடப்படுகின்றன.

மாற்றல்செய்யப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதமொன்றின் வடிவினை பெற்றுக்கொள்கின்ற தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் அடிப்படை கொண்டு செல்லும் தொகையின் குறைவான மட்டத்தில் அளவிடப்படுவதுடன் மீள்கொடுப்பனவிற்காக கம்பனி வேண்டப்படக்கூடிய ஆகக்கூடிய பிரதிபலன் தொகையிலும் அளவிடப்படுகின்றது

**நிதியியல் சொத்துகளின் சேதஇழப்பு**

நிதியியல் சொத்தொன்று அல்லது நிதியியல் சொத்துகளின் குழுமமொன்று, சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் இடம்பெற்ற ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக (ஏற்பட்ட "இழப்பு நிகழ்வு") மற்றும் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச்சொத்தின் அல்லது நிதிச்சொத்துக்களின் குழுமத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் மீது அவ்விழப்பு நிகழ்வு தாக்கமொன்றினைக் கொண்டுள்ளது என பொருன்மையான மதிப்பிழப்புச் சான்று காணப்படுமெனில், அதன் போது மாத்திரம் மதிப்பிழந்ததாக கருதப்படுகின்றது. மதிப்பிழப்பு சான்றானது கடன்படுநர் அல்லது கடன்படுநர் குழுமமொன்று குறிப்பிடத்தக்க நிதிக்கஷ்டத்தினை அனுபவிக்கின்ற, தவணை தவறுகின்ற அல்லது வட்டியினை அல்லது முதன்மை கொடுப்பனவுகளை தவணை தவறுகின்ற அல்லது கடமை தவறுகின்ற, அவர்கள் வங்குரோத்து அடைகின்ற அல்லது ஏதேனும் நிதியியல் மறுசீரமைப்பு நிலையடைகின்ற மற்றும் அடைகின்ற குறிகாட்டிகளையும் தவணை தவறுவதன் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நிலுவைகள் அல்லது பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் அளவிடப்பட்ட வீழ்ச்சியொன்று காணப்படுகின்றது. என்ற அவதானிக்கத்தக்க தரவுக்குறிக்காட்டிகள் காணப்படுகின்றவற்றை உள்ளடக்கலாம்.

ஏனைய வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவைகளுக்காக, எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு இழப்புகளை கணிப்பிடுவதில் எளிமைப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை கம்பனி பிரயோகிக்கின்றது. ஆகையனால், எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இடர்நேர்வில் மாற்றங்களை கம்பனி கண்டுபிடிப்பதில்லை ஆனால், அதற்குப் பதிலாக, ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் அடிப்படையில் இழப்பு ஒதுக்கீட்டை இனங்காண்கின்றது. பொருளாதாரச் சூழலுக்கான முன்னோக்கி எதிர்பார்க்கும் காரணிகளுக்காக சீர்செய்யப்பட்ட அதன் வரலாற்று கொடுகடன் இழப்பு அனுபவத்தில் காணப்படும் ஏற்பாட்டு உருவக அணியை கம்பனி தாபித்துள்ளது.

### 2.5.5.2 நிதியியல் பொறுப்புகள்

கம்பனியின் நிதியியல் பொறுப்புகளானவை வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை, தொடர்புடைய தரப்பினருக்கான நிலுவை, வங்கி மேலதிகப் பற்றுகள் மற்றும் வட்டியுடைய கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

**ஆரம்ப இனங்காணலும் அளவீடும்**

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இன் நோக்கெல்லையினுள் நிதியியல் பொறுப்புகளானவை இலாபம் அல்லது நட்டம் ஊடாகசீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள நிதியியல் பொறுப்புகள், கடன் மற்றும் கடனாக்கங்கள் அல்லது பொருத்தமானவாறு செயல்திறன்மிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக நியமிக்கப்பட்ட பெறுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலினை அதன் ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கின்றது.

அனைத்து நிதியியல் பொறுப்புகளும் ஆரம்பத்தில் சீர்மதிப்புப்பெறுமதியில் இனங்காணப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் தொடர்பில் பெறுமதிக் குறைப்புச் செலவில் கொண்டு செல்லபடுகின்றன. இது நேரடியாக சாட்டத்தக்க செலவுகளை உள்ளடக்குகின்றது. ஆரம்ப சீர்மதிப்புப் பெறுமதிக்கும் உத்தேசத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு தொழிற்படுத்தல் வாடகை வருமானத்தின் கூறொன்றாக உள்ளடக்கப்படுவதுடன் ஏற்புடைய காலப்பகுதி மீது நேர்கோட்டு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

**தொடர்ந்துவருகின்ற அளவீடுகள்**

நிதியியல் பொறுப்புகளின் அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கின்றது:

**அ) கடன்களும் கடனாக்கங்களும்**

ஆரம்ப இனங்காணலின் பின்னர் வட்டியுடைய கடன்களும் கடனாக்கங்களும் விளைவு வட்டிவீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதி குறைப்புச் செலவில் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுகைகளும் இழப்புகளும், பொறுப்புகள் இனங்காணாமையின் போது அத்துடன் விளைவு வட்டிவீத முறை பெறுமதி குறைப்புச் செயன்முறையினூடகவும் வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

கடன்கழிப்புச் செலவானது கையேற்பின் மீதான ஏதேனும் கழிவையும் அல்லது கட்டுப்பணத்தையும் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றான கட்டங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு கணிக்கப்படுகிறது. விளைவு வட்டிவீத கடன்கழித்தலானது வருமானக்கூற்றில் நிதிச்செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றது.

**இனங்காணாமை**

பொறுப்பின் கீழுள்ள கடப்பாடு நிறைவேற்றப்படுகின்ற போது அல்லது இரத்துச் செய்கின்ற போது அல்லது காலாவதியாகின்ற போது நிதியியல் பொறுப்பொன்று இணங்காணப்படுவதில்லை. நடைமுறையிலுள்ள நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளில் அதே கடன்வழங்குநரிடமிருந்து பதிலீடு செய்யப்படுகின்ற போது அல்லது தற்போது காணப்படுகின்ற பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமாக மாற்றியமைக்கின்ற போது அத்தகைய மாற்றம் அல்லது திருத்தம் மூலப்பொறிப்பின் இனங்காணாமையொன்றாகவும்புதிய பொறுப்பின் இனங்காணப்படுவதாகவும் கொள்ளப்படுவதுடன் தொடர்புடைய கொண்டுசெல்லும் தொகைகளிலுள்ள வேறுபாடு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றது.

**நிதியியல் சாதனங்களை எதிரீடுசெய்தல்**

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடுசெய்வதற்கு தற்போது அமுலாக்கத்தக்க சட்டரீதியான உரிமை காணப்படுகின்றபோது மற்றும் சொத்துகளும் பொறுப்புகளும் சமகாலத்தில் தேறுவதற்கு தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பனவுசெய்வதற்கு நோக்கமொன்று காணப்படுகின்றபோது நிதியியல் சொத்துகளும் பொறுப்புகளும் எதிரீடுசெய்யப்பட்டு தேறிய தொகை நிதியியல் நிலைக் கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன.

### 2.5.5.3 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவீட்டுத் திகதியன்று சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்கு முறையான கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்தொன்றினை விற்பனை செய்வதற்கு கிடைக்கப்பெறுகின்ற அல்லது பொறுப்பொன்றின் மாற்றலுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற விலையாகும். சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது பின்வருவனவொன்றில் இடம்பெறுகின்ற சொத்தினை விற்பனை செய்வதற்கான அல்லது பொறுப்பினை மாற்றுவதற்கான கொடுக்கல்வாங்கல் முன் ஊகத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்:

- சொத்துக்கான அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை

அல்லது

- சொத்துக்கான அல்லது பொறுப்புக்கான முதன்மைச் சந்தை இல்லாதவிடத்து மிகவும் அனுகூலமான சந்தை

முதன்மை அல்லது மிக அனுகூலமான சந்தையானது கம்பனி அணுகத்தக்கதாக இருக்க வேண்டும். சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது தமது அதிகூடிய பொருளாதார நலனுக்காக சந்தைப் பங்கேற்பாளர்கள் செயற்படுகின்றனர் என்பதனை ஊகிக்கின்ற சொத்தினை அல்லது பொறுப்பினை விலை குறிக்கின்றபோது சந்தைப் பங்கேற்பாளர்கள் பயன்படுத்துகின்ற ஊகங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

நிதியியல் அல்லாத சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு அதனை விற்பனைசெய்வதன் மூலம் பொருளாதார நலன்களை

ஈட்டுவதற்கான சந்தைப் பங்கேற்பாளரொருவரின் இயலுமையினைக் கருத்திற் கொள்கின்றது.

சூழ்நிலைக்கு பொருத்தமான விலைமதிப்பீட்டு நுட்பங்களை கம்பனி பயன்படுத்தப்படுவதுடன் இதற்காக சீர்மதிப்புப் பெறுமதியினை அளவிடுவதற்கு தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகள் பயன்பாட்டினை உச்சப்படுத்துகின்ற மற்றும் அவதானிக்க முடியாத உள்ளீடுகள் பயன்பாட்டை குறைகின்ற போதிய தரவுகள் கிடைக்கப் பெறுகின்றன.

நிதியியல் கூற்றுக்களில் சீர்மதிப்புப் பெறுமதி அளவிடப்பட்டுள்ள அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் மொத்தமாக சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகளுக்கு முக்கியமாக விளங்குகின்ற குறைந்த மட்ட உள்ளீட்டினை அடிப்படையாகக் கொண்ட பின்வருமாறு விவரிக்கப்படும் சீர்மதிப்புப்பெறுமதி படிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

- **மட்டம் 1 -** ஒரே மாதியான சொத்துகளுக்கு அல்லது பொறுப்புகளுக்கு செயற்பாடுமிக்க சந்தைகளில் குறிக்கப்பட்ட (சீர்செய்யப்படாத) சந்தை விலைகள்
- **மட்டம் 2 -** சீர்மதிப்புப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்கின்ற குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாக அல்லது நேரடியற்று அவதானிக்கப்படுகின்ற விலைமதிப்பீட்டு நுட்பங்கள்
- **மட்டம் - 3** சீர்மதிப்புப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்குகின்ற குறைந்தமட்ட உள்ளீடானது சீர்மதிப்புப்பெறுமதி வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக அவதானிக்கமுடியதாகவுள்ள விலைமதிப்பீட்டு நுட்பங்கள், சொத்தின் அல்லது பொறுப்பின் தன்மை, பண்புகள் மற்றும் இடர்நேர்வுகள் மற்றும் மேலே விளக்கப்பட்டவாறு சீர்மதிப்புப் பெறுமதி ஒழுங்குமுறை என்பவற்றின் அடிப்படையில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வகுப்புகளை கம்பனி நிர்ணயிக்கின்றது.

### 2.5.6 பதிவேட்டுப் பொருட்கள்

பாவணைக்குதவாத மற்றும் மெதுவாக நகருகின்ற பொருட்களுக்கு உரிய ஒதுக்கீடுகளை மேற்கொண்ட பின்னர் குறைந்த செலவிலும் நிகர தேறத்தக்க பெறுமதியிலும் விலைமதிப்பிடப்படுகின்றன. நிகரதேறத்தக்க பெறுமதி என்பது நிறைவு செய்வதற்கு மதிப்பிட்ட செலவு மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு என்பவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் பதிவேட்டு பொருட்களை விற்பனை செய்யக்கூடிய விலையாகும்.

பதிவேட்டுப் பொருட்களின் தற்போதைய அமைவிடத்திற்கு மற்றும் நிலைமைகளுக்கு அவற்றைக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட செலவுகள் பின்வரும் செலவுச் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றன:

| | |
|---|---|
| திருத்தவேலைகளுக்கான - நுகர் பொருட்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள் பொதுவான வன் பொருட்கள் | நிறைவேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள் - | உண்மையான கொள்வ-னவுச் செலவில் |

### 2.5.7 ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

**செலவு மாதிரி**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், நாளாந்த நன்நிலைப்படுத்தல் செலவுகள் நீங்கலாக, ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வினையும் பெறுமதியில் ஒன்றுசேர்ந்த மதிப்பிழப்பினையும் கழித்து கொள்விலையில் குறிப்பிடப்படுகின்றன. அத்தகைய கிரயங்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பாகத்தினை மாற்றீடு செய்கின்றபோது ஏற்படுகின்ற செலவு, இணங்காணுதல் மூலப்பிரமாணத்தினை நிறைவு செய்யுமாயின், உள்ளடக்கப்படுகின்றது.

**மீள் விலைமதிப்பீட்டு மாதிரி**

காணியும் கட்டடங்களும், மீள்விலைமதிப்பீட்டிற்குப் பிந்திய திகதியில் கட்டிடங்களின் ஒன்றுசேரந்த பெறுமாத்தேய்வு மற்றும் சேதஇழப்பு குறைபாடுகள் கழிக்கப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. மீள்விலைமதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் சீர்மதிப்புப் பெறுமதி, அதன் கொண்டுசெல்லும் பெறமதியியல் முக்கியமான வேறுபாடு ஏற்படாதவாறு உறுதிசெய்ய, விலைமதிப்பீடுகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன.

ஏதேனும் மீள்விலைமதிப்பீட்டு மிகை, வருமானக் கூற்றில் முன்னர் இனங்காணப்பட்ட அதேசொத்தின் மீள்விலைமதிப்பீட்டு குறைவொன்றினை அது திரும்பல் செய்கின்ற ரீதியிலானவை தவிர, அச்சந்தரப்பத்தில் அதிகரிப்பு வருமானக் கூற்றலி இனங்காணப்படுகின்றது, அததகைய மிகை பங்குரிமை மூலதனத்தில் சொத்து மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கிற்கு வரவுவைக்கப்படுகின்றது. மீள்விலைமதிப்பீட்டு பற்றாக்குறையானது, சொத்து மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கில் இனங்காணப்பட்ட அதே சொத்தில் ஏற்கனவே காணப்படுகின்ற மிகையொன்றினை அது எதிரீடு செய்கின்ற ரீதியிலானவை தவிர வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

ஒரு சொத்தை விற்றுவிடும் போது, அந்தச் சொத்துடன் தொடர்புடைய ஏதேனும் மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கு பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மாற்றல் செய்யப்படுகின்றது.

**முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி**

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணியானது பொறுப்பேற்கப்பட்டுள்ள மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இன்னும் பூர்த்தியடையாத நிலையிலுள்ள பணி மீது கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து தொகைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

காணியானது முடிவுற்ற ஆயுளை கொண்டிருப்பதாக கருதப்படுகின்றமையினால் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. தேய்மானமானது பயன்பாட்டுக்கு கிடைக்கப்பெறுகின்ற திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற

அத்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது அவற்றின் எஞ்சியுள்ள பெறுமதிகளுக்கு ஒவ்வொரு சொத்தினதும் செலவினை ஒதுக்கீடு செய்வதற்காக நேர்கோட்டு முறை அடிப்படையில் கணிக்கப்படுகின்றது. சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதன் மீது சொத்தானது இனங்காணப்படாத திகதியில் பெறுமானத் தேய்வு நிறுத்தப்படுகின்றது.

சொத்தினது எஞ்சியுள்ள பெறுமதிகள், பயன்பாடுமிக்க ஆயுட்காலங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வுசெய்யப்பட்டு ஏற்புடைதாயின் சீர்செய்யப்படும்.

சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட மீளஅறவிடத்தக்க தொகையினை விட அது கொண்டுள்ள தொகை பெரிதாகவிருப்பின் சொத்து கொண்டுள்ள தொகையானது உடனடியாக பெறுமதி குறைக்கப்படும்.

கொண்டுள்ள தொகையுடன் பெறுகைகளை ஒப்பிடுவதன் மூலம் விற்பனைகள் மீதான வருவாய்களும் இழப்புகளும் நிர்ணயிக்கப்படுவதுடன் வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.5.8 அருவச் சொத்துக்கள்

**அ) தொழில்முயற்சி வளத்திட்டமிடல் (ERP) முறைமையும் உரிமக் கட்டணங்களும்**

கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் பிரயோகங்களின் உரிமங்களுடன் தொடர்புடைய செலவுகளை உரிமக்கட்டணங்கள் உள்ளடக்குகின்றன. உரிமக்கட்டணங்கள் திரண்டபெறுமதிக்குறைப்பினை கழித்து கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. பெறுமதிகுறைத்தலானது 5 வருடங்கள் கொண்ட அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது உரிமங்களின் செலவினை ஒதுக்கீடு செய்வதற்கு நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

### 2.5.9 காசும் காசுக்கு சமமானவையும்

காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பது கையில் உள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் அறிந்த பணத்தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய அத்துடன் பெறுமதி மாற்றத்தின் முக்கியமற்ற இடருக்குட்படுகின்ற குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் என வரையறை செய்யப்பட்டவையாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசும் காசுக்கு சமமானவையும் கையுள்ள காசு, நிலுவையாகவுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களைக் கழித்து வங்கியிலுள்ள வைப்புக்கள், ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மூன்று மாதங்கள் அல்லது அதனைவிடக் குறைந்த அடிப்படை முதிர்ச்சிகளுடனான முதலீடுகளும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்படுகின்றன.

### 2.5.10 நிதியமல்லாத சொத்துக்களின் சேதஇழப்பு

வரையறையற்ற பயன்பாடுமிக்க ஆயுட்காலமொன்றினைக் கொண்டுள்ள சொத்துக்கள் பெறுமதி குறைப்புக்கு உட்படுவதில்லை என்பதுடன் பெறுமதி குறைப்புக்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றன. பெறுமதிக்குறைப்பிற்கு உட்படுகின்ற சொத்துக்கள் அவை கொண்டு செல்கின்ற தொகை அறவிடப்பட முடியாமலிருக்கலாம் என குறித்துக் காட்டுகின்ற சூழ்நிலைகளின் நிகழுகின்றபோது அல்லது மாற்றங்களின் போதுமதிப்பிழப்பிற்காக மீளாயப்படுகின்றன. பெறுமதி இழப்பு நட்டமொன்று சொத்தின் கொண்டு செல்லுகின்ற தொகை அதன் அறவிடத்தக்க தொகையினை விஞ்சுகின்ற தொகைக்காக பெறுமதி இழப்பொன்று இனங்காணப்படுகின்றது. மீளஅறவிடத்தக்க தொகையானது விற்பதற்கான செலவுகள் மற்றும் பயன்பாட்டுப் பெறுமதி என்பவற்றைக் கழித்து சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியின் உயர்வானதாகும். மதிப்பழிழத்தலினை கணிப்பிடும் நோக்கத்திற்காக சொத்துக்கள் ஆக்குறைந்த மட்டங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதற்காக வேறாக இனங்காணத்தக்க காசுப்பாய்ச்சல்கள் காணப்படுகின்றன (பணம் ஈட்டுகின்ற அலகுகள்).

### 2.5.11 ஏற்பாடுகள்

கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்குகின்ற வள வெளிப்பாய்ச்சலொன்று தேவைப்படும் என்ற நிகழ்வு காணப்படுகின்றவிடத்து மற்றும் கடப்பாட்டின் தொகை பற்றி நம்பத்தகுந்த மதிப்பீடொன்றினை மேற்கொள்ளக்கூடியதாகவிடத்து கடந்த காலத்தின் விளைவொன்றாக கம்பனியானது தற்கால கடப்பாடொன்றினை (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கொண்டுள்ளபோது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏறடபாடு சிலவற்றை அல்லது அனைத்தையும் மீள்நிரப்பப்படுவதற்கு கம்பனி எதிர்பார்க்கப்படுகின்றபோது மீள்நிரப்பலானது தனியான சொத்தொன்றாக இனங்காணப்படுகின்றது ஆயினும் மீள்நிரப்பலானது தோற்றநிலையில் நிச்சயமானதாக இருக்கும்போது மாத்திரமாகும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புடைய செலவானது ஏதேனும் மீள்நிரப்பலினை கழித்து வருமானக்கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பணத்தின் காலப்பெறுமதித் தாக்கம் முக்கியமானதாயின் பணத்தின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்ற வரிக்கு முந்திய வீதமொன்றில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அத்துடன் பொருத்தமானவிடத்து, பொறுப்பிற்கான குறித்துரைத்த இடர்நேர்வுகளையும் கழிப்பதன் மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. கழிவுசெய்தல் பயன்படுத்துகின்றவிடத்து, காலப்போக்கின் காரணமாக ஏற்பாட்டிலுள்ள அதிகரிப்பானது வட்டிச் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

## 2.6 ஊழியர் நலன்கள்

**அ) வரையரை செய்யப்பட்ட ஊழியர் நலன்கள் - பணிக்கொடை**

கம்பனியானது ஒவ்வொரு ஆண்டும் "எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறை" இனைப்பைப்பயன்படுத்தி கணிப்பீட்டாளரின் ஆலோசனையுடன் வரையரைசெய்யப்பட்ட திட்டமொன்றான பணிக்கொடைக் கடப்பாட்டின் வாக்குறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய நலப்பெறுமதிகளை அளவிடுகின்றது. கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும், அதுதோன்றுகின்ற காலத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன. பொறுப்பு இனங்காணப்படுவதில்லை.

**கணிப்பீட்டு வாய்க்களையும் இழப்புகளையும் இனங்காணுதல்**

கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும் அவை தோன்றுகின்ற வருடத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

**ஆ) வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

கம்பனியானது வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றினையும் தொழிற்படுத்துகின்றது. வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டமொன்றுக்கு செலுத்தத்தக்க பங்களிப்பானது ஊழியர்கள் மூலம் கம்பனிக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான பங்கொன்றாகவுள்ளதுடன் “ஆளணிச் செலவுகள்” இன் கீழ் செலவொன்றாக பதிவுசெய்யப்படுகின்றது. கொடுப்பனவு செய்யப்படாத பங்களிப்புகள், பொறுப்பொன்றாகப் பதிவுசெய்யப்படுகின்றன.

கம்பனியானது பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றது.:

**ஊழியர் சேமலாப நிதியம்**

கம்பனியும் ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தில் (மேலதிக நேரம் நீங்கலாக) முறையே 15% மற்றும் 10% இனை பங்களிக்கின்றன.

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தின் மேலதிக நேரம் நீங்கலாக 3% இனை கம்பனி பங்களிக்கின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பேணப்படுகின்றது.

**இ) மருத்துவ நன்மைத் திட்டம்**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் ஊழியர்களுக்கான மருத்துவ நன்மைத்திட்டமானது அலியான்ஸ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட் மூலம் முகாமைசெய்யப்படுகின்றது. கம்பனி மூலமான காப்புறுதிச் செலவு ஆண்டின்போது செலவொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

## 2.7 சுய காப்புறுதி ஒதுக்கு

2023 டிசம்பர் 6 இன் 02/241 ஆம் சபைத தீர்மானத்திற்கமைவாக பிடித்துவைக்கப்பட்ட உழைப்பில் இருந்து ரூ. 2.5 பில்லியன் ஒதுக்கீடுசெய்து சுய காப்புறுதி ஒதுக்கு தாபிக்கப்பட்டது. நிதியத்தின் தன்மையும் நோக்கும் ஏற்கனவேயுள்ள ஏதனும் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்பீடுசெய்யப்படாத சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆதனங்களுக்காக எதிர்காலத்தில் ஏதெனும் முக்கிய இழப்பின் அல்லது சேதத்தின் (விபத்து அல்லது இயற்கை அனர்த்தம் காரணமாக) ஏட்டுப் பெறுமதியை எதிரீடுசெய்வதாகும். மேலும், சபைத் தீர்மானத்திற்கமைவாக, நிதியம் உருவாக்கப்பட்ட ஆண்டிலிருந்து மொத்த மீள்விலைமதிப்பீடு செய்யப்பட்ட நிலையான சொத்துகளின் 0.1% பிடித்துவைக்கப்பட்ட உழைப்பிலிருந்து சுயகாப்புறுதி நிதியத்திற்கு மாற்றல்செய்யப்பட வேண்டும்.

## 2.8 காப்புறுதி ஒதுக்கு நதியத்தில் முதலீடு

2023 டிசம்பர் 6 இன் 02/241 ஆம் சபைத தீர்மானத்திறகமைவாக ஏற்கனவேயுள்ள ஏதனும் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்பீடுசெய்யப்படாத சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆதனங்களை மீள்கொள்வனவுசெய்வதற்கு அல்லது மீளக்கட்டியெழுப்புவதற்கு வெளிவாரியாக முதலிடப்பட்ட நிதியங்களை கட்டியெழுப்பும் நோக்கத்திற்காக ரூ. 1 பில்லியன் முதலீடுசெயயப்பட்டுள்ளது. மேலும் சபைப் பத்திரத்திற்கமைவாக அத்தகைய முதலீடு மீதான வட்டி மீள் முதலீடு செய்யப்பட வேண்டும்.

## 2.9 பங்குடமையாளர்கள் ஒப்பந்தம் மற்றும் பங்குவிற்பனை கொள்வனவு உடன்படிக்கை – பொதுப்பயன்பாட்டாளர் வசதிகள் காலாவதியாதல்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா இந்தியன் ஓயில் கம்பனி பீஎல்சி மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் ஆகியவற்றுக்கிடையிலான பங்குடமையாளர்கள் உடன்படிக்கையும் - பொதுப்பாயன்பாட்டாளர் வசதிகள், 2008 டிசெம்பர் 31 அன்று காலாவதியாகியிருந்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட் ஆகியவற்றுக்கிடையிலான இரு தரப்பு உடன்படிக்கை 2022 இல் கைச்சாத்திடப்பட்டது. லங்கா இந்தியன் ஓயில் கம்பனி பீஎல்சி இடையிலான ஒப்பந்த மீள்புதுபித்தல் இன்னும் இறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வருமானமும் செலவினங்களும் சொல்லப்பட்ட நியதிகளையும் கம்பனியின் பணிப்பாளர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள அதனைத் தொடர்ந்த ஏதேனும் மாற்றங்களையும் கருத்திற் கொண்டதன் பின்னர் இந்நிதியியல் கூற்றுகளில் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 2024 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கானது

| | | 2024 | 2023 |
|---|---|---|---|
| **3.** | **வருமானம்** | ரூ. | ரூ. |
| **3.1** | **செயன்முறைப்படுத்தல் வருமானம்** | | |
| | முனைய வருமானம் | 11,811,422,012 | 7,426,004,892 |
| | தொழிற்படுத்தல் இலாபம் | 2,737,175,974 | 2,444,142,774 |
| | | 14,548,597,986 | 9,870,147,666 |
| **3.2** | **சேவைகளை வழங்குதல்** | | |
| | போக்குவரத்து வருமானம் | 4,350,277,702 | 279,883,918 |
| | | 4,350,277,702 | 279,883,918 |
| | **மொத்த வருமானம்** | 18,898,875,688 | 10,150,031,584 |
| **4.** | **ஏனைய தொழிற்படுத்தல் வருமானம்** | | |
| | அலுவலர் கடன் மற்றும் எனையவை மீதான வட்டி | 734,055,020 | 836,118,394 |
| | ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 26,974,090 | - |
| | வாடகை வருமானம் | 22,248,979 | 11,655,742 |
| | விடுவிப்பு கட்டணங்கள் | 5,700,000 | 2,080,000 |
| | ஆய்வுகூடப் பரிசோதனைக் கட்டணங்கள் | 182,885,062 | 264,651,958 |
| | தனியார் பவுசர் சாரதிகளுக்கு/சுமையார்ளுக்கான பயிற்சி | 6,004,047 | 2,790,179 |
| | கழிவு விற்பனைகள் | 6,840,220 | 20,167,487 |
| | தீயணைப்பு கருவிகளின் சேவை | 39,954 | 838,489 |
| | அளவீட்டுக் கட்டணங்கள் | 7,229,867 | 6,490,712 |
| | நானாவித வருமானம் | 17,736,072 | 13,312,496 |
| | சுற்றுலாவிடுதி பங்களா வருமானம் | 728,426 | 684,625 |
| | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புகள் | 4,807,153 | 2,712,584 |
| | நீண்டகால கடன் கொடுனர்களின் மீதி நிலுவையின் பதிவழிப்பு | - | 18,754,533 |
| | | 1,015,248,890 | 1,180,257,199 |

| | | 2024<br>LKR | 2023<br>LKR |
|---|---|---|---|
| **4.1.** | **மீளப்பெறமுடியாத கடன்களின் பதிவழிப்பு** | - | 7,734,143 |
| | | - | 7,734,143 |

| | | 2024<br>LKR | 2023<br>LKR |
|---|---|---|---|
| **5.** | **நிதி வருமானம்** | | |
| | ரெபோ முதலீடுகளின் மீதான வட்டி | 289,210,962 | 65,107,995 |
| | வைப்புகள் மீதான வட்டி | 44,504,222 | 241,726,510 |
| | | 333,715,184 | 306,834,505 |

| | | 2024<br>LKR | 2023<br>LKR |
|---|---|---|---|
| **6.** | **வரிக்கு முந்திய இலாம்**<br>*அறவிடுதல்/வரவு வைத்தலுக்கு பின்னர் குறிக்கப்பட்டது* | | |
| | **நேரடிச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டவை** | | |
| | தனிப்பட்ட செலவு | 2,975,322,768 | 2,964,376,836 |
| | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு | 565,552,296 | 666,505,693 |
| | **நிருவாகச் செலவில் உள்ளடக்கப்பட்டவை** | | |
| | பணிப்பாளர்களின் வேதனாதிகள் | 8,672,815 | 6,205,989 |
| | பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள் | 2,958,800 | 1,992,500 |
| | ஆளணிச் செலவு | 3,372,788,449 | 3,396,891,201 |
| | வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு ஆண்டுக்கான விதிப்பனவு | 338,268,907 | 300,507,148 |
| | கணக்காய்வுக் கட்டணம் | 1,820,000 | 2,315,139 |
| | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு | 149,580,376 | 164,279,975 |
| | ஆண்டுக்கான மதிப்புக் குறைப்பு விதிப்பனவு | 3,920,990 | 27,575,201 |
| | ஊழியர் கடனுக்கான பற்றாக்குறைக்கான கொடுப்பனவுகள் /(திருப்புதல்கள்) | 24,846,278 | (4,917,710) |
| | பதிவேட்டுப் பொருள் ஏற்பாடு | 2,805,711 | 1,593,413 |

**7.** **வரிச் செலவுகள்**

2024 டிசம்பர் 31 மற்றும் 2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுகளுக்கான வருமான வரிச் செலவுகளில் பிரதான கூறுகள் பின்வருமாறு

| | | 2024<br>LKR | 2023<br>LKR |
|---|---|---|---|
| **7.1.** | **வருமானக் கூற்று** | | |
| | நடப்பு வருமான வரி | | |
| | நடப்பு வரிச் செலவு | 1,407,270,932 | - |
| | பிற்போடப்பட்ட வரி | | |
| | பிற்போடப்பட்ட வரிவிதிப்பு/(வரவு) (குறிப்பு 08) | 209,557,477 | (351,104,528) |
| | **நிதிக்கூற்றில் அறிக்கையிடப்பட்ட வருமான வரிச் செலவு/(வரவு)** | 1,616,828,409 | (351,104,528) |

**7. வரிச் செலவுகள் தொடர்ச்சி**

**7.1. 2023 டிசம்பர் 31 இல் மற்றும் 2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுகளுக்காக நியதிச்சட்ட வரி வீதத்தினால் கணக்கீட்டு இலாபத்தின் வரிச் செலவுகள் மற்றும் உற்பத்திகளுக்கு இடையிலான இணக்கம் பின்வருமாறு:**

| | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|
| வரிக்கு முன்னர் கணக்கீட்டு இலாபம் | 4,998,057,255 | (314,493,117) |
| ஒன்று சேர்க்கப்பட்ட அனுமதிக்கப்படாத விடயங்கள் | 2,467,319,988 | 1,277,049,302 |
| ஒன்று சேர்க்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட விடயங்கள் | (2,102,574,708) | (1,526,955,189) |
| | 5,362,802,535 | (564,399,004) |
| வட்டி வருமானம் | 478,459,444 | 405,386,690 |
| மொத்த நியதிச்சட்ட வருமானம் | 5,841,261,979 | (159,012,314) |
| கழிக்குக: பயன்படுத்தப்பட்ட முன்கொண்டு செல்லப்பட்ட வரி இழப்புகள் | - | - |
| வரிவிதிக்கத்தக்க இலாபம் /(நட்டம்) | 5,841,261,979 | (159,012,314) |
| வரிவிதிக்கத்தக்க வருமானத்திற்கான வருமான வரி | 1,407,270,932 | - |
| **நடப்பு வருமான வரிச் செலவுகள்** | 1,407,270,932 | - |

**8. பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்**

**8.1. பிற்போடப்பட்ட வரி**

**பின்வருவனவற்றுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், பொறுப்புகள் மறறும் வருமான வரி**

| | நிதியியல் நிலைக் கூற்று | | அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று | | ஏனைய அனைத்தையம் உள்ளடக்கிய வருமானக்கூற்று | |
|---|---|---|---|---|---|---|
| | 2024<br>ரூ. | 2023<br>ரூ. | 2024<br>ரூ. | 2023<br>ரூ. | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
| **பிற்போடப்பட்ட வரி பொறுப்பகள்** | | | | | | |
| வரி நோக்கங்களுக்கான மூலதனச் ஒதுக்கீடுகள் | 2,592,182,748 | 2,478,892,824 | 113,289,924 | (4,384,202) | - | - |
| அருவச் சொத்துக்கள் | 6,362,437 | 476,783 | 5,885,654 | (7,112,388) | - | - |
| மீள்விலைமதிப்பீட்டு இலாபம்-காணி, கட்டடம் | 7,229,177,532 | - | - | - | 7,229,177,532 | - |
| | 9,827,722,717 | 2,479,369,607 | | | | |
| **பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள்** | | | | | | |
| பொருட் பதிவேடுகள் | 6,442,086 | 5,600,373 | (841,713) | (478,024) | | |
| ஏற்பாடுகள் | 168,387,633 | 8,447,257 | (159,940,376) | 1,138,675 | | |
| | 572,093,429 | 575,670,391 | (47,261,970) | (16,683,774) | 50,838,932 | (173,824,761) |
| வரி இழப்புகளில் இருந்து தாக்கம் | - | 323,584,815 | 323,584,815 | (323,584,815) | - | |
| மீள்விலைமதிப்பீட்டு நட்டம்- காணி, கட்டடம் | 25,158,857 | | (25,158,857) | | | |
| | 772,082,005 | 913,302,836 | | | | |
